கோகுலம்

GOKULAM

நவம்பர் '87 ரூ. 3.

மேரி கியூரி

உயிர்களிடத்தில் அன்பு வேணும் தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். —பாரதியார்.

கோகுலம்

1987 நவம்பர் மாத இதழ்
மலர்: 5 இதழ் 10
தனிப்பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—
கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா.

புகைப்படம்: எம். எம். இப்ராஹீம்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

நம் பாரத நாட்டின் பிரதமராகப் பதினெட்டு ஆண்டுகள் பணி புரிந்தவர், மகாத்மா காந்தியின் முதல் சீடர் எனப் போற்றப்பட்டவர், காந்திஜியாலே, 'என் அரசியல் வாரிசு' என்று அழைக்கப்பட்டவர் பண்டித ஜவாஹர்லால் நேரு.

'நேரு மாமா,' 'நேரு மாமா' என்று நீங்களெல்லாரும் ஆசையோடு அழைக்கும் அந்த மனிதருள் மாணிக்கத்தின் பிறந்த நாள் நவம்பர் 14 இல் வருகிறது. அந்த நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

அவர் பிறந்தது 1889 ஆம் ஆண்டு. இன்னும் இரண்டு ஆண்டுகளில், அவர் நம் நாட்டிலே அவதரித்து நூறு ஆண்டுகள் நிறைவடைகின்றன. வருகிற நவம்பர் மாதத்திலிருந்தே அவரது நூற்றாண்டு விழாவை நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நீங்களும் உங்கள் பள்ளிகளிலும், சங்கங்கள் வைத்திருந்தால், அந்தச் சங்கங்கள் மூலமாகவும் நேரு மாமாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவீர்கள் என நம்புகிறோம்.

1983 செப்டம்பர் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதத்திலும் அந்த மாதம் பிறந்த தலைவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள் முதலியோரில் இருவரது முழுப்பக்கப் படங்களை வெளியிட்டு அவர்களைப் பற்றிய குறிப்புகளையும் தந்து வருகிறோம். 'அக்டோபரில் பிறந்த லால் பகதூர் சாஸ்திரியின் படத்தை ஏன் வெளியிடவில்லை? நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையின் படத்தை ஏன் வெளியிடவில்லை?' என்று சிலர் எழுதிக் கேட்கிறார்கள். அவர்கள், அப்பெரியோர்களின் மேல் கொண்டுள்ள அன்பைப் பாராட்டுகிறோம். அதே சமயம், அப்பெரியவர்களின் படங்களை முந்திய ஆண்டுகளிலே வெளியிட்டுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கோகுலத்தில் வெளிவரும் இப்படங்களைப் பலர் தொடர்ந்து சேகரித்து ஆல்பமாகத் தயாரித்து வருகிறார்கள் என்பதை அறிய மகிழ்ச்சியாக உள்ளது. அவர்களது இந்த நல்ல முயற்சி பல வழிகளில் அவர்களுக்கு உதவியாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

—அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்

கௌரி புத்திரன்

சரஸ்வதி ராஜேந்திரன்

சிவ முரளி

பிருந்தாவனக் கதாசிரியர்கள்

கு. குகன்

இரா. வெங்கடகிருஷ்ணன்

பிருந்தாவனக் கவிஞர்

ஆ. காமராசு

மனிதருள் மாணிக்கம்

நேருஜியிடம் ஒரு சிறுவன் கையெழுத்துப் பெற்ற கதை

ஜானகி மணாளன்

குழந்தைகளே! நவம்பர் மாதம் பிறந்து விட்டால் உங்கள் பாடு படு குஷிதான்!

ஏன் இப்படிச் சொல்கிறேன் தெரியுமா?

இந்த மாதத்தில்தானே உங்களுடைய தினம் — அதாவது, 'குழந்தைகள் தினம்' வருகிறது! அதனால் தான் சொல்கிறேன்.

நவம்பர் 14 — இது நேருஜியின் பிறந்த நாள்.

அவர் குழந்தைகளை மிகவும் நேசித்தார். எனவேதான் அவருடைய பிறந்த தினம் உங்களுடைய தினமாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில், நேருஜியை நினைவு கூர்வது, நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இந்த எண்ணத்தோடுதான், நான் இப்போது, நேருஜியின் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சி ஒன்றை, உங்களுக்குக் கூறப் போகிறேன். அதுவும், உங்களைப் போன்ற ஒரு மாணவன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி!

ஒரு சமயம் நேருஜியைச் சந்திக்கப் பள்ளிக்கூட மாணவன் ஒருவன் வந்தான்.

நேருஜிக்குத்தான் குழந்தைகள் என்றால் மிகவும் பிரியமாயிற்றே!

எனவே, அவர் அவனை அருகில் அழைத்து, முதுகில் கையைப் போட்டு அணைத்தவாறு, 'நீ யார்? உன் பெயர் என்ன? எங்கு வசிக்கிறாய்? வாசிக்கிறாயா?' என்பன போன்ற விவரங்களை எல்லாம் கேட்டறிந்தார். அந்த மாணவனும் சற்றும் பயமின்றிப் பதில் அளித்தான்.

பிறகு அவன், ''மாமா, மாமா! உங்களிடமிருந்து எனக்கு ஒன்று வேண்டும்...'' என்றான்.

''என்ன வேண்டும் கேள்...'' என்றார் நேருஜி.

''மறுக்காமல் தரவேண்டும், 'சரி தானே?'' என்று நிபந்தனை விதித்தான் சிறுவன்.

ஒரு குழந்தை கேட்டு, மாமா இல்லை யென்று கூறி விடுவாரா? சொல்ல மாட்டார். எனினும்; அவர் நம்

நாட்டின் மிகப் பெரிய பொறுப்பில் உள்ளவராயிற்றே! சரி என்று சொல்லி விட்டுப் பிறகு மறுக்க முடியாதே!

எனவே, ''அப்படியா...? கேள். முடிந்தால் தருகிறேன்.''

உடனே மாணவன், ''உங்களால் கண்டிப்பாகக் கொடுக்க முடியும்... சரி என்று சொல்லுங்கள் மாமா...'' என்றான்.

''ம்... சரி... தருகிறேன்...'' என்றார் நேரு மாமா!

அந்த மாணவன் என்ன கேட்டான் தெரியுமா, குழந்தைகளே!

தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சின்னஞ்சிறு நோட்டுப் புத்தகத்தை எடுத்தான். நேருஜியிடம் நீட்டிய வாறு, ''மாமா, மாமா! இதில் எனக்கு உங்களுடைய ''ஆட்டோகிராஃப்'' வேண்டும்...'' என்றான்.

ஆட்டோகிராஃப் என்றால் என்ன என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

குறிப்பிடத்தக்க பெரிய மனிதர்களை நாம் சந்திக்கும்போது, அந்தச் சந்திப்பின் நினைவாக, ஒரு சிறிய நோட்டில் அவர்களுடைய கையொப்பத்தைத் தேதியுடன் பெற்று வைத்துக் கொள்கிறோம் அல்லவா? அதற்குத்தான் ஆட்டோகிராஃப் என்று பெயர். அதில் சிலர், நல்வாழ்த்துச் செய்திகளையும் எழுதிக் கையொப்பம் இடுவார்கள்.

நேருஜி மகிழ்ச்சியோடு அந்த நோட்டுப் புத்தகத்தை வாங்கினார். தன் பேனாவை எடுத்துப் பிரித்தார். மாணவன் காட்டிய பக்கத்தில் தன் கையொப்பத்தை இட்டுக் கொடுத்தார்.

மாணவனுக்கு வாயெல்லாம் பல்! அத்தனை மகிழ்ச்சி. அதைக் கையில் வாங்கிப் பார்த்தான். உடனே திடுக்கிட்டான். ஏன் தெரியுமா?

நேருஜி அதில் தன் கையொப்பம் மட்டுமே இட்டுக் கொடுத்திருந்தார். நல்வாழ்த்துக்கள் எதையும் எழுதவில்லை. அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

எனவே, நேருஜியைப் பார்த்து, ''என்ன மாமா நீங்கள்...! கையொப்பம் மட்டும் தானே போட்டுள்ளீர்கள்! 'ஷிபகாமனா ஸந்தேஷ்' — அதாவது நல்வாழ்த்துச் செய்தியும் எழுதிக் கொடுங்கள்'' என்றான்.

உடனே நேருஜி, ''ஓ...! அப்படியா...? கொண்டுவா.'' என்றவாறு மீண்டும் நோட்டை வாங்கித் தன் கையொப்பத்துக்கு மேலே அறிவுரை வாக்கியம் ஒன்றை எழுதிக் கொடுத்தார்.

அந்த அறிவுரை என்ன தெரியுமா?

'நீ எல்லாரையும் மதித்து நட... அப்போதுதான் எல்லாருடைய மதிப்பையும் நீ பெற முடியும்' — என்பது தான் அது.

நோட்டுப் புத்தகத்தை வாங்கிப் பார்த்த மாணவனிடம் மீண்டும் ஏமாற்றம். குறைப்பட்டுக்கொள்ளும் குரலில் சொன்னான். ''என்ன மாமா நீங்கள்... உங்கள் கையொப்பத்தின் கீழே 'தாரிக்' — அதாவது, தேதியிட்டுத் தர மறந்து விட்டீர்களே... 'தாரிக்' இட்டுக் கொடுங்கள் மாமா...'' என்றான்.

உடனே, நேருஜியிடம் ஒரு புன்முறுவல். மாணவனிடமிருந்து நோட்டைப் பெற்று, அதில் தனது கையொப்பத்துக்குக் கீழே வருடம், மாதம், தேதியை இட்டுத் திருப்பிக் கொடுத்தார்.

மாணவன் கையெழுத்துப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தான். உடனே

முன்னாலே போவது?

''இங்கே நிற்கிற பஸ்ஸிலே எந்த பஸ் முன்னாலே போகும்?''

''எல்லா பஸ்ஸுமே முன்னாலேதானே போகும்!''

— கட்டூர் கன்னியப்பன்

"என்டா ராஜா, கப்பல் கவிழ்ந்துட்ட மாதிரி கன்னத்தில் கையை வைச்சுக்கிட்டு உட்கார்ந்திட்டே?"

"நான் மழைத் தண்ணியிலே ஓடவிட்ட காகிதக் கப்பல் கவிழ்ந்து போச்சுடா!"

— பணிமால் தர்மலிங்கம்

அவனிடம் அதிர்ச்சி! ஆச்சர்யம்! ஏன் தெரியுமா, குழந்தைகளே?

அதில் நேருஜி, நல்வாழ்த்துச் செய்திகளை இந்தி மொழியிலும், தன் கையொப்பத்தை ஆங்கில மொழியிலும், அதற்குக் கீழே வருடம், மாதம் தேதியை உருது மொழி எழுத்துக்களிலும் எழுதியிருந்தார்.

"ஏன் மாமா இப்படி எழுதியிருக்கிறீர்கள்?" என்றான் அந்த மாணவன்.

அதற்கு நேருஜி என்ன சொன்னார் தெரியுமா! குழந்தைகளே?

'தம்பி! நீ எதை விரும்பிக் கேட்டாயோ, அப்படியே தான் நான் செய்தேன்' என்று பதிலளித்தார் நேரு மாமா.

மாணவனின் ஆச்சர்யம் மேலும் அதிகமாகியது.

"இப்படி மூன்று மொழிகளில் 'ஆட்டோகிராஃப்' எழுதிக் கொடுக்குமாறு, நானு உங்களை விரும்பிக் கேட்டேன்! இல்லையே மாமா...! என்றான் மாணவன்

அதற்கு நேருஜி. "ஆமாம் தம்பி! நீ தான் இப்படி என்னை எழுதச் சொன்னாய்... தம்பி! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். முதன் முதலில் நோட்டுப் புத்தகத்தை என்னிடம் கொடுத்ததும் 'ஆட்டோகிராஃப்' வேண்டும் என்று கேட்டாய். 'ஆட்டோகிராஃப்' என்பது ஆங்கில மொழிச் சொல். இல்லையா? எனவே நான் ஆங்கிலத்தில் கையொப்பம் இட்டுத் தந்தேன். அதன் பிறகு ஷிப காமனு ஸந்தேஷ் வேண்டும் என்று கேட்டாய்! 'ஷிபகாமனுஸந்தேஷ்' என்பது இந்தி மொழிச் சொல். ஆகவே நல்வாழ்த்துச் செய்தியை இந்தி மொழியில் எழுதினேன். அதன் பிறகு என்ன கேட்டாய்? 'என்ன மாமா நீங்கள்... உங்கள் கையொப்பத்தின் கீழே 'தாரிக்' எழுதித்தர மறந்து விட்டீர்களே! என்றாய். 'தாரிக்' என்பது எந்த மொழிச் சொல் தெரியுமா! உருதுச் சொல், ஆகவேதான் உருது மொழி எழுத்தில் தேதியைக் குறிப்பிட்டேன். ஆகவே நீ எது எதை எந்தெந்த மொழியில் கேட்டாயோ, அது அதை அந்தந்த மொழியில் எழுதிக் கொடுத்தேன்..." என்றார் நேருஜி!

மாணவன் சிரித்துக் கொண்டே, நேருஜியிடமிருந்து விடைபெற்றுச் சென்றான்.

குழந்தைகளே! இதிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொள்கிறீர்கள்!

இந்தியா ஒரு பெரிய நாடு. இங்கு 25 மாநிலங்கள் உள்ளன. இவை தவிர மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் சிலவும் உள்ளன. இங்கெல்லாம் வாழும் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசிவருகின்றனர்.

அவரவர்கள் தத்தமது தாய் மொழியை மட்டும் அறிந்திருந்தால் போதாது. பிறமொழியினருடன் பேசிப் பழக வேண்டிய சமயம் வரும் போது சிரமப்படுவார்கள்.

ஆகவே, எந்த ஒரு இந்தியனும், தனது தாய் மொழி தவிர, வேறு சில மொழிகளையும் நன்கு கற்றறிந்து பேசப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லையா?

நேருஜிக்கு அவ்வாறு பல மொழிகள் தெரிந்திருந்தது. அதனால் தான் அவரால் அந்த மாணவனின் ஆட்டோகிராஃப் நோட்டில் மூன்று மொழிகளில் எழுத முடிந்தது.

அதே போலக் குழந்தைகளே, நீங்களும் நமது தாய் மொழியாகிய தமிழை மிக நன்றாகப் படித்தறிவதுடன், ஆங்கிலம் மற்றும் வேறு சில மொழிகளையும் நன்றாகக் கற்று, அவற்றில் பேசவும் எழுதவும் திறமை உள்ளவர்களாக விளங்க முயற்சி செய்யுங்கள்.

என்ன, செய்கிறீர்களா?

மன்மணிக் கதைகள்



பேச்சும் செயலும்

வேட்டைக்காரர்கள் ஒரு நரியைத் துரத்திக் கொண்டு வந்தார்கள். வெகுதூரம் ஓடியும் நரியைப் பிடிக்க முடியவில்லை. ஆனாலும், வேட்டைக்காரர்கள் விடவில்லை. தொடர்ந்து ஓடினார்கள்.

வழியிலே ஒரு குடிசை இருந்தது. அதன் அருகிலே அந்தக் குடிசைக்குச் சொந்தக்காரரான விறகு வெட்டி, சில கட்டைகளை வெட்டிக் கொண்டிருந்தார்.

நரி திரும்பிப் பார்த்தது. வேட்டைக்காரர்கள் வெகு தூரத்தில் வருகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டது. உடனே, அந்த விறகு வெட்டியிடம் சென்று, "வேட்டைக்காரர்கள் என்னைத் துரத்தி வருகிறார்கள். உங்கள் குடிசைக்குள் ஒளிந்து கொள்ளட்டுமா? தயவு செய்து என் உயிரைக் காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சியது.

"சரி, நீ ஓடிப் போய் என் குடிசைக்குள் ஒளிந்து கொள். வேட்டைக்காரர்கள் கேட்டால், 'எனக்குத் தெரியாது' என்று சொல்லி விடுகிறேன்" என்றார் விறகு வெட்டி.

நரி உடனே ஓடிச் சென்று குடிசைக்குள் ஒளிந்து கொண்டது.

சிறிது நேரத்தில் வேட்டைக்காரர்கள் வந்தார்கள். விறகு வெட்டியிடம், "இந்தப் பக்கமாக ஒரு நரி வந்ததா?" என்று கேட்டார்கள்.

நரியா! நான் பார்க்கவில்லையே!" என்று விறகு வெட்டி உரத்த குரலில் கூறிவிட்டு, 'இதோ இந்தக் குடிசைக்குள்தான் ஒளிந்திருக்கிறது' என்பதை உணர்த்துவது போல் கையைக் காட்டிச் சைகை மூலம் தெரிவித்தார். ஆனால், அந்த வேட்டைக்காரர்களோ அவரது சைகையைப் புரிந்து கொள்ளாமல், மேலும் வேகமாக ஓடினார்கள்.

விறகு வெட்டி குடிசைப் பக்கமாகக் கையைக் காட்டிச் சைகை செய்து தெரிவித்ததை, குடிசையிலிருந்த ஒரு சிறிய ஓட்டை வழியாக நரி பார்த்துவிட்டது!

சிறிது நேரம் சென்றதும் நரி, "அப்பாடியோ! உயிர் பிழைத்தோம்!" என்று தனக்குள் கூறிக் கொண்டே குடிசையை விட்டு வெளிவந்து, விறகு வெட்டியைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் வேட்டைக்காரர்கள் சென்ற திசைக்கு எதிர்த் திசையை நோக்கி நடந்தது.

அப்போது விறகு வெட்டி, "ஏ நரியே, உன் உயிரைக் காப்பாற்றிய எனக்கு 'நன்றி' என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் நடந்து போகிறாயே! இது நியாயமா?" என்று கேட்டார்.

"ஐயா விறகு வெட்டியாரே, வேட்டைக்காரர்களிடம் 'நரியை நான் பார்க்கவில்லை' என்று வாயால் கூறிவிட்டு, நான் ஒளிந்திருந்த இடத்தைச் சைகை மூலம் காட்டினீரே, அது நியாயமா? உமது சொல்லும் செயலும் ஒன்றாக இருந்திருந்தால், நான் நன்றி கூறியிருப்பேன். வெவ்வேறாக இருக்கும் போது 'நான் ஏன் நன்றி கூற வேண்டும்?" என்று கூறிவிட்டு நரி வேகமாக ஓடிவிட்டது!

குதிரையின் கேள்வி!

அவன் ஒரு போர் வீரன். அவனிடத்தில் ஒரு குதிரை இருந்தது. அவன் அதில் ஏறிச் சென்று போரிலே சண்டை போடுவான். அந்தக் குதிரை அவனுக்குப் போரிலே மிகவும் உதவியாக இருந்தது. தினமும் அதற்கு அவன் நன்றாக உணவு கொடுப்பான். அதனிடம் பிரியமாக இருப்பான். அதை எந்தவிதக் குறையும் இல்லாமல் அன்பாக வளர்த்து வந்தான்.

அந்தக் குதிரை மிக அழகாக இருந்தது. நன்கு கொழு கொழு என்று இருந்தது. கம்பீரமாக இருந்தது.

யுத்தம் முடிந்தது. யுத்தத்திலே தீவிரமாக எதிரிகளை எதிர்த்துச் சண்டையிட உதவிய அந்தக் குதிரைக்கு, அவன் போதிய உணவு கொடுப்பதில்லை. பிரியமாக வளர்ப்பதில்லை. மிகவும் மோசமாக அதை நடத்தினான்.

அதை வண்டியில் பூட்டி ஓட்டினான். விறகு சுமக்கவும் செய்தான். கடினமான வேலைகளையெல்லாம் கொடுத்தான். பாவம், அது நாளுக்கு நாள் மெலியத் தொடங்கியது. எலும்பும் தோலுமாகியது. சக்தியை இழந்தது. உடம்பிலுள்ள உரோமமெல்லாம் உதிர்ந்துவிட்டன!

திடீரென்று ஒரு நாள் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகிற்று. உடனே போர் வீரன், தன் குதிரைக்கு முன்புபோல் சத்தான உணவை அளித்தான். பிரியமாகத் தட்டிக் கொடுத்தான். யுத்த களத்திற்கு அதை அழைத்துச் சென்

றான். அதன் மீது ஏறி வீரன் போர் புரியும் போது, முன்போல் அதனால் ஓட முடியவில்லை; தாண்ட முடியவில்லை. சிறிது நேரத்திலே அது களைத்துப் போய்விட்டது. ஒருசமயம் நிலை தடுமாறி அது கீழே விழ, போர் வீரனும் கீழே விழுந்தான். எதிரிகளிடம் எளிதிலே சிக்கிக் கொண்டனர். அப்போது அந்தக் குதிரை போர் வீரனைப் பார்த்து, "கீழே நான் விழுந்தேன். அதனால், நீங்களும் விழுந்தீர்கள். இது என் குற்றமா? யுத்தம் முடிந்ததும், குதிரையா யிருந்த என்னைக் கழுதை போல் நடத்தினீர்கள். மீண்டும் குதிரையாக — அதிலும் போர்க் குதிரையாக ஓரிரு நாட்களில் மாற்றிவிட முயன்றீர்களே, அது முடிகிற காரியமா?" என்று பரிதாபமாகக் கேட்டது.

தன் கையே தனக்கு உதவி

ஒரு வயலிலே நெற் பயிர் நன்றாக வளர்ந்திருந்தது. கதிர்கள் முற்றி ஒரு சில நாட்களில் அறுவடை செய்யும் நிலையில் இருந்தன.

அந்தவயலின் ஒருமூலையிலே பயிர்களுக்கு இடையிலே ஒருவானம்பாடி கூடுகட்டிக் குஞ்சுகள் பொரித்திருந்தது. அந்தக் குஞ்சுகளுக்கு இன்னும் இறகுகள் முளைக்கவில்லை. ஆகையால், தாய்ப் பறவை இரை தேடி வந்து குஞ்சுகளுக்குக் கொடுத்து வந்தது.

ஒரு நாள் தாய்ப் பறவை இரையுடன் திரும்பி வந்தபோது ஒரு குஞ்சு, "அம்மா, அம்மா, இன்று இந்த வயலுக்குச் சொந்தக்காரரும் அவருடைய மகனும் வந்தார்கள். 'கதிர்கள் முற்றிவிட்டன. நாளையே அறுவடை செய்து விடலாம். நம் நண்பர்களையும், அக்கம்பக்கத்திலுள்ளவர்களையும் அழைத்து வந்து அறுவடை செய்ய ஏற்பாடு செய்' என்று மகனிடம் தந்தை சொன்னார். அதனால், நாம் இந்த இடத்தை விட்டு இன்றே போய் விடுவது நல்லது" என்றது.

அதற்குத் தாய்ப் பறவை, "அவர்கள் நண்பர்களையும் அக்கம் பக்கத்தவர்களையும் நம்புவதால், நாளை அறுவடை நடக்காது. கவலையில்லாமல் இருங்கள்" என்றது.

அது சொன்னது போலவே மறுநாள் அறுவடை நடைபெறவில்லை. அங்கு வந்த தந்தை மகனிடத்தில், "இவர்களை நம்பி ஏமாந்து விட்டோம்... சரி, உன் சித்தப்பா, பெரியப்பா; அவர்களுடைய பிள்ளைகள் முதலியோரை நாளை அழைத்து வந்து அறுவடை செய்துவிடு" என்றார்.

இந்தத் தகவலையும் தாய்ப் பறவை மாலையில் திரும்பி வந்ததும் அதனிடம் குஞ்சுகள் தெரிவித்தன.

"உற்றாரையும் உறவினரையும் நம்புவதால் நாளையும் அறுவடை நடை பெறாது கவலைப்படாதீர்கள்" என்றது தாய்ப் பறவை.

அது சொன்னது போல் மறுநாள் உற்றாரும் வரவில்லை; உறவினரும் வரவில்லை.

இதனால் பெரிதும் ஏமாற்றமடைந்த தந்தை அன்று தம் மகனைப் பார்த்து, "நண்பர்கள், அக்கம்பக்கத்தவர், உற்றார், உறவினர் எவரையும் நாம் நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நம் கைகள் எதற்காக இருக்கின்றன? வீட்டுக்குப் போனதும் கருக்கரிவாள்களைத் தயாராக எடுத்து வை. நாளைக் காலையில் நாம் இருவரும் வந்து அறுவடை செய்து விடலாம்" என்றார்.

இதைக் குஞ்சுகள் தாய்ப் பறவையிடம் கூறியதும், "அப்படியா? நிச்சயமாக நாளை அறுவடை நடந்து விடும். அவர்கள் 'தன் கையே தனக்கு உதவி' என்ற முடிவுக்கு வந்துவிட்டதால், இனியும் நாம் இங்கு இருக்கக் கூடாது. ஆபத்துத்தான்" என்று கூறி உடனே வேறோர் இடத்திற்குக் குஞ்சுகளைப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டது.

மறுநாள் காலையில் தாய்ப் பறவை முன்பு இருந்த வயல் பக்கமாகச் சென்ற போது, தந்தையும் மகனும் அறுவடை செய்து கொண்டிருந்த காட்சியைக் கண்டது.

கருத்து: ஈசாப்

என் குழந்தைப் பருவம்

டாக்டர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன்

இனிமையான, எடுப்பான, தெளிவான கணீரென்ற குரலில் ஜெர்மனியில் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் பாடுவதைக் கேட்டுப் பரவசமடைந்த ஜெர்மன் இசைப் பிரியர்கள் அவருக்குக் கொடுத்த பட்டம் 'DIE SINGENDEN HERSEM VON INDIEN' அதாவது இந்திய இசையின் இதயமும் ஆன்மாவுமாக விளங்குபவர் என்பதாகும்.

லண்டனில் சார்லஸ் இளவரசர் திருமண வைபவத்தையொட்டி லண்டன் பி.பி.ஸி. இவரது இசையை ஒலிப்பதிவு செய்தது. இந்த கௌரவத்தைப் பெற்ற இந்திய இசைக் கலைஞர் இவர் ஒருவர்தான்!

பாரிசில் உள்ள இராமலிங்கர் மிஷன் இவருக்கு 'கந்தர்வ கோவிந்தர்' என்ற பட்டத்தையும், திருவாரூர் தமிழ்ச் சங்கம் 'தமிழிசை மன்னர்' என்ற பட்டத்தையும், லண்டனில் உள்ள பிரிட்டானியா தமிழ் (சைவ) கோவில் டிரஸ்ட் 'இசை ஞான பூபதி' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளன. மேலும், இவர் தமிழகத்திலும், வட இந்தியாவிலும், பிற நாடுகளிலும் பெற்ற சிறப்புப் பட்டங்களின் எண்ணிக்கை 30 க்கு மேல் இருக்கும்!

தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைத் துறைக்குத் தலைவராக விளங்கும் இவருக்கு, சென்னைப் பல்கலைக் கழகம் 'கௌரவ டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளது.

தமிழ்த் திரைப்படங்களில் மட்டுமல்லாது தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென் மொழிப் படங்களிலும் பின்னணி இசை பாடத் தொடங்கிய இவர், 'அகத்தியர்,' 'திருமலை தென்குமரி' போன்ற படங்களில் நடித்தும் பட்டி தொட்டிகளிலும் இறையுணர்வையும், இசை இன்பத்தையும் பரப்பியுள்ளார்.

அபிராமி அந்தாதி, 'கந்தரலங்காரம்' போன்ற உள்ளத்தை உருக்கும் பக்திப் பாடல்களை 30 இசைத் தட்டுக்களில், நாடாக்களில் ஒலிப்பதிவு செய்து, இன்றும் நாம் கேட்டு மகிழ வகை செய்துள்ளார்.

தமிழ் இசைச் சங்கத்திலும், மத்திய கர்நாடக இசைக் கல்லூரியிலும் முறையாக இசை பயின்று, 'இசை மணி' 'சங்கீத வித்வான்' என்ற பட்டங்களைப் பெற்ற இவருக்கு மத்திய அரசு 'பத்மஸ்ரீ' விருதும், தமிழக அரசு 'கலைமாமணி' விருதும் வழங்கிப் பாராட்டியுள்ளன.

எங்களுக்குப் பூர்வீகம் என்று சொன்னால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகூர்தான். எங்கள் குல தெய்வம் ஸ்ரீ காத்தாயி அம்மன் ஆலயமும் அங்குதான் இருக்கிறது. எங்கள் தந்தையார் காலத்தில்தான் நாங்கள் சீர்காழிக்கு வந்ததாகக் கூறுவார்கள். நான் சீர்காழியில்தான் பிறந்தேன்.

எங்கள் பாட்டனார் திரு. குப்புசாமி செட்டியார் பெரிய சிவபக்தர். சிவபக்தியிலும் சிவனடியார்களிடத்து அன்பு செலுத்துவதிலும் சிறந்தவர். எங்கள் பாட்டி உதயத்து அம்மாளும் தம் கணவ

வரைப் போலவே பக்தியும் பண்பும் உள்ளவர்கள். எங்கள் தாத்தா திருவாதிரை நாளில் தரிசனம் முடித்த பிறகே உணவு உண்பார். எங்களுக்குப் பெயர் வைத்தது எல்லாம் அவர்தான். என் பெரிய அண்ணன் பெயர் சொக்கலிங்கம்; சிறிய அண்ணன் பெயர் நடராஜன். தில்லை ஆலயம், நடராஜப் பெருமானும் கோவிந்தராஜப் பெருமானும் இணைந்துள்ள ஆலயம் என்பதை அறிவீர்கள். மூன்றாவதாகப் பிறந்த எனக்கு கோவிந்தராஜன் என்று பெயர் வைத்தார்கள். வள்ளலாரிடத்தும் அவருக்கு ஈடுபாடு உண்டு. அதனால்தான் என் தங்கைக்கு ஜோதி என்று பெயர் வைத்தார். சிவ ஈடுபாடு அதிகம் என்பதால், அவர் வைணவத்தை வெறுப்பவர் அல்லர். அதனால்தான் எனக்குக் கோவிந்தராஜன் என்றும், என் தம்பிக்குக் கிருஷ்ணமூர்த்தி என்றும் பெயர் வைத்தார்.

என்னை ஈன்றெடுத்தவர்கள் திரு. கு. சிவசிதம்பரம் செட்டியாரும் திருமதி அவையாம்பிகை அம்மையாரும் ஆவார்கள். என் பெற்றோர் உயர்ந்த உத்தம குணங்கள் நிரம்பியவர்கள். என் தந்தையார் எப்போதும் இன்முகமும் இன்சொல் பேசும் வழக்கமும் உடையவர்கள். என் தந்தையாரும் தாயாரும் போட்டி போட்டுக் கொண்டு பிறருக்கு உதவி செய்வார்கள். என் தாயார் கையால் சாப்பிட்டவர்கள் இன்றளவும் வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று மிகவும் நல்ல நிலையில் இருக்கின்றார்கள்.

பள்ளியில் சேர்க்கும் வயது வந்தவுடன் அக்கால வழக்கப்படி மேளதாளத்துடன் என் அட்சராப்பியாசம் ஆரம்பமானது. எங்கள் ஊரில் உள்ள வாணி விலாச ஆரம்பப் பள்ளியில் தான் என் பள்ளிக் கல்வி தொடங்கியது. பெயரே வாணி என்று இருப்பதால் அக்கலைவாணியே எனக்குத் திருவருள் புரிந்தாள் என்று இன்றும் நினைக்கின்றேன். ஐந்தாம் வகுப்பு வரை தான் அங்கு இருந்தது. பிறகு சிவன் கோயில் தெற்குக் கோபுர வாசல் அருகில் இருந்த சபாநாயக முதலியார் உயர் தொடக்கப் பள்ளியில் சேர்ந்து எட்டாம் வகுப்பு வரை படித்தேன். எங்கள் வீடு வடக்குக் கோபுர வாசலில் இருந்தது. எனவே நான் தினமும் காலை மாலை பள்ளிக்குப் போகும் போதும் வீட்டிற்கு வரும் போதும் கோயிலின் கிழக்குக் கோபுரம் வழியாகப் பள்ளிக்குச் சென்று வகுப்பு முடிந்தவுடன் மேற்குக் கோபுரமாக வீட்டிற்கு வருவேன். தெரிந்தோ தெரியாமலோ தினமும் இரண்டு முறை இறைவன் இறைவியைப் பிரதட்சணமாக வருவது போல் அது அமைந்து விட்டது. இறைவனே எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த பெரும் பாக்கியமாக நான் அதைக் கருதுகின்றேன். நான் படிப்பதும் பாட்டுக்களைப் பாடுவதும்கூட கோயில் பிராகாரங்களில் அமைந்த மண்டபங்களில்தான்.

தெய்வ பக்தி உள்ள குடும்பத்தில் பிறந்ததால், இயல்பாகவே சிறு வயது முதலே எனக்குக் கடவுள் பக்தி இருந்து வந்தது. மார்கழி மாத ஏகாதசி அன்று என் தந்தை இராமர் வேடமும், என் சிறிய தந்தை லட்சுமணர் வேடமும் பூண்டு பஜனை செய்து கொண்டு வருவார்கள். நானும் மார்கழி மாதம் அந்த பஜனையில் கலந்து கொண்டு பாடிக் கொண்டு வருவேன். இளம் பிராயத்தில் சிவந்தி மாலையைப் போட்டுக் கையில் தாளமும் கொடுத்ததால் மிகவும் உற்சாகமாக இருக்கும். பஜனை முடிந்த பிறகு பொங்கலும் கிடைக்கும். பிறகு பள்ளிக்கூடம் வந்து விடுவேன்.

சிறு வயது முதலே என்னை அறியாமல் எனக்கு இசையில் ஓர் ஈடுபாடு இருந்து வந்தது. எங்கள் பள்ளிக் கூடப் பிரார்த்தனைப் பாடல் ''கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே'' என்ற திருவருட்பா பாடல். அதை எல்லோரும் சேர்ந்து பாடுவோம். பள்ளிக் கலைநிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்கேற்பேன்.

சீர்காழிப் பூங்காவில் ஒரு சமயம் பெரியார் அவர்கள் பேச வந்தபோது என்னைப் பாடச் சொன்னார்கள். நான் ''கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே'' என்ற அருட்பா பாடலைப் பாடி அவரது பாராட்டைப் பெற்றேன்.

இசையில் இருந்த ஆர்வம் காரணமாக என்னுடைய படிப்பை மேலே தொடர முடியவில்லை. அப்பொழுதெல்லாம் எ. எஸ். எல். சி. தேர்ச்சி பெறுவதே மிகவும் கடினமான காரியம். அதில் நான் ஆங்கிலத்தோடு சேர்ந்து வெற்றி பெற்றேன்.

என் சிறிய தந்தையார் இசையில் மிகுந்த ஈடுபாடு உடையவர். அவருடைய அண்ணனாகிய என் தந்தையார் முன், உட்காரக் கூட மாட்டார்; அவ்வளவு மரியாதை! குழந்தைகட்கு மரியாதை என்னும் நற்பண்பு இளம் பிராயம் முதலே வளருதல் வேண்டும். அவரிடம் பழைய பெரும் பாடகர்களான கிட்டப்பா, செம்பை வைத்தியநாத பாகவதர், தியாகராஜ பாகவதர் போன்றோர் பாடிய இசைத் தட்டுகளும், திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை போன்றோர்களின் நாதசுர இசைத் தட்டுக்களும் இருந்தன. நான் அந்த இசைத் தட்டுகளை எல்லாம் அடிக்கடி போட்டுக் கேட்பேன். அவர்கள் போல் நானும் பாட வேண்டும் என்று ஆசைப்படுவேன்.

பள்ளிப் படிப்பை முடித்தவுடன், எனது மாமாவுடன் தேவி நாடக சபையின் நாடகம் பார்ப்பதற்காகப் பட்டுக்கோட்டைக்குச் சென்றேன். நாடகக் கம்பெனியில் இருந்தவர்கள் சிறுவனாகஇருந்த என்னைப் பாடச் சொல்லிக் கேட்டார்கள். அப்போது பிரபலமாய் இருந்த பாடக நடிகர் திரு. மகாலிங்கம் 'ஸ்ரீ வள்ளி' படத்தில் பாடிய 'காயாத கானகத்தே' என்ற பாடலை அப்படியே பாடினேன். அதைக் கேட்டவர்கள் மகிழ்ச்சி அடைந்து அங்கு வந்திருந்த கவிஞர் சுவாமி சரவண பவானந்தரைக் கொண்டு,

''கோடானு கோடி மொழி
என்றாலும்
ஒன்று உனக்குக் கூறுவேன் கேள்.
ஈடாகுமோ தமிழுக்கிணையாகுமோ''

என்ற பாடலை எழுதச் செய்து என்னைப் பாடச் சொன்னார்கள். நான் அப்பாடலை அன்று நடைபெற்ற மனோகரா நாடகத்தில் கச்சேரி செய்வது போலப் பாடினேன். நான் அன்று தமிழின் பெருமை பற்றிப் பாடியதை நினைத்து இன்றும் மகிழ்ச்சி அடைகின்றேன். பின்னர் இராமாயண நாடகத்திலும் பால ராமராக நடித்தேன். இப்படிக் கொஞ்ச காலம் எனது நாடக வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது.

பிறகு சென்னையில் அப்போது பிரபலமாயிருந்த, சினிமாவுக்கென்றே முதல் முதலாக வெளிவந்த 'சினிமா உலகம்' என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடத்தி வந்த எனது சித்தப்பாவான பண்டித திரு பி. எஸ். செட்டியார் அவர்களின் ஆதரவால் சேலம் மாடர்ன் தியேட்டரில் சேர்ந்தேன். அப்போது எனக்கு சரீரம் உடைந்து மகரக்கட்டு வந்தது. அதைப் போக்கிக் கொள்ள நான் தினமும் சங்கீதம் சாதகம் செய்வேன். மாடர்ன் தியேட்டர்ஸ் பக்கத்தில் இருந்த கொய்யாத் தோப்புக்குச் சென்று, இரவு பகல்



என்று பாராமல் சாதகம் செய்வேன். அத்தோப்பில் பாம்புகளின் நடமாட்டம் அதிகம். பாடிக் கொண்டிருக்கும் போது சலசல என்று சத்தம் கூடக் கேட்கும். நான் சாதகம் செய்து கொண்டே இருப்பதால் அதை எல்லாம் நான் கவனிப்பதில்லை. பிறர் சொல்லித்தான் எனக்கு அந்த விஷயமே தெரியும்.

"உடையார் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று."

என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க எப்படியும் இசைத் துறையில் முன்னேற வேண்டும் என்ற ஊக்கமே என்னிடம் மிகுந்திருந்தது. அதனால் கால நேரம் தெரியாமல் சாதகம் செய்து கொண்டிருப்பேன்.

ஒருநாள் மாடர்ன் தியேட்டரில் நடிப்பதற்காக வந்திருந்த அக்கால பிரபல நடிகரும் பாடகருமான திரு. எஸ்.டி. சுப்பையா அவர்கள் என்னுடைய சாதகத்தையும் ஊக்கத்தையும் பார்த்து விட்டு என்னைப் பாராட்டி ஆசி வழங்கியது இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

சேலத்தில் இருந்த போதுதான் என் தந்தை எனக்கு ஒரு சுருதிப் பெட்டி வாங்கிக் கொடுத்தார்கள். அதை இன்றும் நான் என் பூஜை அறையில் வைத்திருக்கின்றேன்.

என் இசை ஆர்வம் என்று சொல்வதை விட இசை மேல் இருந்த பக்தி என்றே கூறுதல் மிகவும் பொருத்தம்.



அந்த பக்தி ஒவ்வொரு நாளும் வளர்ந்த வண்ணமாகவே இருந்தது. எனவே, அக்காலத்தில் கூறுவது போல, பெரிய ரயிலில் ஏறிச் சேலத்தில் இருந்து சென்னைக்கு வந்து விட்டேன். மயிலாப்பூர் அப்பர்சாமி கோயில் தெருவில் இருந்த என் சித்தப்பா திரு. பி. எஸ். செட்டியார் அவர்களின் இல்லத்திற்கு வந்தேன். அவர்கள் மிகுந்த தயாள குணமும் கண்டிப்பும் உள்ளவர்கள். அவர்கள் தான் என்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் தமிழ் இசைக் கல்லூரியில் சேர்த்தார்கள். அங்கு நான் முறைப்படி இசை பயின்றேன். 1949 – 50 ஆம் ஆண்டு நடைபெற்ற இசைத் தேர்வில் நான் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று 'இசை மணி' என்ற பட்டமும் பெற்றேன். பிறகு, என் சித்தப்பா திரு. பி. எஸ். செட்டியார் அவர்களின் நண்பரான சங்கீத மேதை திரு. ஸ்ரீநிவாச ஐயரிடம் பாடம் கேட்டேன். என்னுடைய இசைத் தாகம் அப்படியும் தணியவில்லை. சென்னைக் கர்நாடக சங்கீத் மத்திய கல்லூரியில் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் பயின்று 'சங்கீத வித்வான்' பட்டம் பெற்றேன். அங்கே புதேனும் ஒரு துணைப் பாடம் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் வீணையைத் துணைப் பாடமாக எடுத்துக் கொண்டேன்.

நான் ஒரு முருக பக்தன். "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்னும் அருணகிரி நாதரின் வாக்கிற்கிணங்க நான் வணங்கும் முருகப் பெருமானே எனக்குக் குருநாதராக அமைந்தார். ஆம், வேய்ங்குழல் மன்னர் திருப்பாம்புரம் திரு. சுவாமிநாதப் பிள்ளையவர்கள் அங்கே வைஸ் பிரின்ஸிபாலாக இருந்தார்கள். நான் செய்த புண்ணியம் காரணமாக எத்தனையோ மாணவர்கள் பயின்ற அக்கல்லூரியில் அவர்களின் தனி அன்பும் ஆதரவும் எனக்குக் கிடைத்தது.

"நல்ல பாத்திரம் அறிந்து பிச்சை போடு" என்று பெரியவர்கள் கூறுவார்கள்; நான் அந்த நல்ல பாத்திரத்தைத் தேடிக் கொண்டிருந்தேன்; அந்த நல்ல பாத்திரம் இப்போது எனக்குக் கிடைத்து விட்டது; நீதான் அந்தப் பாத்திரம். நீ வீட்டிற்கு வா.

உனக்கு நான் தனியாகவும் பாடம் சொல்கிறேன்'' என்று என் குருநாதர் கூறியது நான் பெற்ற பெரும் பேறு. பல இசை நுணுக்கங்களை எல்லாம் எனக்கு அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் என்னைத் தம்முடைய மூத்த பிள்ளை" என்றே எல்லோரிடமும் கூறுவார்கள். நானும் அவர்களை என்னுடைய ஞானத்தந்தையாகவே பாவித்து வணங்குகின்றேன். என்னிடம் குருபக்தி இருந்தது; அவர்களிடம் சிஷ்ய வாஞ்சை இருந்தது.

கோகுலம் குழந்தைகளுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன்: குருபக்திதான் ஒருவனை உயர்த்தும்; முன்னுக்குக் கொண்டுவரும். அதனால் தான் நம் முன்னோர்கள் நாம் வணங்க வேண்டியவர்களை மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வரிசைப்படுத்தி இருக்கின்றார்கள்.

என்னை ஈன்றெடுத்த திரு. சிவசிதம்பரம் செட்டியார் அவர்களிடம் இருந்து தெய்வ பக்தியையும், பரோபகார சிந்தனையையும், எனக்கு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த திரு.பி.எஸ்.செட்டியார் அவர்களிடம் இருந்து பிறரிடம் பழகும் முறையையும், என் குருநாதர் திருப்பாம்புரம் திரு. சுவாமிநாதப் பிள்ளையவர்களிடம் இருந்து ஒழுங்கையும், கண்டிப்பையும், இசை ஞானத்தையும் நான் பெற்றேன். அவை வற்றாத செல்வங்களாகும்.

என்னை இவ்வாறு உயர்த்தி ஆளாக்கிய இப்பெரியோர்களின் ஆசியாலேயே தமிழ் இசைச் சங்கத்தில் கோபாலகிருஷ்ண பாரதியார் பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று 1949—50 இல் ராஜாஜி பரிசான தம்புராவை விழாத் தலைவர் நாமக்கல் கவிஞர் அவர்கள் எனக்கு வழங்கினார்கள்.

அதேபோன்று சங்கீதவித்வத் சபையின் வெள்ளி விழாவிலே 1952 இல் தமிழில் அபூர்வ கீர்த்தனைகள், தியாகராஜரின் அபூர்வ கீர்த்தனைகள், ராகம், தானம், பல்லவி — என்ற மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று தங்கப் பதக்கமும் பெற்றேன். அத்தங்கப் பதக்கம் காரைக்குடி வீணை

சாம்பசிவ ஐயர் அவர்களால் வழங்கப் பெற்றது நான் பெற்ற பெரும் பேறு.

இவ்வாறு என்னுடைய இளைய பிராய வாழ்க்கை அமைந்தது.

குழந்தைச் செல்வங்களுக்கு நான் கூறுவது எல்லாம் உழைப்பும் ஊக்கமும் ஒருவரை உயர்த்தும். குரு பக்தியும் தெய்வ பக்தியும் மேலும் மேலும் உயர்த்தும்.

நீங்கள் ஊக்கத்துடன் உழைத்து, குருபக்தியிலும் தெய்வ பக்தியிலும் சிறந்து ஒழுக்கத்துடனும், நற்குணங்களுடனும் விளங்கி மேலும் மேலும் உயர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கோகுலம் குழந்தைகளுக்கு என் அன்பு வாழ்த்துக்கள்.

அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்

— அகிலன்

ஐம்பதாம் ஆண்டு நிறைவு காணும் படம்!

லாஸ் ஏஞ்ஜெல்ஸ்: பிரபல அமெரிக்கப் படத் தயாரிப்பாளர் வால்ட் டிஸ்னி தயாரித்த 'ஸ்னோ ஒயிட் அண்ட் தி செவன் ட்வார்ப்ஸ்' (ஸ்னோ ஒயிட்டும் ஏழு சித்திரக் குள்ளர்களும்) என்னும் கார்ட்டூன் சினிமாப் படத்தின் பொன்விழா இந்த ஆண்டு கொண்டாடப்படுகிறது.

உலகிலேயே முதல் முதலாகத் தயாரிக்கப்பட்ட முழுநீள கார்ட்டூன் சினிமாப்படம் இதுதான். வால்ட் டிஸ்னி இப்படத்தை 1937 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தயாரித்து வெளியிட்டார். [illegible] ஆண்டுகள் ஆகியும் இன்றும் கூட இப்படம் திரையிடப்படும் சினிமா அரங்குகளில் கூட்டம் நிரம்பி வழிகிறது.

ஜெர்மனியின் கிரிம் சகோதரர்கள் எழுதிய "ஸ்னோ ஒயிட்" என்னும் தேவதைக் கதையின் அடிப்படையில் வால்ட் டிஸ்னி இப்படத்தை 1937 இல் உருவாக்கினார்; 750 ஓவியர்கள் இரவும் பகலுமாக உழைத்து இப்படத்திற்காக 2,50,000 கார்ட்டூன் ஓவியங்களை வரைந்தனர். இப்படத்தைத் தயாரிப்பதற்கு அந்தக் காலத்திலேயே 15 லட்சம் டாலர்கள் செலவாயிற்று.

இப்படத்தில் 8 பாடல்கள் உள்ளன; இப்பாடல்களை ஒலிப் பதிவு செய்வதற்கு 80 இசைக் கருவிகள் கொண்ட இசைக் குழு பயன்படுத்தப் பட்டது. ஸ்னோ ஒயிட், ஏழு சித்திரக் குள்ளர்களைப் பார்த்துப் பாடும் 'விசில் வைல் யூ ஒர்க்' என்னும் பாடல் மிகவும் பிரபலமடைந்தது.

கிரிம் சகோதரர்கள் இந்தக் கதையை எழுதிய போது, இந்தச் சித்திரக் குள்ளர்களுக்குப் பெயர்கள் எதுவும் சூட்டவில்லை. ஆனால், வால்ட் டிஸ்னி இந்தக் குள்ளர்களின் தோற்றத்திற்கு ஏற்றவாறு ஸ்நீஸி, ஹாப்பி, கிரம்ப்பி, ஸ்லீப்பி, பாஷ்புல், டோப்பி, டாக் என்று குழந்தைகளுக்குப் பிடிக்கக் கூடிய வேடிக்கையான பெயர்களைச் சூட்டினார்.

பிஞ்சு நெஞ்சங்களை மகிழ்விக்கும் இந்த இனிமையான திரைப்படம், 1937 ஆம் ஆண்டு முதல் இதுவரையில், உலகெங்கிலும் ஏழு முறைகள் மீண்டும் மீண்டும் வெளியிடப்பட்டது. இதுவரையில் 33 கோடி டாலர்கள் வருமானத்தை இப்படம் சம்பாதித்துக் கொடுத்துள்ளது.

இப்படத்தின் பொன்விழாவை ஒட்டி, டிஸ்னி ஸ்டுடியோவில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. டிஸ்னி லாண்ட், டிஸ்னி பார்க் ஆகிய இடங்களில் குழந்தைகளுக்கென பல சிறப்புக் கேளிக்கை நிகழ்ச்சிகள் நடக்கவுள்ளன. தொலைக் காட்சியிலும் பல சிறப்பு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படவுள்ளன. அன்றியும், இப்படத்தை உலகின் 60 நாடுகளில் மீண்டும் திரையிடவும் ஏற்பாடு நடக்கிறது.

— அமெரிக்கத் தகவல் நிலையம்

பழமொழிப் புதிர்





மேலே உள்ள படம் எந்தப் பழமொழியை நினைவூட்டுகிறது? கீழேயுள்ள படம் எந்தப் பழமொழியை நினைவூட்டுகிறது?

விடை 32 ஆம் பக்கம்.

இன்னும் காந்தி இருக்கின்றார்!

பிரேமா புகழ்மதி

சம்பிரமான கட்டடங்களோடு காட்சி தந்து கொண்டிருந்த அந்தப் பள்ளியில் பத்தாம் வகுப்பு ஆண்டுத் தேர்வு இன்னும் அரை மணி நேரத்தில் நடக்கவிருக்கிறது. பள்ளியின் கட்டடங்களைச் சுற்றி ஏராளமான பூச் செடிகளும் மரங்களும் குளுமையான நிழலையும் நறுமணத்தையும் தந்து கொண்டிருந்தன. ஏராளமான மாணவர்கள் சுற்றியுள்ள பசும் புல் வெளிகளில் அமர்ந்து பாடங்களைப் பரபரப்போடு படித்துக் கொண்டிருந்தனர். இன்று இரண்டாம் நாள் பரீட்சை.

அதோ... அந்த வட்டப் புல் தரையில் நடுமையத்தில், காந்தி சிலை தெய்வீகப் புன்னகையோடு புனிதமாகக் காட்சி தந்து கொண்டிருந்தது. சுற்றிலும் மரங்கள் அடர்த்தியாக இருந்தன. காந்தி சிலையின் பீடத்தின் கீழே ராமு தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

"ராமு..." கடுமையான குரலால் தன்னைக் கூப்பிடுவது யார்? தலை நிமிர்ந்து பார்த்தான். சந்திரன் ஆத்திரத்தோடு நின்று கொண்டிருந்தான். "நேத்திக்கு முதல் நாள் பரீட்சையில்தான் ஏமாத்திட்டே... இன்னிக்காவது பேப்பரைக் காட்டப் போறியா, இல்லையா...?" கடுகடுப்போடு கேட்டான் சந்திரன்.

சந்திரன் பரீட்சை ஹாலில் ராமுவின் பின்னால் அமர்ந்து பரீட்சை எழுதுகிறான். வருஷம் முழுக்க 'டிராமா, சினிமா' என்று ஊர் சுற்றிவிட்டு முதல் பரீட்சை ஆரம்பமானதிலிருந்து ராமுவை நச்சரித்துக் கொண்டிருக்கிறான்: முன் பெஞ்சில் அமர்ந்துள்ள ராமு, தான் எழுதுகின்ற பேப்பரைப் பின் பெஞ்சிலுள்ள சந்திரனுக்குத் தெரியும்படியாக வைத்துக் கொண்டு எழுத வேண்டும். 'எல்லாவற்றையும் காட்ட வேண்டும்; பரீட்சையில் பாஸ் பண்ணுகிற அளவுக்காவது காட்டு' இது தான் சந்திரனின் கோரிக்கை.

"இதோ, பார்... சந்திரா... உனக்கு பாடத்திலே எந்த சந்தேகமிருந்தாலும் கேளு... இங்கேயோ, வீட்டிலேயோ, வெளியிலே எங்க வேணும்னாலும் என்னாலே முடிஞ்ச அளவுக்கு விளக்கறேன். ஆனால், பரீட்சை ஹாலில் மாத்திரம் நீ சொல்றபடி நான் செய்ய மாட்டேன். பரீட்சை ஹால் புனிதமான இடம். இதோ... இந்த காந்தி மகாத்மாவின் பவித்ரமான சிலை கீழே நின்னுக்கிட்டு நீ இப்படிப் பேசறதே அவமானம். 'கெட்டில்' என்கிற ஒரு வார்த்தையில் ஒரே ஒரு எழுத்தை காப்பியடிக்கக்கூட கடுமையாக மறுத்தவர் காந்தித் தாத்தா! காந்தி தோன்றிய மண்ணிலே பிறந்த நாம் இந்த நாட்டுக்கும், பரீட்சை நடத்துற பெரியவங்களுக்கும் ஏமாற்றம் தரக் கூடாது! இது பெரிய நம்பிக்கைத் துரோகம்! நீ சொல்றதுக்கு ஒத்துக்க மாட்டேன்" தீர்க்கமாகவும், திடமாகவும் சொன்னான் ராமு.

"ஆல்ரைட்... அப்படியா...! உனக்குச் சரியான பாடம் புகட்டுறேன்... என்னைப்பற்றி உனக்குத் தெரியாது... நான் என்ன வேணுமானாலும் செய்வேன்" என்று கடுமையாகக் கூறிவிட்டுச் சென்றான் சந்திரன். "இது எனக்கு சத்தியசோதனை: நிச்சயம் காந்தித் தாத்தா என்னைக் காப்பாத்துவார்...! மனதுக்குள் சொல்லிக்கொண்டே ராமு காந்தியின் சிலையை பயபக்தியோடு வணங்கிவிட்டு, கவலையை நீக்கியபடி படிக்க ஆரம்பித்தான்.

பரீட்சை மணி அடித்து விட்டது. அனைவரும் ஹாலில் சென்று அமர்ந்தனர். அவசர அவசரமாக ஓடிவந்த சந்திரன் அந்தப் பரீட்சைக் கூடத்தின் வெளிப்பக்கம் தன் பார்வையை ஓட்டினான். ஏராளமான மாணவர்கள் தங்கள் புத்தகங்களை, நோட்டுக்களை அங்

கங்கே திட்டுத் திட்டாக வைத்திருந்தனர். அதோ... ராமுவின் நோட்டு... காந்தி படம் போட்டது. 'பளிச்'சென்று தெரிகிறதே! அவசரத்தோடு குனிந்தபடி நோட்டின் பக்கங்களைப் புரட்டுகிறான். அதோ... இன்று பரீட்சையில் வரவிருப்பதாக அனைவராலும் நம்பப்படும் அந்தக் கட்டுரை கண்ணில் படுகிறதே... 'டபக்'கென்று அந்த ஆங்கிலக் கட்டுரையின் பக்கங்களை 'சரக் சரக்'கென ஓசைப்படாமல் ஒரு நொடியில் மின்னல் வேகத்தில் கிழித்தான்; சுற்று முற்றும் பார்த்தான்; யாரும் தன்னைப் பார்க்கவில்லை; தன் 'பேண்டு'க்குள் செருகிக் கொண்டு உள்ளே சென்றான்.

பரீட்சை ஹாலில் வினாத்தாட்களைக் கொடுத்தபடி சென்றார் ஓர் ஆசிரியர். 'அடடே, தான் கிழித்து வைத்திருக்கும் அந்தக் கட்டுரை வந்து விட்டதே...!' மகிழ்ச்சியோடு மனம் 'பக் பக்'கென்று அடித்துக்கொள்ள சுற்று முற்றும் பார்த்தபடி அந்த 'பிட்'டை (Bit) எடுத்து எழுத ஆரம்பித்தான். அப்பாடா, ஒருவழியாக அதன் கடைசிவரி வரை எழுதியாகி விட்டது.

அடடே... அது என்ன ஹாலுக்கு வெளியே ஒரே பரபரப்பு... 'ஸ்க்வா'டு அதிகாரிகள் நுழைகின்றனரே... ஓ 'பறக்கும் படை'யல்லவா இது...! ஒவ்வொரு பள்ளியாகத் திடீரென்று நுழைந்து சோதனை செய்கின்ற — மாவட்டக் கல்வி அதிகாரியின் தலைமையில் செயல்படுகின்ற — 'பறக்கும் படை'யல்லவா இது! 'குப்'பென்று வியர்த்தது சந்திரனுக்கு... 'ஆ... அப்படித்தான் செய்ய வேண்டும்... என்னையும் காப்பாற்றிக் கொள்ளலாம்; அதே நேரத்தில் என் எதிரியான ராமுவையும் மாட்டவைத்துவிடலாம். ஆஹா! பயல் சரியாக மாட்டிக்கொள்ளட்டும்; சரியான தண்டனை' என்று மனத்திற்குள் கறுவியபடி தான் 'பிட்'டாக வைத்திருந்த தாளைப் பந்தாகக் கசக்கி, காலின் வழியே ராமுவின் காலருகே தள்ளினான். கண்மூடித் திறப்பதற்குள் தன் துரோகத்தைக் கச்சிதமாக நிறைவேற்றிவிட்டான்.

பாவம் ராமு, 'பறக்கும் படை' வந்

தைதயோ; அல்லது சந்திரன் செய்த சூழ்ச்சியையோ எதையும் அறியாமல் 'விறுவிறு' வென்று பரீட்சை எழுதிக் கொண்டிருந்தான். பறக்கும் படை யிலுள்ள ஒரு கண்காணிப்பாளர் ராமு வரைக்கும் கீழும் மேலும் பார்த் தபடி வந்துவிட்டார்... அதோ... ராமு வின் காலருகில் கிடக்கும் தாள் பந் தைப் பார்த்து விட்டார்... 'டபக்' குனிந்து எடுத்தார்; பிரித்தார்; பார்த் தார். பிறகு ராமுவின் கையெழுத் தைக் கூர்ந்து பார்த்தார். ஓ ஹோ... இந்த எழுத்தும் இந்தப் பையன் எழு தும் பரீட்சைத்தாளின் எழுத்தும் ஒன்றாக இருக்கின்றதே! ஓஹோ, அப் படியா... மனதுக்குள் முடிவு கட்டிய படி ராமுவைப் பார்த்து "எழுந்திரு" என அதட்டினார்.

விழித்தான் ராமு. "என்ன முழிக் கிறாய்? இந்தத்தாள் உன்னுடையது தானே?" என்றார். "ஆமாம்" என் றான்.

"அப்படி வா வழிக்கு நீயே ஒத்துக் கிட்டே... அப்படியே வரிக்கு வரி பார்த்து ஒரு அடித்தல் திருத்தல் இல் லாமல் எழுதிட்டு தாங்க வருவதைப் பார்த்த உடனே கீழே போட்டுட்டியா...? நட... அதிகாரிக்கிட்டே ரிப்போர்ட் பண்ணணும்" எனக் கடுமையுடன் கூறினார்.

"ஐயய்யோ, அதெல்லாம் எனக் குத் தெரியாது... நான் இந்தத் தாளையே... ஹாலுக்குள் கொண்டு வரல்லியே... அது எப்படி இங்கே வந்ததுன்னு எனக்குத் தெரியாது." கண்ணீரோடு தேம்பினான் ராமு.

"அதெல்லாம், அதிகாரிக்கிட்ட சொல்லு..." என்றபடி மாவட்டக் கல்வி அதிகாரி முன் ராமுவைக் கொண்டு சென்றார்.

"இப்படிக் காப்பியடிக்கிறவங் களுக்கு நல்ல தண்டனை கொடுக் கணும்... அப்பத்தான் மத்த மாண வங்க ஒழுங்கா எழுதுவாங்க... ஹெட் மாஸ்டர் ரூமுக்குப் போய் ரிப்போர்ட் தயார் பண்ணுவோம்" என்று மாவட் டக் கல்வி அதிகாரி ராமுவை அழைத் துக் கொண்டு சென்றார். கையும் கள வுமாகப் பிடித்துவிட்ட மகிழ்ச்சியில் கண்காணிப்பாளர் உடன் சென்றார்.

"நல்லா மாட்ட வைச்சுட்டோம்; இனிமே தப்பிக்கவே முடியாது" மகிழ்ச்சியோடு மனதுக்குள் சொல் லிக் கொண்டான் சந்திரன்.

தலைமையாசிரியர் தம் அறை யில் அழகாக வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் படத்தினை பய பக்தியோடு வணங்கிவிட்டு, தான் கையில் வைத்திருந்த ரோஜாமலரைப் படத்தின் அடியில் மெல்ல வைத்தார். 'அடடே... இது என்ன... பூ கீழே விழுந்து விட்டதே...! என்ன இது, அபசகுனம் போல' என மனம் வருந் தியபடி பூவை எடுக்கக் கீழே குனிந்தார்.

அறையினுள் நுழைந்த மாவட்டக் கல்வி அலுவலரின் குரல்கேட்டு நிமிர்ந்து பார்த்தார்... இது என்ன ராமுவை அழைத்து வருகிறார்...! கையில் பரீட்சைத்தாளும் இருக் கிறதே!

நடந்தவைகளை அதிகாரி சொல்லச் சொல்ல, தலைமையாசிரியருக்குத் தலைசுழன்றது. "என்னது... ராமு 'பிட்' எடுத்துச் சென்றானா...? அதைப்

பார்த்து எழுதினானு... பறக்கும் படை வந்ததும் கீழே போட்டுவிட்டானு... நம்பவே முடியலியே... இவர் ஸ்டூடண்ட் ஆயிற்றே ராமு... மிக மிக நல்ல மாணவனுமாயிற்றே...!'' குழம்பினார் தலைமையாசிரியர்.

''நாங்க நேருக்கு நேரா பிடிச்சுட்டோம். நீங்க சந்தேகமே கொள்ள வேண்டாம். இவன் இத்தனை வருஷமும் இப்படிக் காப்பியடிச்சே நிறைய மார்க் வாங்கியிருப்பான். யார் கண்டா?'' என்றார் அதிகாரி.

''ராமு, உனக்கு யார் மேலாவது சந்தேகம் இருக்கா...? யாராவது உனக்கு விரோதி உண்டா?'' என்றார் தலைமையாசிரியர்.

''உண்மை பேசுவோர் மிகுந்த கவனம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்'' காந்தியடிகளின் இந்தப் பொன்மொழியினைக் கூறி அவரின் மாணவ வாழ்க்கையில் அவருக்கு நேர்ந்த வீண் பழியினையும் எடுத்து விளக்கித் தலைமையாசிரியர் தன் வகுப்பறையில் அன்றொரு நாள் 'நீதி போதனை' நடத்தியது ராமுவுக்கு நினைவுக்கு வந்தது. தன் கவனக் குறைவைப் பயன்படுத்தி தன்னை யார் மாட்டவைத்திருப்பார்கள் என்று அவனுக்கு யூகிக்க முடிந்தாலும், கண்ணால் காணாத எதையும் அவன் கூற விரும்பவில்லை; அதிலும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மற்றொரு மாணவனைக் காட்டிக் கொடுப்பதைவிட காந்திஜியின் பாதங்களில் சரணடைவதையே ராமு விரும்பினான். 'இந்த சத்தியசோதனையிலிருந்து கடவுள் நினைத்தால் என்னைக் காக்கட்டும்' என்று மனதுக்குள் கண்ணீரோடு சொல்லிக் கொண்டான் ராமு.

''அவனிடம் கேட்டு என்ன பிரயோசனம்? அவன் தான் கையும் களவுமாக மாட்டிக் கொண்டானே!'' ஆத்திரத்தோடு கூறினார் அதிகாரி.

''ஒரே நிமிஷம் பொறுங்கள். என்னுடைய கடைசி முயற்சி உண்மையை வெளிக் கொண்டு வருமா என்று பார்க்கிறேன்.'' தலைமையாசிரியர் கூறியபடி சில ரெக்கார்டுகளைப் புரட்டினார். ராமுவின் முன் நம்பர் யார்... பின் நம்பர் யார்... பக்கங்களில் யார் உட்காருகிறார்கள்... ஓஹோ! அப்படி இருக்குமா...அதையும்தான்...பார்த்து விடுவோமே!' அவசர அவசரமாகப் பரீட்சை அறைக்குச் சென்றார் தலைமையாசிரியர்.

இந்தத் தலைமையாசிரியர் மீது கல்வி வட்டாரத்தில் நல்ல மரியாதை உண்டு. எனவே அதிகாரி சற்றுப் பொறுத்தார்.

அடுத்த சில வினாடிகளில்... அதோ தலைமையாசிரியரும் சந்திரனும் வருகிறார்களே... ''இதோ... இந்தப் பையன்தான் ராமுவின் தோட்டிலிருந்து கிழித்து 'பிட்' அடித்திருக்கிறான். அவன் எழுதிய கட்டுரை கூட இதோ...'' என சந்திரனின் பரீட்சை பேப்பரைக் காட்டினார்.

''அதெப்படி...? இந்தக் கட்டுரை ஒரு வேளை மாணவர்கள் மிகவும் எதிர் பார்த்த கட்டுரையாக இருக்கலாம்... எனவே அவன் மனப்பாடம் செய்து வந்து எழுதியிருக்கலாமில்லையா?'' எனக் கேட்டார் அதிகாரி.

''நான் அதை யோசிக்காமல்

இல்லை. படிப்பிலே இவன் எப்போதுமே பின்தங்கியவன். இருந்தாலும் அதை வைத்து நான் இந்த முடிவை எடுக்கவில்லை. இவனுடைய விடைத் தாளே இவனுடைய திருட்டுத் தனத்தைக் காண்பித்துக் கொடுத்துவிட்டது. மறுபடி இந்தக் கட்டுரையை இப்பொழுது கூட இவனை ஒப்பிக்கச் சொல்லலாம்; சரியாக ஒப்பிக்கமாட்டான்; 'பதற்றத்தில் இப்ப மறந்து போச்சு'ன்னு இவன் திரும்பச் சொன்னால் நாம் சாட்சியமாக ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் கடவுளை யாரும் ஏமாற்றிவிட முடியாது; சரியானபடி அவன் விடைத்தாள் அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டது. இதோ பாருங்க... நோட்டுத்தாளிலே ராமு எழுதின ஆங்கிலக் கட்டுரை இந்தப் பக்கம் முடிகின்ற இடத்திலே 'பி. டி. ஓ.' என்று போட்டிருக்கிறான். ஆனால் பாவம் சந்திரன், அவனுக்கு கட்டுரைக்கும் 'பி. டி. ஓ.'வுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. அதுவும் கட்டுரையில் ஒரு பகுதி என்று நினைத்து விட்டான். இந்தப் பரீட்சை பேப்பர் பெரிய அளவில் இருக்கிறது. ராமுவின் நோட்டோ சிறிய அளவு. முக்கால் பக்கம் வரும்போது ராமு நோட்டிலே கடைசிவரி வந்துவிட்டது. ராமு பி. டி. ஓ. என்று கடைசியிலே போட்டிருக்கிறதை சந்திரன் தன் பரீட்சைத் தாளிலே — இதோ முக்கால் பக்கத்திலேயே போட்டுவிட்டான்.

"அதன் பிறகு மீதியையும் இங்கேயே எழுதியிருக்கிறான். நான் நேராகப் பரீட்சை ஹாலுக்குப் போனவுடனேயே இவனுடைய விடைத்தாளை வாங்கிப் பார்த்து இதைக் கண்டு பிடித்தேன்." உணர்ச்சிப் பெருக்கோடு கூறிக் கொண்டிருந்தார் தலைமையாசிரியர்.

"ஓ... நாங்கள் இதைக் கவனிக்கவே இல்லை... நீங்கள் உண்மையிலேயே மிகச் சிறந்த தலைமையாசிரியர்தான். உங்களை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்" என்று மிகவும் வியந்து கூறிய அதிகாரி ராமுவைப் பார்த்து, "நீ போய் பரீட்சை எழுது" என்றார். விழிகளில் நன்றி ததும்ப, தலைமையாசிரியரையும், அதிகாரியையும் வணங்கிவிட்டு, பரீட்சை ஹாலுக்கு விரைந்து சென்றான் ராமு.

"சந்திரன், நீ மோசமான மாணவன். காப்பியடித்தது மாத்திரமல்லாமல், ஒரு நல்ல மாணவனின் நல்ல பேரையும் கெடுக்க நினைத்த அயோக்கியன் நீ... உன்னை மூன்று ஆண்டுகள் பரீட்சை எழுதமுடியாமல் பண்ணப் போகிறேன். இப்போதே ரிப்போர்ட் எழுதுகிறேன்..." என்றார் கோபத்தோடு அதிகாரி.

"சார்...." குரல் கேட்டுத் திரும்பினார் அதிகாரி. உதவித் தலைமையாசிரியர் ஏதோ சொல்ல வந்தவர் தயங்கியபடி நின்று கொண்டிருந்தார்.

"என்ன...?" என்றார் அதிகாரி.

"வந்து... அந்தப் பையனை தயவு பண்ணி மன்னிச்சுடுங்க..." என்றார் தயங்கியபடி.

"என்னது...!" என்றார் கடுகடுப்பாய் அதிகாரி.

"அந்த மாணவன்... அந்த மாணவன்..." என்று சொல்ல வந்ததை எப்படிச் சொல்வது என்று சற்றுத் திணறி மேற்கொண்டு சொல்ல ஆரம்பித்த பொழுது தலைமையாசிரியரின் குரல் அவரைத் தடுத்தது. "வேண்டாம்... நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம்... நியாயப்படி அவன் தண்டனையை அனுபவித்துத்தான்

மகாத்மா காந்தியால் மிகவும் மதிக்கப்பட்ட ஓர் எழுத்தாளரின் சிலைதான் இது. யாருடைய சிலை என்று கண்டு பிடிக்க முடிகிறதா?

36 ஆம் பக்கம் பாருங்கள்.

தீரணும்'' என்று குறுக்கிட்டார் தலைமையாசிரியர்.

''இல்லை. நான் சொல்லியே தீர்வேன்...'' என்று தன்னை மீறிய ஆவேசத்தோடு கூறிய உதவித் தலைமையாசிரியர் அதிகாரியின் பக்கம் திரும்பி ''சார்... சந்திரன் எங்கள் தலைமையாசிரியரின் மகன்தான். தயவு பண்ணி நீங்கள் மன்னிச்சுடுங்க'' என்றார் படபடப்போடு.

''என்ன...! என்ன...! என்ன சொல்றீங்க!'' பேசமுடியாமல் திக்குமுக்காடினார் அதிகாரி. தலைமையாசிரியர் காந்தியின் படத்தைப் பார்த்தபடி கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்.

ஓ! தலைமையாசிரியரும் ஒரு தந்தைதானே...! தம் மனச்சுமையை மனச் சோகத்தை காந்தியின் திருவடிகளில் கண்ணீராக வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

உணர்ச்சி வெள்ளம் அலைபாய கல்வி அதிகாரி பரிவோடு தலைமையாசிரியரின் கரங்களைப் பற்றினார். நெகிழ்ச்சியான குரலில் கூறத் தொடங்கினார்... ''நீங்கள்... நீங்கள் சாதாரண மனிதரில்லை... ஒரு தெய்வம்தான்! காந்தி மகாத்மா இந்த மண்ணிலிருந்து மறைந்து விட்டாரென்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், இன்னும் காந்தி இருக்கின்றார். இந்த உலகத்திலே இன்னும் சத்தியம் வாழ்வதற்குக் காரணம் உங்கள் மாதிரி நல்லவர்களாலே தான். உங்கள் மையனை நீங்கள் நினைத்திருந்தால் தப்பிக்க வைத்திருக்கலாம்... ஆனால், இந்தசத்தியசோதனையில் நான் மாத்திரமில்லை, நீங்களும் ஜெயித்துவிட்டீர்கள்'' என்று தழுதழுத்த குரலில் கூறினார் அதிகாரி.

''சார்... என் பையனை ஒரே பேரன் என்கிறதாலே பெரியவங்கள் ரொம்ப செல்லம் கொடுத்து வளர்த்திட்டார்கள். எவ்வளவோ நல்ல வார்த்தைகள் சொல்லியும், கதைகள் சொல்லியும் அவன் திருந்தவில்லை. இந்தக் குற்றத்திற்குரிய தண்டனையை அவன் அனுபவித்துத்தான் தீரணும்'' என்றார் கண்ணீரோடு.

''கவலைப்படாதீர்கள். உங்கள்

மகன்: அப்பா, அப்பா! அவ்வளவு பெரிய ஒட்டகத்தின் மேல் எப்படி ஏறுவாங்க?

தந்தை: அது குட்டியாக இருக்கும் போதே ஏறி உட்கார்ந்து விடுவாங்கள்!

— ஜி. அரவிந்த்

பையன் கட்டாயம் திருந்திவிடுவான். இந்த மண்ணிலே பிறந்த எந்தக் குழந்தையையுமே கெட்டுப் போவதற்கு மகாத்மா காந்தி விட்டுவிட மாட்டார். நீங்கள் மனசைத் தேத்திக் கொள்ளுங்கள். இந்த வருஷம் மட்டும் அவன் பரீட்சை எழுதாமல் தண்டிக்கிறேன். அடுத்த வருஷம் அவன் நிச்சயம் பாஸாயிடுவான். ஒரு தெய்வத்தினுடைய மகன் தீயவனாக நிச்சயம் மாற மாட்டான்'' என்றார் அதிகாரி.

சந்திரன் உடைந்தகுரலில் பேசுகின்ற தந்தையையும் உருக்கத்தோடு தேற்றுகின்ற அதிகாரியையும் மாறி, மாறிப் பார்த்தான். பொக்கை வாயோடு வாழ்த்துகின்ற காந்தியையும் பார்த்தான். ''ஐயா...'' மடை திறந்தாற்போல் அழுதபடி அதிகாரியின் காலில் விழுந்தான். ''ஐயா... நான் திருந்திவிட்டேன்... அப்பா பேரை நிச்சயம் காப்பாத்துவேன்'' காலில் விழுந்து அழுகின்ற சந்திரனைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்டனர் தலைமையாசிரியரும் அதிகாரியும்.

முன்பு தரையில் விழுந்த ரோஜாவை எடுத்து காந்தி படத்தில் வைத்தார் தலைமையாசிரியர். அடடே... இப்பொழுது சரியாகப் பொருந்தி விட்டதே!

அன்பு ஒன்றே போதும்

எஸ்.பாலகிருஷ்ணன்

"சதீஷ், போய் குளி. பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு...!" அவசரப்படுத்தினாள் அவனது தாய் ஜெயா.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்த சதீஷ், "அம்மா, நான் ஒன்று கேட்பேன்... தருவியா?" என்று குழைந்தான்.

"என்னடா கண்ணு வேணும்...?" அவனது தலையைக் கோதியவாறே கேட்டாள் ஜெயா.

"இன்னிக்கு எனக்கு மதிய சாப்பாட்டுக்குக் கேரியர் கொடுத்து விடுவியில்லே...?"

"ஆமா...!"

"சாதத்தோட கூட்டும், வழக்கமா ஒரு முட்டையும் கொடுத்து விடுவியில்லே...?"

"ஆமா...!"

"இன்னிலேர்ந்து ரெண்டு முட்டை வெச்சிடுறியா...?"

"ஏன்டா கண்ணு...?"

"மத்தியான நேரத்திலே ரொம்ப பசிக்குதும்மா. தாங்க முடியலே... அதான்!"

"இதுக்குத்தானா... இன்னிலேர்ந்து சாதமும் பொரியலும் கூட வைக்கிறேன். அவிச்ச ரெண்டு முட்டையும் வைச்சிடறேன்!"

"அம்மான்னா அம்மா... நல்ல அம்மா... தங்க அம்மா... ஸ்வீட் மம்மி!" தாயின் கன்னத்தில் இதழ்களைப் பதித்த சதீஷ், குளியலறைக்குக் கும்மாளத்துடன் குதித்துச் சென்றான்.

'கடந்த எட்டு மாசமா பள்ளிக்கூடத்துக்குக் கேரியர் கட்டித் தர்றேன். தினமும் சதீஷுக்குச் சாப்பிட ஒரு முட்டைதான் வச்சிவிடறேன். இதுவரைக்கும் ஜாஸ்தியாப் பசிக்காத இவனோட வயிறு இப்ப மட்டும் ஜாஸ்தியாப் பசிக்கக் காரணம்...? இதிலே ஏதோ விஷயம் இருக்கு. அதை இன்னிக்கு மத்தியானம் கண்டுபிடிச்சிடறேன்...!' என்று முடிவெடுத்த ஜெயா, தன் செல்ல மகனுக்குக் கேரியர் கட்டி வைத்துவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடலானாள்.

குளித்து முடித்து, காலை டிபன் உண்டு பள்ளிக்குக் கிளம்பினான் சதீஷ்.

அன்று மதியம் உணவு இடைவேளை.

பள்ளிக்கு விஜயம் செய்த ஜெயா சதீஷின் வகுப்பறை ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தாள்.

அங்கே...

தன் நண்பன் ஒருவனுடன் அமர்ந்து காரியரைத் திறந்து கொண்டிருந்தான் சதீஷ்.

அவன் நண்பன் வைத்திருந்ததோ அலுமினியத் தூக்கு!

தன் காரியரைத் திறந்த சதீஷ் தன்னிடமிருந்த இரண்டு முட்டைகளில் ஒன்றை எடுத்து, "குமார்! இதை நீ வைச்சுக்கோ...!" என்று நண்பனின் தூக்கு மூடியில் வைத்தான்.

"சதீஷ்! இதுவரைக்கும் ஒரு முட்டை கொண்டுவந்த நீ இன்னிக்கு எதுக்கு ரெண்டு முட்டை கொண்டு வந்தே...?" என்றான் குமார்.

"உனக்காகத்தான்... இனி தினமும் உனக்கொரு முட்டை கிடைக்கும்!"

"வீட்டிலே என்ன சொல்லி ரெண்டாவது முட்டைக்கு ஏற்பாடு பண்ணினே...?"

"ரொம்பப் பசிக்குதுன்னு பொய் சொல்லி!"

"ஏன்டா, சதீஷ்! இதெல்லாம் அவசியமா...? ஒருவாரமா உன்னோட பழகற என் மேலே அன்பு வைச்சு அம்மாகிட்டே பொய் சொல்லி எனக்கொரு முட்டை கிடைக்க ஏற்பாடு பண்ணியிருக்கே. இது உன்னோட நல்ல மனசைக் காட்டினாலும், யாருக்காகவும், எந்த சமயத்திலேயும் பொய் சொல்றது நல்ல பழக்கமில்லே. பழைய சோறும், எலுமிச்சை ஊறுகாயும் எனக்கு பழகிப்போன ஒண்ணு. எங்க குடும்பம் இருக்கிற நிலைமையிலே எங்கம்மா இதைக் கொடுத்து விடறதே பெரிய விஷயம். பழைய சாதம் சாப்பிடற நான் உன் மூலமா தினம் பள்ளிக்கூடத்திலே முட்டை சாப்பிடற பழக்கத்தை ஏற்படுத்திகிட்டா, வீட்டிலே போயும் என் நாக்கு முட்டை கேட்கும். அப்ப எங்கம்மாவாலே எனக்கு முட்டை வாங்கி வைக்க முடியுமா...? இன்னொண்ணு... தினம் எனக்கொரு முட்டை நீ கொண்டு வர்றதிலே உங்க குடும்பத்துக்கு அந்த அளவுக்குச் செலவும் அதிகமாகும். ஆகையால், இந்த முட்டையையும் தயவு செஞ்சு நீயே சாப்பிட்டுடு. சாயந்தரம் வீட்டுக்குப் போனதும் அம்மாகிட்டே நிஜத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கோ. எனக்கு உன்னோட அன்பு ஒண்ணே போதும்...!" முட்டையை எடுத்து குமார் மீண்டும் சதீஷின் காரியரில் வைக்க..

என்ன சொல்வதென்று தெரியாமல் சதீஷ் தவிக்க...

சதீஷின் பாச உள்ளத்தையும், குமாரின் உயர்ந்த பண்பையும் ஜன்னல் வழியாய்க் கண்ட ஜெயாவின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் திரண்டது.

ஓவியில் காணப்படும் எழுத்தாளர் தமது மனைவியுடன் பேசிக் கொண்டிருக்கிறார். இப்போதாவது கண்டுபிடிக்க முடிகிறதா?

— 27 — ஆம் பக்கம் பாருங்கள்.

புதையல் தீவு

டாக்டர் பூவண்ணன்

14. உட்கோயில்

உட்கோயிலின் படிகளில் செங்கோடன் அச்சத்தோடு மெல்ல இறங்கினான். சுமதி ஆவலோடு பின் தொடர்ந்தாள். மெதுவாக இறங்கும் செங்கோடனைக் கடந்து, அவன் முன்னே வந்தாள்.

"சுமதி, அவசரப்படாதே. என் பின்னாலேயே வா. இவ்வளவு நாள் பொறுத்திருந்த நாம் இன்னும் சில நிமிடங்கள் பொறுத்திருப்பதில் தவறில்லை" என்றான் செங்கோடன்.

சுமதி அவன் பின்னே செல்லவில்லை. அவனுக்கு முன்னே போகவும் முற்படவில்லை. அவனருகே, அவனை ஒட்டி நடந்தாள். இருவரும் ஒரே நிதானத்தில் இறங்கினர். சுமார் இருபது அடிகள் இறங்கியபின் சமதளம் வந்தது. செங்கோடன் விளக்கின் மீது கவனத்தைச் செலுத்திக் கொண்டே நடந்தான். விளக்கு அணையவில்லை. மங்கவில்லை. அதுவே அவனுக்கு வியப்பளித்தது. இருநூறு ஆண்டுகள் மூடியிருந்த ஓரிடம் அதற்கான புழுக்கத்தையோ, நாற்றத்தையோ பெற்றில்லாததும் பேரதிசயங்கள் என்று நினைத்தான். கோயிலின் மதிற்சுவரில் அமைக்கப்பட்டிருந்த கருடாழ்வார் சிற்பங்களில் உட்கோயிலுக்குள் காற்றுப் போக வழிகள் அமைக்கப்பட்டிருக்கும் உண்மை அவனுக்குத் தெரியாது.

சமதளத்தில் தூண்கள் இருந்தன. இரண்டு வரிசைத் தூண்களுக்கு இடையே இருவரும் நடந்தார்கள். சில நிமிடங்களில் உட்கோயிலின் மையத்தை அடைந்தார்கள். அங்கே சென்றதும் விளக்கொளி பன்மடங்கு பெருகியதைப் போலப் பேரொளி பிறந்தது. அந்த ஒளி வெள்ளத்தின் நடுவே, மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராக அவதாரம், நரசிம்மாவதாரம், வாமனாவதாரம், பரசுராமாவதாரம், இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், பலராமவதாரம், கல்கியவதாரம் ஆகிய பத்து அவதாரங்கள் பத்துப் பொற்சிலைகளாகப் பொலிவோடு திகழ்ந்தன.

பத்துப் பொற்சிலைகளும் ஆள் உயரத்தில் இருந்தன. ஒவ்வொரு பொற்சிலையும், முத்து, பவளம், மரகதம், மாணிக்கம், வைரம் முதலிய விலையுயர்ந்த மணிகளாலான மாலைகளைத் தரித்திருந்தது. செங்கோடனும் சுமதியும் அரை வட்டமாக வீற்றிருந்த அந்தப் பத்துச் சிலைகளின் மத்தியில் வந்து நின்றனர். அவர்கள்

கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. ஆனந்தத்தால் கண்ணீர் சொரிந்தன. பக்திப் பரவசத்தால் உடல்களும் நடுங்கின. "பெருமானே! பெருமானே!" என்று வாய்கள் முணுமுணுத்தன.

கமதி மெல்லத் தன் கையை நீட்டி செங்கோடனிடமிருந்து விளக்கை வாங்கினான். அதையே கற்பூரத் தட்டாகக் கருதி, அதனால் ஒவ்வொரு பொற்சிலைக்கும் தீபாராதனை செய்தான். கைகூப்பி வணங்கினான்.

"கமதி! விஜயமங்கலத்தின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமான உட்கோவிலை நீதான் கண்டுபிடிச்சே! எங்க தாத்தாவின் அப்பா சொல்லாமல் போன ரகசிய வழியை நீதான் கண்டுபிடிச்சே. உனக்கு நான், என் குடும்பம், இந்த ஊர் மக்கள், ஏன் தமிழ்நாட்டு மக்கள் ஆகிய அனைவரும் நன்றி செலுத்தணும். பெருமானைப் போலப் பத்துப் பிறவிகள் எடுத்து உனக்குச் சேவை செஞ்சாலும் இந்த நன்றிக் கடனைத் தீர்க்க முடியாது!"

செங்கோடன் உணர்ச்சி பொங்கக் கூறியதைக் கேட்டுக் கமதி நாணினான்.

"செங்கோடா! உட்கோவில்மூர்த்திகளை நாம பார்த்துட்டோம். இந்த நல்ல செய்தியைத் தாத்தாவுக்குச் சொல்ல வேண்டாமா?" என்று கேட்டான், கமதி.

"ஆமாம்" என்று அவன் கூறிய போதே அவன் முகத்தில் பொங்கிய மகிழ்ச்சி மங்கி ஒருவித கலவரம் படர்ந்தது. செங்கோடன், "கமதி! விளக்கொளி மங்குதே!" என்று பயத்தோடு கூற, கமதி கலகலவெனச் சிரித்தான்.

"செங்கோடா! விளக்கிலே எண்ணெய் தீர்ந்துட்டுது. அதனால் விளக்கொளி மங்குது. இதுவரைக்கும் இல்லாத நச்சுக் காத்து இப்போ நிமர்ந்து வந்துட்டதா நீ நினைக்கறே. வெறும் திரி எரிஞ்சு முடியறதுக்குள்ளே நாம் வெளியே போயிடுவோம்."

கமதி கூறியபடி விளக்கை ஏந்திக் கொண்டு முன்னே நடந்தான். அவன் பின்னே சென்றான் செங்கோடன். இருவரும் உட்கோவில் பாதையை நெருங்குவதற்கு முன்னே விளக்கு அணைந்தது. திரியில் தெரிந்த சிவப்புப் பொறியும் சில நொடிகளில் கறுத்து மறைந்தது. அந்த இடத்தில் இருள் நிறைந்தது.

"செங்கோடா!" என்று அழைத்தான் கமதி.

"கமதி! நிதானமா நட!" என்றபடி தன் கையை நீட்டி, அவன் கையைப் பற்றிக் கொண்டான். இருவரும் அடிமேல் அடிவைத்து நடந்தார்கள். அவர்கள் படியை நெருங்கிய நேரத்தில் படியில் யாரோ இறங்கும் காலடி ஓசை கேட்டது. இருவரும் நின்றனர்.

உட்கோவிலின் படி வழியே இறங்கி வருபவர் யார்? "தாத்தாவாகத்தான் இருக்கும்" என்று இருவரும் நினைத்தனர்.

படியில் இறங்கும் காலடி ஓசை தெளிவாகக் கேட்டது. அவ்வாறு இறங்கியவன் பின்னைப் பெருமானான பாபு! அனுமார் கோவிலருகே சென்று வெடி வைக்காமல் உட்கோவிலுக்குச் செல்ல என்ன செய்யலாம் என்று ஆராய்ந்தான். பாறையான தரையைத் தோண்டி வழி உண்டாக்க முடியாது. வெடி வைத்துத் தகர்ப்பது ஒன்றைத் தவிர வேறு வழி தெரியவில்லை. பின்னைப் பெருமான் சோர்ந்து போனான்.

"இங்கே வெடி வைக்கத் தகர்க்

இவர்தான் சிலையில் உள்ளவர். உலகம் போற்றும் ரஷ்ய எழுத்தாளரும் ஞானியுமாகிய லியோ டால்ஸ்டாய்!

திறதைவிட, சோமு தாத்தா குடியிருக்கிற மண்டபத்தை வெடி வெச்சு தகர்த்திட்டா. அப்புறம் அவர் அங்கே இருக்க முடியாது. வெடி விபத்திலே அவர் இறந்தாலும் இறக்கலாம். அப்புறம், இந்தக் கோயிலுக்குள்ளே என்ன செய்தாலும் கேட்க ஆள் இல்லே'' என்று நினைத்த பிள்ளைப் பெருமாள் அனுமார் கோவிலிலிருந்து மெல்ல நடந்து, பெருமாள் கோயிலை வலமாகச் சுற்றிக் கொண்டு வந்தான். வெளியே போக வேண்டும் என்று நினைத்தவன், மனதை மாற்றிக் கொண்டு மூலஸ்தானத்தின் படியில் ஏறினான். அதன் முன் மண்டபத்தை நோக்கி நடந்த போது உட் கோயிலில் திறந்த வழி அவன் கண்ணில் பட்டது. அதன் அருகே வந்தான். திறந்த வழியில் படிகளைக் கண்டான். உடனே, ''இதுதான் அப்பா சொல்ல மாட்டேன்னு மறைச்ச ரகசிய வழியா இருக்கும்'' என்று நினைத்த பிள்ளைப் பெருமாள் சுற்றும் முற்றும் பார்த்தான். அருகே எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. ''இந்த வழி எப்படித் தோன்றியது? இதைத் திறந்தவர் யார்? உள்ளே யாராவது இருக்கிறார்களா?'' என்றும் கேள்விகள் எல்லாம் அவன் மனதில் தோன்றவில்லை. ''நமக்கு முன்னே யாராவது உள்ளே போய்ப் பொற்சிலைகளையும் நகைகளையும் எடுத்துப் போய்விட்டார்களோ?'' என்று மட்டும் சந்தேகப்பட்டான். உடனே அந்தப் படிகளில் இறங்கினான்.

இருளாக இருந்தாலும் படிகளில் இறங்குவது அவனுக்குச் சிரமமாக இல்லை. படிகள் முடிந்து சமதளத்தை அடைந்ததை உணர்ந்தான். இப்போது இருளில் திசை தெரியாமல் நடக்க முடியாமல் நின்று யோசித்தான். பொற்சிலைகள் எந்தப் பக்கம் இருக்கும்? தெரியவில்லை. ஒரு விளக்கு இருந்தால்... திடீரென்று தன்னிடம் சிகரெட் லைட்டர் இருப்பது நினைவுக்கு வந்தது. உடனே, பாக்கெட்டில்

கைவிட்டு அதை எடுத்துத் தட்டினான். 'டக்'கென்ற சத்தத்தைத் தொடர்ந்து சிறிய தீப்பிழம்பு தோன்றியது. அதன் ஒளியில் பிள்ளைப் பெருமாளின் முகம் தெளிவாகத் தெரிந்தது.

பிள்ளைப் பெருமாளுக்குச் சிறிது தூரத்தில் நின்றிருந்த செங்கோடனும் சுமதியும் தீப்பிழம்பின் ஒளியில் தெரிந்த முகத்தைப் புரிந்து கொண்டு திடுக்கிட்டனர். அதே ஒளியில் தமக்கருகே ஒரு கல் தூணிருப்பதைக் கண்ட செங்கோடன், சுமதியை இழுத்துக் கொண்டு அந்தத் தூணின் பின்னே போய் மறைந்து கொண்டான்.

பிள்ளைப் பெருமாளின் செவியில் அவர்கள் நகர்ந்த ஓசை கேட்டது. ஆனால், அவன், "ஆந்தையோ எலியோ வேறெதுவோ எழுப்பிய ஓசை' என்று நினைத்துக் கொண்டான். லைட்டரின் ஒளியில் முன்னே பார்த்தான். இரு வரிசைத் தூண்களுக்கு இடையே தான் நிற்பதை உணர்ந்தான். லைட்டரை முன்னே நீட்டியபடி, அதன் ஒளியில் பொற் சிலைகள் தெரிகின்றனவா என்று ஆராய்ந்தபடி நடந்தான். சுமதியும்செங்கோடனும்மறைந்திருந்த தூணைக் கடந்து நடந்தான். அவனோடு அந்த ஒளியும் செல்ல, சுமதியும் செங்கோடனும் இருந்த இடம் முன் போல இருண்டது.

பிள்ளைப் பெருமாள் பொற்சிலைகளை நெருங்கினான். அவன் கண்களில் அந்தச் சிலைகளும் சிலைகளுக்கு அணிவிக்கப்பட்டிருந்த நகைகளும் பட்டவுடன், "ஹா! ஹா! எவ்வளவு செல்வம்! நான் அதிர்ஷ்டசாலி! அதிர்ஷ்டசாலி!" என்று கத்தியவாறு துள்ளிக் குதித்தான். அந்தக் கத்தலின் போதே செங்கோடன் சுமதியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு படிகளை நோக்கி ஓடினான். படிகள் காலில் தட்டுப்பட்டதும் இருவரும் அவற்றில் ஏறி இரண்டே நிமிடங்களில் மேலே வந்து விட்டனர்.

"செங்கோடா, உன்னை நாம் பார்த்தது. உங்க மண்டபத்தை விலைக்கு வாங்க வந்த. தாத்தாவைக் கொலை செய்யவும் துணிஞ்ச கொலைகாரன் நானே?" — கமதி கேட்டாள்.

"கமதி, இவன்தான் கோயிலை வெடி வெச்சுத் தகர்க்கப் பார்த்த பாவி. முன்னே ஒருநாள் சினிமாக் காரங்க வீட்டு மாடியிலே தாடியில்லாமே ஒரு முகத்தைப் பார்த்ததாச் சொல்லியிருக்கேனே... அது இந்த முகந்தான். வீட்டை விலைக்குக் கேட்டவன், குறுந்தாடிபோட்ட சினிமாக் காரனு வந்து, கோயிலை வெடி வெச்சுத் தகர்க்கப் பார்த்தான். இப்போ, இந்தக் கொள்ளைக்காரனிடம் உட்கோயில் சொத்தை நாம் ஒப்படைச்ச மாதிரி ஆயிடுச்சே..."

"செங்கோடா, இவனை இங்கேயே சிறை வைப்போம்... உட்கோயிலை உடனே மூடுவோம்."

கமதி சொன்னவுடன், செங்கோடன் பெருமாள் பள்ளி கொண்ட இடத்துக்கு ஓடுனான். கமதியும் உடன் சென்றாள். இருவருமாக இரும்புச் சாவியின் வட்டப் பகுதியை, முன்பு திருப்பியதற்கு எதிர்த்திசையில் திருப்பினர். சாவி மெல்லச் சுழல, முன் மண்டபத்தில் தெரிந்த வழி மெதுவாக மூடிக் கொண்டது.

உடனே செங்கோடன் சாவியை எடுத்துக் கொண்டான். அவனும் கமதியும் கோயிலை விட்டு வெளியே ஓடினர்.

இரகசிய வழி மூடப்பட்டதை அறியாத பின்னைப் பெருமாள், பொற்சிலைகள் அணிந்திருந்த மாலைகளை அவசர அவசரமாகக் கழற்றினான். அவற்றை எடுத்துச் செல்லப் பையோ பெட்டியோ இல்லையே என்று கொஞ்சம் வருந்தினான். உடனே அவன் மூளை வேலை செய்தது. தனது சட்டையைக் கழற்றினான். சட்டைக்குள்ளே அணிந்திருந்த பனியனைக் கழற்றினான். இப்போது பனியன் இல்லாமல் சட்டை மட்டும் அணிந்து கொண்டான். பனியனில் தலை நுழைய விடப்பட்ட இடத்தைச் சுருக்கி இறுக்கி, அதை அதன் கைப்பகுதியால் மூடி போட்டான். பனியன் பையாக மாறியது.

அந்தப் பையில் நகைகளை அள்ளிக் கொட்டினான். அது கொள்ளும் அளவு போட்டு விட்டு மீதியை அங்கேயே விட்டு விட்டான். பனியன் பையை ஒரு கையில் எடுத்துக் கொண்டு, அங்கிருந்து வெளியேற முயன்றான். உட்கோயில் படிகளில் ஏறினான். அவன் தலை இடித்ததும் நின்றான்.

சிகரெட் லைட்டர் வெளிச்சத்தில் பார்த்தான். அவன் உள்ளே வந்த வழி அங்கே இல்லை.

வழி எங்கே?

யாராவது மூடிவிட்டார்களா?

எப்போது திறப்பார்கள்?

பின்னைப் பெருமாள் ஆத்திரத்தோடு, "கதவைத் திறங்க" என்று கத்தினான். பதில் இல்லை. அங்கே நிற்பதால் பயனில்லை என்பதை உணர்ந்த அவன் திரும்பவும் தரைவாரச் சிலைகள் அருகே வந்தான். அந்தச் சிலைகளைப் பார்த்தபடி ஒரு தூணருகே உட்கார்ந்தான். லைட்டரை அணைத்தான். சோர்வு மிகுதியால் அப்படியே தூங்கிப்போனான். திடீரென்று பின்னைப் பெருமாள் விழித்துக் கொண்டான். எவ்வளவு நேரம் தூங்கினான் என்பது அவனுக்குத் தெரியவில்லை. சிகரெட் லைட்டரை எரியச் செய்தான். உட்கார்ந்த நிலையில் இருந்த நரசிங்க மூர்த்தி அவனையே பார்ப்பது போல் இருந்தது.

பின்னைப் பெருமாளின் உள்ளம் நடுங்கியது. பெருமாள் சொத்தைக் கொள்ளையடிக்கிற தன்னைப் பெருமாள் தண்டிப்பாரோ?

பின்னைப் பெருமாள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, உட்கார்ந்திருந்த நரசிங்கப் பெருமாள் மெல்ல எழுந்தார். அதைப் பார்த்ததும் அவன் உடல் வியர்த்தது. "பெருமாளே! நரசிங்க மூர்த்தி! என்னை ஒன்றும் செய்துடாதே" என்று அவன் கத்தினான். ஆனாலும் நரசிங்க மூர்த்தி முகம் சிவக்கப் பெருங் கோபத்தோடு அவனை நோக்கி நடந்தார்.

(அடுத்த இதழில் முடியும்)

அது மழைக்காலம். தெருவெங்கும் மழைத் தண்ணீரானது தேங்கி ஈக்கள் வாழ்கின்ற இடமாக இருந்தது. பள்ளியின் நீண்ட மணி எப்போது ஒலிக்கும், என நினைத்தவாறே பள்ளி மாணவர்கள் அமர்ந்திருந்தனர். அதற்கு ஏற்றாற்போல அப்போது டிங்...டிங்...டிங்... என மணியடிக்கவும், கூண்டை விட்டுப் பறக்கும் சுதந்திரப் பறவைகளைப்போலக் குழந்தைகளும் வீடு செல்ல ஓடினர்.

மீனாவும் தன்னுடைய பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். மீனா ஒன்பதாம் வகுப்பில் படிப்பவள். அவள் அப்பா ஓர் ஏழை. ஆனால், மீனா படிப்பில் கெட்டிக்காரியாக இருப்பதாலும், மேலும் அவருக்கு ஒரே பெண் என்பதாலும் மீனாவுக்குப் பல சலுகைகளைத் தந்திருந்தார் மீனாவின் அப்பா.

மீனாவுக்கு நீண்ட நாட்களாகத் தன் தோழிகளிடம் உள்ளது போன்ற ஒரு குடையைத் தானும் வாங்க வேண்டுமென்ற ஆசை இருந்துவந்தது. அவள் தன் அப்பாவிடம் தனது ஆசையை வெளியிட்டாள். அவரும் அவளுக்கு ஒரு குடையை வாங்கித்தரச் சம்மதித்தார். அன்றும் மழை தூறிக் கொண்டிருந்தது. இன்றாவது அப்பா தனக்குக் குடை வாங்கி வந்தாரா எனக் கேட்கவேண்டும் என எண்ணமிட்டவாறே வீட்டை நோக்கி வேகமாகச் சென்றாள் மீனா.

வீட்டிற்குள் சென்றபோது அவளது அப்பா அவளுக்குப் பலவித இனிப்புகள் வாங்கி வந்திருப்பதைக் கண்டாள். ஆனால், அவள் தனக்குக் குடை வாங்கிவரவில்லையே என்ற கோபத்தினால் எந்த இனிப்பையும் சாப்பிடவில்லை. அவளுடைய தந்தை, "மீனா! ஏனம்மா இப்படி இருக்கிறாய்? நான் உனக்கு நாளை நிச்சயம் ஓர் நல்ல குடையாகப் பார்த்து வாங்கி வருகிறேன். இன்று இந்த இனிப்புகளை எடுத்துக் கொள்ளம்மா!" என்று சமாதானப் படுத்தினார்.

அவளும் அவ்வினிப்புகளைத் தின்று விட்டு ஒழுங்காக அமர்ந்து பாடம் படிக்கலானாள். அன்று இரவு அவளுக்குத் தன் அப்பா தனக்கு

வாங்கிவரப்போகும் குடையைப் பற்றிப் பல வண்ணக்கனவுகள் தோன்றிய வண்ணமே இருந்தன.

மறுநாள் பள்ளிவிட்டதும் சிட்டுப்போலப் பறந்து வந்த மீனு தன் அப்பாவிடம் "அப்பா! எனக்கு இன்றாவது குடைவாங்கி வந்தீர்களா?" எனக்கேட்டவுடன் அவள் அப்பா அவளுக்காகத் தான் வாங்கிவந்த குடையை எடுத்துக் காண்பித்தார். அதைப் பார்த்தவுடனேயே மீனுவுக்கு மிகுந்த ஏமாற்றமாகப் போய்விட்டது. ஏனெனில், மீனு தனக்குத் தன் அப்பா சிறியதாக மடக்கி, தன் பையில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவில் அழகான கலர்க்குடையை வாங்கி வருவார் என்றே நினைத்திருந்தாள். எனவே, அவள் ஒரே வார்த்தையாகத் தன் அப்பாவிடம், "அப்பா! எனக்கு இந்தக் குடை பிடிக்கவில்லை" எனக் கூறிச் செல்ல எத்தனித்தாள்.

அப்போது அவளின் தந்தை, "மீனு! நில்லம்மா! எப்போதும் நாம் வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்கலாகாது. அதன் பயனையே கருத வேண்டும். இதனை நீ எடுத்துச் செல்லும்போது இக்குடையின் நற்பயனை நீயே உணர்வாய்!" எனக்கூறிச் சென்றுவிட்டார்.

மறுநாள் காலை பள்ளி செல்ல ஆயத்தமானாள் மீனு. அப்போது மழை நன்கு வலுத்துவிட்டது. வேறு வழியின்றி அவள் அந்தக் கறுப்புக் குடையை எடுத்துக் கொண்டு பள்ளி சென்றாள். அவளின் தோழிகள் அக்குடையைப் பார்த்து, 'தாத்தா குடை' போல இருக்கிறது என்று பரிகாசம் செய்தனர். அவளுக்குத் தன் அப்பா இந்தக் குடையைப் போய் வாங்கி வந்தாரே எனக் கோபம் கோபமாக வந்தது. பள்ளி ஆரம்பிக்கும் மணி அடித்ததால் மாணவிகள் அக்குடையைப் பற்றிய பேச்சை அத்துடன் விட்டு வகுப்பில் சென்று அமர்ந்தனர். ஆனால், மீனுவுக்குத் தன் தோழிகள் செய்த கேலியால் மனம் வருந்தி அமர்ந்திருந்தாள்.

பள்ளி முடிந்ததும் மீண்டும் மழை ஆரம்பித்ததால், மீனு அக்குடையைப் பிரிக்க வேண்டியதாயிற்று. அவள் சிறிது தூரம் சென்றபின் வயதான மூதாட்டி ஒருத்தி குளிரில் நடுங்கியவாறும் மழையில் நனைந்து கொண்டும் நின்றிருந்தாள். அவளும் மீனுவின் வீட்டிற்கு அருகில் வசிப்பவள். எனவே, மீனு அவளிடம், "பாட்டி! என்னுடைய குடை பெரியதாய் இருக்கு. நீங்களும் இதிலே வாருங்கள். நான் உங்களை வீட்டில் கொண்டு விடுகிறேன்" என்றாள்; அதற்குச் சம்மதித்த பாட்டியும் அவளுடன் சேர்ந்து நடந்தாள். அவள் தன்வீடு வந்தவுடன் மீனுவை அவளுடைய உதவிக்காக மனமார வாழ்த்தினாள்.

மீனு அப்போதுதான் தன் தந்தை கூறியதை நினைத்து அகமிக மகிழ்ந்தாள். தன்னுடைய தோழிகளிடம் குடை இருந்தும் அவை சிறியவையாய் இருந்ததால் அவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மையிருந்தும் உதவ முடியாமற் போய்விட்டது. தன்னிடம் பெரிய குடை இருந்ததால் தானே தன்னால் உதவமுடிந்தது என்பதை நினைத்தபோது அவளுக்குத் தன் தோழிகள் காலையில் செய்த பரிகாசமெல்லாம் மறந்து உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது!

பிரான்ஸ் நாட்டுக் கதை

இளமையும் முதுமையும்

மூலம்: பெனெ லோன் (1651-1715)

தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

வெகு காலத்திற்கு முன்னால் ஜிசெல் என்று ஓர் அரசி இருந்தாள். அவள் கூரிய அறிவு படைத்தவள். நாட்டைத் திறமையாக ஆட்சி செய்தாள். பொக்கிஷத்தில் செல்வங்கள் குவிந்தன. வெள்ளிக் கூரை, தங்கச் சுவர்கள், முத்தும், வைரமும் ஒளிரும் கதவுகள், நவரத்தினங்கள் இழைத்த நாற்காலிகள் — இவ்வாறு அவளுடைய அரண்மனை ஓர் அதிசய உலகமாகக்காட்சி அளித்தது-சுருங்கச் சொன்னால், ஜிசெல் ஒரு தேவதை. அவள் ஏதாவது ஒன்றுக்கு ஆசைப்பட்டு, மனத்தால் நினைத்தாலே போதும். அவளுடைய எண்ணம் உடனே நிறைவேறிவிடும்!

ஆனால், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் தடுத்து நிறுத்தும் சக்தி அவளுக்கு இருக்கவில்லை. அதுதான் அவளுடைய வயது! அவளுக்கு நூறு வயது ஆகிற்று- முதுமை அடைந்தாள். எவ்வளவோ ஆசைப்பட்டும் அவளால் மறுபடியும் இளமையோடு இருக்க முடியவில்லை.

இளமைப் பருவத்தில் ஜிசெல் எவ்வளவு அழகாக இருந்தாள்! மலரைப் போன்ற முகம், நிலவைப் போன்ற சிரிப்பு. அவளுடைய அழகையும், அறிவையும் யாவரும் போற்றினர்.

காலம் சுழன்றது. ஜிசெல் இப்போது முற்றிலும் மாறி விட்டாள். தலை நரைத்தது. தோல் சுருங்கியது. உடல் தளர்ந்தது. கூன் விழுந்தது. கால்கள் நடுங்கின. வாத நோய் பிடித்தது. தாமரை போன்று இருந்த கண்கள் நோயுற்று, இப்போது தாரை தாரையாக நீரைச் சொரிந்தன. பார்வை மங்கியது. சளியும், இருமலும் சேர்ந்தன. ஓயாமல் அவள் இருமினாள். எச்சிலைத் துப்பிக் கொண்டே இருந்தாள். அது பார்ப்பதற்கு வேதனையாகவும், அருவருப்பாகவும் இருந்தது.

அழகே உருவான ஜிசெல் இப்போது அருவருப்பான ஜிசெலாகவும், கோரமான ஜிசெலாகவும், பயங்கரமான ஜிசெலாகவும் மாறி விட்டாள். ஜிசெல் அரசிக்குக் காணிக்கை செலுத்த வந்தவர்களும், அரசு அலு

வயவர்களும் அவளை நேருக்கு நேர் சந்திக்க அஞ்சித் தங்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர்.

ஜீசெல் ஒரு காலத்தில் எத்தனை சுறுசுறுப்பாக இருந்தாள்! எத்தனை எதிர்பார்ப்புகளோடு இருந்தாள்! இப்போது அவளுக்கு வாழ்வே கசித்தது. முதுமை எய்தி நலிந்து போன தன் உருவத்தைக் காண அவளுக்கே பிடிக்கவில்லை. முதற் காரியமாக அரண்மனையிலிருந்த கண்ணாடிகளை அப்புறப்படுத்தினாள். அவற்றை உடைத்து எறியுமாறு உத்தரவிட்டாள். இளையவர்களையும், அழகானவர்களையும் கண்டு அவள் பொறாமைப்பட்டாள். அவர்களை வேலையிலிருந்து நீக்கினாள். கூன் விழுந்தோரையும், நரை முற்றவர்களையுமே அவள் அரண்மனைப் பணியில் அமர்த்தினாள்.

ஒரு நாள் கோரி சாந்த் என்னும் இளம் பெண் அரசியின் முன்னால் அழைத்து வரப்பட்டாள். அவளுக்குப் பதினாறு வயதிருக்கும். அவள் பேரழகி. ஆனால், பரம ஏழை.

ஆசிரியை: தப்புத் தப்பாக எழுத மாட்டேன் என்று 108 தடவை இம்போசிஷன் எழுதச் சொன்னால், 'தாப்பு தபுப்பா எதும மட்டாட்டேன்' என்று எழுதியிருக்கிறே...!

“இவளை ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள்? இழுத்துச் செல்லுங்கள், வெளியே!” என்று அரசி கோபத்தால் சீறினாள்.

கோரி சாந்தின் அம்மாவும் கூடவே வந்திருந்தாள்.

“வணக்கத்திற்குரிய அரசியே! என் மகள் ஒரு தேவதை. அவளிடம் சில அபூர்வ சக்திகள் உண்டு. அவள் நினைத்தால், தன்னுடைய இளமை, அழகு யாவையும் ஒரு நொடிப் பொழுதில் உங்களுக்குத் தர முடியும்!” என்று அப்பெண்ணின் தாய் சொன்னாள்.

“அப்படியா! சரி. அதற்குப் பரிசாக நான் என்ன கொடுக்க வேண்டும்?” என்று அரசி கேட்டாள்.

“பொக்கிஷத்திலுள்ள செல்வங்கள் அனைத்தையும் தர வேண்டும். அது மட்டும் அல்ல. உங்கள் மணி மகுடத்தையும், செங்கோலையும் கூடத் தர வேண்டும்! தந்துவிட்டுக் கிராமத்திற்கு வந்து குடிசையில் வாழ வேண்டும்!” என்று அம்மா பதிலளித்தாள்.

“இந்த அரச பதவி ஒன்றுதான் என்னிடம் இப்போது பாக்கி உள்ளது. இதையும் நான் இழக்கத் தயாராக இல்லை. யாரும் இதைப் பறிக்கவும் அனுமதிக்க மாட்டேன்... இப்படியே நான் செத்துப் போனாலும் பரவாயில்லை!” அரசி சொன்னாள். ஏழைப் பெண்ணும், அவளுடைய அம்மாவும் கிராமத்திற்குத் திரும்பிச் சென்றனர்.

ஜீசெல் அரசிக்கு உடல் நலம் மேலும் குன்றியது. நோய் அதிகரித்தது. பெண் செவிலியர்கள் கூட அருகில் செல்லப் பயப்படும் அளவுக்கு அரசியின் வியாதி முற்றியது. உடலில் துர்நாற்றம் அடித்தது. மருத்துவர்கள் பாடுபட்டனர். ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. “ஒரு சில நாட்களில் அரசி இறந்துவிடுவாள்” என்று மருத்துவர்கள் கூறினர்.

ஜீசெல் அரசியின் மனத்தில் ஒரு பெரிய போராட்டம் நடந்தது —

“வாழ்வா? சாவா?”

“வறுமையா? செல்வமா?”

“கிடைத்தற்கரிய இளமைப் பருவத்தை மறுபடியும் அடைந்து நீண்ட

காலம் இன்பமாக வாழலாமா? அல்லது மருத்துவர்கள் குறிப்பிட்டபடி ஒரு சில தினங்களில் மரணத்தைத் தழுவி, வாழ்வுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கலாமா?"

— இப்படிப் பல கேள்விக்குறிகள் அவனுடைய மனத்தில் எழுந்தன. கடைசியில் அவன் ஒரு தீர்மானத் திற்கு வந்தான். "அந்த ஏழைப் பெண்ணைக் கூப்பிடுங்கள்!" என்று அவன் ஆணையிட்டான்.

அலுவலர்கள் அந்த இளம் பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்து, மீண்டும் அவளை அரசியின் முன்பு நிறுத்தினர்.

"பெண்ணே! நான் மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கிறேன். நீ கேட்டபடியே அரச பதவியையும் என் செல்வங்கள் அனைத்தையும் உனக்குத் தருகிறேன்! பதிலாக, உன் இளம் வயதையும், அழகையும் எனக்குக் கொடு!" என்று அரசி வேண்டினாள்.

"அரசியே! அரண்மனை வாழ்விற்கும், அரச போகத்திற்கும் ஆசைப்பட்டு, என் வயதையும், வனப்பையும் உங்களுக்கு வழங்கிவிட்டால், உடனேயே நானும் உங்களைப் போலவே வாடி, வதங்கி, வற்றி, வயோதிகம் அடைந்து விடுவேன், இல்லையா? சென்ற முறை இந்த பேரத்திற்கு நீங்கள் சம்மதிக்கவில்லை. இது என்னுடைய முறை! இப்போது இதை ஏற்க நான் தயாராக இல்லை!" என்று அந்த இளம் பெண் கண்டிப்பாகச் சொன்னாள்.

அவ்வாறு அந்தப் பெண் கண்டிப்பாகப் பேசினாலும் அவளுடைய மனத்தின் ஆழத்தில் "நான் வாழ்வில் உயர வேண்டும்" என்ற ஓர் ஆர்வம், இலட்சியம், கனவு இருந்து கொண்டே இருந்தது. அது அவளைத் தூண்டிக் கொண்டே இருந்தது. அவளும் குழம்பினாள். அவளுக்குப் போதிய அனுபவம் இருக்கவில்லை. "நீ ஓர் அரசியாக வாழலாம்!" என்று ஜிசெல் கூறிய வார்த்தைகள் அந்தப் பெண்ணின் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன. கடைசியில், அரசியின் கவர்ச்சியான வேண்டுகோளுக்கு அவள் இணங்கினாள்.

பேரம் முடிந்தது!

ஒரு கண நேரத்தில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஜிசெல் புதிய உருவம் எடுத்தான். கூன் நீங்கியது. கம்பீர மாக நின்றான். மேனி பொன்போல் மின்னியது. கண்கள் ஒளி வீசின. முகத்தில் இளமைக் களை தவழ்ந்தது. சபையோர்கள் வியப்பால் வாய டைத்து நின்றனர்!

ஒப்பந்தப்படி ஜிசெல் இப்போது கிராமத்துக்குப் போக வேண்டும். கந்தை அணிந்து, கோரி சாந்தின் குடி சையில் வாழ வேண்டும்! அதற்கு மூற்

கொடுக்காத காரணம்

"நான் உங்கிட்டே பத்து ரூபாய் கொடுத்து எதிர் வீட்டுக் கண்ணாடி போட்ட மாமாவிடம் கொடுக்கச் சொன் னேனே! கொடுத்தியா?"

"இல்லேப்பா! நான் போன சமயம் அவர் கண்ணாடி போடலே..."

— மணியன் தர்மலிங்கம்

றிலும் மாறாக கோரிசாந்த் தன் இளம் வயதை இழந்தான். அழகை இழந் தான். பார்ப்பவர் கண்களுக்குப் பயங் கரமாகத்தோன்றினான்! இருந்தபோதி லும் அவன் அந்தப் புகழ்பெற்ற அரண்மனையில் வாழ்ந்து கொண்டு, அரசியாகி, அதிகாரம் செலுத்தினான்.

ஒருநாள் ஒரு பணிப்பெண் தற் செயலாக ஒரு கண்ணாடியைக் கோரி சாந்திடம் நீட்டினாள். இளமை வடி வம் மாறிக் கோர வடிவம் வந்துள்ள தைக் கண்ணாடி தெளிவாகக் காட்டி யது. அவன் பெருமூச்சு விட்டான். "எனக்குக் கண்ணாடி தேவை இல்லை. இனிமேல் கொண்டு வராதே!" என்று கோரி சாந்த் கூறினான்.

"ஒரு காலத்தில் பணம் வேண்டும் என்று நான் பகற் கனவு கண்டேன். இப்போது அரசாங்கத்தின் பணமெல் லாம் என் கைக்கு வந்திருக்கிறது. இதை வைத்துக் கொண்டு அமைதி யாக வாழலாம் என்று எண்ணு கிறேன். ஆனால் முடியவில்லையே! முதுமைப் பருவம் என்னை மிகவும் படுத்துகிறதே! இந்தப் பொன்னும் மணியும் என்னுடைய கஷ்டங்களைக் குறைக்கவில்லையே! ச...!" என்று கோரி சாந்த் அலுத்துக் கொண் டான்.

கோரி சாந்த் நல்ல இசைக் கச்சேரி களைக் கேட்க விரும்பினான். ஆனால், முதுமைப் பருவம் அடைந்து விட்ட தால் அவனுடைய காதுகள் கேட்கும் சக்தியை இழந்திருந்தன.

குளிர்ச் சோலைகளிலும், எழிற் புல் தரைகளிலும் தன் தோழிகளுடன் முன்பு ஓடி ஆடியதைப் போலவே, கோரி சாந்த் இப்போதும் விளையாட எண்ணினான். ஆனால், இப்போது அவ னால் கால்களை ஊன்றி நிற்கக் கூட முடியவில்லை. ஒரு தடியின் உதவியால் தான் நின்றான்.

அவன் பெரிய விருந்துகளை அமைக்க விரும்பினான். ஆனால், அவனால் எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை. நல்ல உணவுகளைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பு வந் தது. வயிற்றைப் புரட்டிக் கொண்டு வாந்தி எடுக்கும் நிலை வந்தது. அவன் பற்களை இழந்திருந்தான். ஆகவே, கூழ்தான் அவனுக்கு ஆகாரம்!

"எனக்கு எந்தவிதப் பயனும் தராத இந்த அரியணைக்கும், அளவில் லாத செல்வங்களுக்கும் ஆசைப் பட்டு என் இளம் வயதையும், இனிய பருவத்தையும் தியாகம் செய்துவிட் டேனே! இது என்ன பைத்தியக்காரத் தனம்!" என்று கோரி சாந்த் தன்னைத் தானே நொந்து கொண்டான்.

கோரிசாந்த் முன்பு ஆடுகளை மேய்த் தான். காடுகளில் உல்லாசமாகத் திரிந் தான். அவனை இப்போது நாட்டு நிர்

வாகத்தை நடத்தச் சொன்னால், அவளால் எப்படி முடியும்? ஒன்றுமே புரியாமல் அவள் மிகவும் கஷ்டப்பட்டாள்!

'ஜிசெல் என்ன ஆனாள்?' என்று பார்ப்போமா? முதுமைக் கோலங்கள் மறைந்த உடனேயே அவள் முற்றிலும் அவற்றை மறந்து விட்டாள். வீட்டையும், நாட்டையும் அதிகாரம் செய்து கொண்டிருந்த அவளுக்கு ஏழைக் குடிசையில் எளிமையாக வாழக் கட்டோடு பிடிக்கவில்லை!

"எப்போதும் கந்தல் ஆடையைக் கட்டிக் கொள்ள என் தலை எழுத்தா என்ன...? அழகும், இளமையும் இருந்து என்ன பயன்? அழகான ஆடை அணிகள் இல்லையே!

நாகரிகம் இல்லாத இந்தக் கிராம வாசிகளின் நடுவில் நான் மட்டும் அழகாக இருந்து என்ன பயன்? என் அழகை யார் ரசிக்கப் போகிறார்கள்? இந்தக் கிராமவாசிகள் என்னை வெறுத்து ஒதுக்குகிறார்களே? ஆடு மாடுகள் மேய்க்கச் சொல்கிறார்களே...? இது என்ன அநியாயம்...!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு ஜிசெல் புலம்பினாள்.

"சே! அரச பதவியையும், அளவற்ற செல்வங்களையும் தெரியாத்தனமாக இழந்து விட்டேனே? அவை திரும்பவும் எனக்குக் கிடைத்தால்... எவ்வளவு நன்றாக இருக்கும்...? அரசியாக மாறினால் நான் சீக்கிரமே செத்து விடுவேனாம்...! அதனால் என்ன? உலகில் அரசிகள் சாவதே இல்லையா என்ன? இளம் வயதை எய்த வேண்டும் என்பதற்காக இப்படி ஓர் இழிந்த செயலைச் செய்வதை விட, நோயை அனுபவிக்கவும், சாவைச் சந்திக்கவும் எனக்குப் போதிய தைரியம் இருக்க வேண்டாமா?" ஜிசெலின் சிந்தனைகள் இவ்வாறு ஓடின.

கோரிசாந்தும், ஜிசெலும் மீண்டும் சந்தித்தனர். ஜிசெலின் ஆசைகளைக் கோரி சாந்த் புரிந்து கொண்டான்.

"நான் ஒரு தேவதை. இரண்டாம் முறையும் என்னால் நம்முடைய வயதை மாற்றிக் கொள்ள முடியும். சம்மதிக்கிறீர்களா?" என்று கோரி சாந்த் கேட்டான். ஜிசெல் ஆவலோடு சம்ம

ரித்தான்.

அவர்கள் இருவரும் மறுபடியும் தங்கள் பழைய வயதையும் அதற்கேற்ற வாழ்க்கை நிலையையும் அடைந்தனர். ஜிசெல் திரும்பவும் அரசி ஆனாள். அவளை மூப்பும், பிணியும் பற்றின. கோரி சாந்திற்குப் பழைய இளமையும், அழகும் திரும்பின. அவள் ஏழை ஆனாள்.

ஜிசெல் நோயின் கடுமை தாங்காமல் கதறினாள். முன்பின் யோசிக்காமல் இரண்டாம் முறையாகத் தன் வயதை மாற்றிக் கொண்டதற்காக ஜிசெல் மிகவும் வருந்தினாள். அவளுடைய மனம் அலை பாய்ந்தது. அவள் அமைதியின்றித் தவித்தாள்.

ஜிசெல் கோரி சாந்தை அரண்மனைக்கு அழைத்தாள்.

"இன்னொரு முறை நாம் வயதை மாற்றிக் கொள்வோமா?" என்று ஜிசெல் கேட்டாள்.

"அரசியே! நம் இருவருடைய வாழ்வையும் நான் நன்றாகச் சோதித்து உணர்ந்து கொண்டேன். சதா நோயிலும், வலியிலும், கஷ்டத்திலும் மூழ்கியுள்ள உங்களைப் போன்ற வயது முதிர்ந்த ஓர் அரசியாக இருப்பதைவிட, ஆடு மேய்த்தாலும், அரை வயிற்றுக்கு உண்டாலும் ஆனந்தமாக ஆடித் திரியும் ஓர் ஏழைப் பெண்ணாகவே இருக்க விரும்புகிறேன். இளமைப் பருவம் என்பது ஈடு இணையில்லாத ஒன்று. மிகமிக அரியது. அதற்கு விலையே இல்லை. அதன் உயர்வை இப்போதுதான் நான் புரிந்து கொண்டேன். இனிமேல் பேரம் பேச மாட்டேன். வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே ஏழைக் கோரி சாந்த் தன் கிராமத்தை நோக்கிச் சுறுசுறுப்பாக நடக்கத் தொடங்கினாள்.

ஓவியமாகலாம்



பிருந்தாவனக் கவியரங்கம்

கத்தரிக்காய் ராஜாவுக்குக் கல்யாணம்!

காய்கறிகள் கூட்டத்திலே
கத்தரிக்காய் ராஜா — அந்தக்
கத்தரிக்காய் ராஜாவுக்குக்
கல்யாணமாம் ஜோராம்.

பொருத்தமான பெண்ணைத்தேடி
ராஜா போறாராம் — அவர்
அடுத்ததெரு மார்க்கெட்டிலே
வந்து நின்றாராம்.

நல்லநல்ல வெண்டைக்காய்
அழகைப் பார்த்தாராம் — அது
எல்லாரையும் கேலிசெய்யும்
பேச்சைக் கேட்டாராம்.

வாயாடிப் பொண்ணுமில்ல
வம்புக்காரப் பொண்ணு — இவ
வாழ்வதற்குத் தகுதியில்ல
வேண்டாம் என்றாராம்.

குட்டிகுட்டி சுண்டைக்காய்
பேச்சைக் கேட்டாராம் — அதன்
அடக்கமான குணத்தைக்கண்டு
சொக்கிப் போனாராம்.

அடுத்தநிமிடம் சுண்டைக்காயை
அழைத்துக் கேட்டாராம் — அதும்
ஆனந்தமாய்க் கல்யாணத்துக்கு
ஒக்கக் கேட்டாராம்.

— ரா. ஸ்ரீதர் (4544). சென்னை — 104.

சிறுவனும் கோழியும்

கோழியம்மே! கோழியம்மே!
எங்கே போறீங்க!
குப்பை மேட்டைக் கிளறிப் பார்க்கப்
போறேன் நானுங்க!

குப்பை மேட்டில் என்ன இருக்கு
சொல்லித் தாருங்க — என்
தொப்பைக் கேற்ற உணவிருக்கு
வந்து பாருங்க!

தேடிப் பிடித்துச் சும்மா தின்ன
விரும்புகிறீங்களே!
தொண்டையிலே கொட்டுமுன்னே
விழுங்கிவிடுங்களே!

அலைந்து ஓடும் புழுவைக் கொத்தி
விழுங்குறீங்களே — அட
வயிற்றிலொட்டை போட்டதுபோல
கலங்குறீங்களே!

மருத்துவரை அழைத்து வந்து
காட்டவாருங்க!
பாயசத்தை விட்டு நீங்க
சைவமாகுங்க!

சைவமிப்போ முட்டை நன்றாய்ச்
சாப்பிடுறாங்க — நான்
சைவமாகும் சாப்பிட்டேப்பம்
விட்டிடுவோங்க!

அம்மா என்னைப் பொரிப்பதாக
இன்று சொன்னாங்க — அவோ
உங்க வயிற்றில் தேனு, புழு
எனக்கு வேண்டாங்க!
— பி. வெற்றிச்செல்வம் (13,033),
திருவாரூர்.

ஊக்கம் குறைந்ததேனோ? — வாழ்வில்
உண்மைத்தூக்கம் கொண்டேனோ?
நோக்கம் நிறைவேற — சுதந்திர
தோன்புகள் தொடர்வோம் நாம்!

வெற்றி அடைந்துவிட்டோம்; — தேச
விடுதலை பெற்றுவிட்டோம்!
பெற்ற சுதந்திரத்தை — நாளும்
பேணிடல் வேண்டாமோ?
—ஜி. நவநீதகிருஷ்ணன் (18,342),
அருப்புக்கோட்டை.

சுதந்திரம் சும்மாவா கிடைத்தது?

சும்மா கிடைக்கவில்லை — சுதந்திரம்
சுலபமாக் கிடைத்ததில்லை!
கம்பிகள் எண்ணினரே? — பெற்றது
சுகமாக வாங்கினரோ?

காக்கை குருவியைப் போல் — நம்மைக்
கருதியே சுட்டாரும்
தூக்குக் கயிற்றினிலே — உடல்கள்
தொங்கிய போதிலுமே

வேண்டும்

எல்லோரும் ஒன்றாகக் கூடவேண்டும்;
எப்போதும் இன்முகமாய்ப் பேசவேண்டும்;
நல்லதையே எந்நாளும் நினைக்க வேண்டும்;
நாட்டுக்கு உழைத்தோரைப் போற்ற
வேண்டும்

பெற்றோரைத் தெய்வமென வணங்க
வேண்டும்;
பெரியோரின் சொற்களுக்கு இணங்க
வேண்டும்;
கற்றிட்ட வழிதனிலே நிற்க வேண்டும்;
[illegible] சோர்வின்றி வாழ்தல் வேண்டும்.

சாதிக்குச் சாவுமணி அடிக்க வேண்டும்;
சமத்துவச் சமுதாயம் உழைக்க வேண்டும்;
தீமைக்குத் தலைசாய்த்து நிற்க வேண்டும்;
தோல்வியிலே பண்பைக் காக்க வேண்டும்.

சுதந்திரம் உண்டென்று ஆட வேண்டும்;
ஊர்தோறும் தெய்வமென்று பாட வேண்டும்;
அருட்தாயின் நாடெல்லாம் செழிக்க
வேண்டும்;
அற்புதக் கவிதைகளைப் பொழிய வேண்டும்.
—ஆ. காமராசு (7608), [illegible] — 10.


பரமஹம்சர் சொன்ன பாலர் கதைகள்
கதை: குமரன் படம்: விஜு
நமது நாட்டில் எத்தனையோ மகான்கள் வாழ்ந்தார்கள். அவர்களுள் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒருவர்.
ராமகிருஷ்ணர், மிகப் பெரிய தத்துவங்களையும் எளிய கதைகளால் விளக்குவார்!
ஒரு கதை சொல்கிறேன், கேளுங்கள்!
ஒரு சாது காட்டில் சீடர்களுடன் வசித்தார்.
ஈசன் எங்கும் இருக்கிறான், எல்லோரிடமும் இருக்கிறான். இதை உணர்ந்து எல்லோரையும் வணங்குங்கள்!
சீடர்கள் ஹோமம் வளர்க்கத் தேவையான விறகுக்காகக் காட்டுக்குள் சென்றனர். அப்போது...
ஓடுங்கள்! ஓடுங்கள்! மதயானை வருகிறது!
சீடர்களில் ஒருவனைத் தவிர மற்ற அனைவரும் ஓடி விட்டனர். அந்த ஒருவன்...
முட்டாள்களே! ஏன் ஓடுகிறீர்கள்!

ஈசன் எங்கும் இருப்பதாக குருநாதர் சொல்லவில்லையா? யானையும் நாராயணன் தானே....
மதயானை நெருங்கி வந்தது...
நான் ஏன் ஓடணும்? மதயானையிடமும் நாராயணனைக் கண்டு வணங்குவேன்!
யானை அந்தச் சீடனை கோபத்துடன் சுழற்றி வெகுதூரத்தில் வீசிவிட்டது!
யானை ஓடிச் சென்ற பிறகு, மற்ற சீடர்கள் காயமடைந்தவனைத் தூக்கிக் கொண்டு...
குருதேவரிடம் சென்றார்கள். நடந்ததைச் சொன்னார்கள்.
மயக்கம்தான்; நீர் தெளிக்கிறேன், காயங்களுக்குப் பச்சிலை வைத்துக் கட்டுவோம்.

சற்று நேரம் சென்று சீடன் கண் விழித்தான்.
குருதேவா, வணக்கம்!
ஐயா! நாராயணனை மனிதன் முதலிய எல்லா ஜீவராசிகளிலும் இருப்பதாக நீங்கள் தானே சொல்லிக் கொடுத்தீர்கள்! ஆகவே யானை-நாராயணனை வணங்கி நின்றேன்!
அது சரி, யானை-நாராயணன் வந்தது உண்மைதான்; ஆனால் அதற்குமுன் யானைப் பாகன்-நாராயணன் வந்தானே, உன்னை எச்சரித்தானே!
அப்பனே! மதயானை வருவதை அறிந்தும் நீ ஏன் ஓடவில்லை?
எல்லோரும் நாராயணன் எனில், யானைப் பாகனுடைய வார்த்தைகளை நீ ஏன் மதிக்கவில்லை?
தவறுதான், சுவாமி!
ராமகிருஷ்ணர் கூறினார்:
கடவுள் எல்லா உயிர்களிலும் இருக்கிறார். ஆனால் நல்லவரோடு கூடிப் பழகலாம்; துஷ்டர்களைக் கண்டால் தூர விலக வேண்டும்.

அப்போது ஒரு இளைஞன்...
குண்டர்கள் கெடுதல் செய்தால் சும்மா இருப்பது சரியா?
ஒரு மைதானத்தில் சில இடையர்கள் மாடு மேய்த்துக் கொண்டிருந்தனர். ஓர் அந்தணன் அந்தப் பக்கம் வந்தான்.
சரியான கேள்வி! அதற்கு இன்னொரு கதை சொல்கிறேன்!
ஐயா, ஜாக்கிரதை! இந்த வழியில் ஒரு கொடிய விஷப் பாம்பு இருக்கிறது!
அந்தணன் அலட்சியமாக...
எனக்கு மந்திரம் தெரியும்; பயமில்லை!
அந்தணனைக் கண்டு பாம்பு படமெடுத்துச் சீறியது...
ஆனால் அந்தணனின் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டுப் பணிந்தது. மண் புழு போல் கிடந்தது.
ஏ, பாம்பே! இந்த வழி செல்வோருக்கெல்லாம் நீ கஷ்டம் தந்து வருகிறாயாமே!


உனக்கு ஒரு மந்திரம் தருகி றேன். அதை ஜபித்தால் பக்தி உண்டாகும். பிறருக்குத் தீங்கு செய்யமாட்டாய்!
மந்திரம் ஜபித்தும் கடவுளை வணங்கி வந்தது. சாதுவாக மாறியது.
பாம்பு யாரையும் கடிப்பதில்லை என்று தெரிந்ததும்....
கல்லால் அடிடா!
மண்புழு மாதிரி நெளியுது!
பாம்பு இறந்து விட்டதாக எண்ணி, சிறுவர்கள் போய் விட்டனர்...
உடல் நொறுங்கி, அசையவும் முடியலே! இனி இரவில்தான் இரை தேடவேண்டும்; உதிர்ந்த பழங்களைத் தான் உண்ணவேண்டும்....
என்ன, எப்படி இருக்கிறாய்...? மெலிந்து விட்டாயே?
நான் சாதுவாகி விட்டதால் என்னைக் கல்லால் அடித்தார்கள்; வாலைப் பிடித்துச் சுழற்றித் தரையில் அடித்தார்கள்....

அட அசடே! 'மற்றவர்களைக் கடிக்காதே' என்றுதானே சொன்னேன். 'சீறாதே' என்று கூறவில்லையே? சீறி, அவர்களை நீ ஏன் பயப்படுத்தவில்லை?
பாம்பு அன்று முதல் சீற ஆரம்பித்தது. அச்சமின்றி வாழ்ந்தது. பிறருக்குத் தீங்கு செய்யாமலும் இருந்தது...
ஐயோ! பாம்பு!
கடிச்சுடும், ஓடு! ஓடு!
பரமஹம்சர் கதையைக் கூறி முடித்தார்...
நமக்குத் தீங்கு நேராதிருக்கத் துஷ்டர்களிடம் சீற வேண்டும்: ஆனால் அவர்களுக்கு நாம் தீமை செய்யலாகாது!
அப்போது ஒரு சிஷ்யன் எழுந்து...
சுவாமி எந்தக் காரியத்தை முடிக்கும் உபாயம் என்ன?
மனத்தில் உறுதி - வைராக்கியம் - தேவை. அதற்கும் ஒரு கதை சொல்லட்டுமா?
ஒரு ஊரில் மழை பெய்யாமல் வறட்சி ஏற்பட்டது... இரு குடியானவர்கள்....
பூமி வெடிச்சுக் கிடக்கே... எப்படி பயிர் பண்றது?
தூரத்தில் நதி ஓடுகிறது. வாய்க்கால் வெட்டி நீர் கொண்டு வருவோம்.


வெட்டும்போது அவன் மனைவி வந்து...
எம்மாம் நேரம் வேலை செய்வே? வீட்டுக்கு வந்து குளிச்சுச் சாப்பிடு. நாளைக்குப் பார்த்துக்கலாம்...
அந்த விவசாயி மனைவி பேச்சைக் கேட்டு விட்டுச் சென்றான்...
நீ கூப்பிட்டு நான் வராம இருப்பேனா...
... உண்டு உறங்கினான்.
கொர்! கொர்!
மற்றொரு குடியானவனையும் மனைவி வந்து அழைத்தாள்...
சோறு ஆக்கி வெச்சிருக்கேன், ஆறிப் போவுது...
உனக்குப் புத்தியிருக்கா? இன்னைக்குச் சாப்பிட்டு விட்டால் ஆச்சா?
... பூமி விளையல் லென்னு நாளைக்குச் சோறில்லாமல் எல்லோரும் சாக வேண்டியதுதான்! வயலுக்குத் தண்ணீர் கொண்டு வந்த பிறகுதான் குளிப்பேன், சாப்பிடுவேன்... போ! போ!


குடியானவன் நாள் முழுவதும் உழைத்துக் கால்வாய் அமைத்து விட்டான்...
களகளன்னு நதி நீர் வயலில் பாயுது! எத்தனை ஆனந்தமா இருக்கு...!
வீடு திரும்பினான்.
இப்ப எனக்குக் குளிக்க கொஞ்சம் வெந்நீர் போட்டுக் கொடு! சோறாக்கிப் போடு!
சில தினங்கள் சென்று இரு விவசாயிகளும் சந்தித்த போது....
என்ன கால்வாய் வெட்டும் வேலை எந்த மட்டில் இருக்கு?
என்னிக்கோ. வெட்டி முடிச்சுட்டேனே!
அதெப்படி? நான இன்னும் பாதி தூரம் கூட வெட்டி முடிக்கலையே?
வைராக்கியம் இருந்தாத் தான் எதையும் சாதிக்க முடியும்!
ராமகிருஷ்ண பரமஹம்சர் கதை கூறி முடித்தபோது...
எடுத்த காரியத்தைச் செய்து முடிக்க நெஞ்சுறுதி வேண்டும். மனதை வேறு திசைகளில் அலைய விடாமல் கட்டுப்படுத்த வேண்டும்!



ஒருநாள் ஓர் இளைஞன் பரமஹம்ஸரிடம் வந்து....
சுவாமி வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?
அப்பனே! ஒவ்வொரு பருவத்தில் நமக்கு ஒவ்வொரு லட்சியம் உள்ளது. அந்த லட்சியத்தை அடைய உழைக்க வேண்டும்.....
...குழந்தைக்குப் பால்குடித்து வளர்வதே லட்சியம்; சிறுவனுக்கு விளையாடுவதே லட்சியம்; வாலிபனுக்கு நன்கு படித்து ஞானம் பெறுவதே குறிக்கோள்... ஒரு விறகு வெட்டி இருந்தான்...
காட்டின் ஒரு பகுதியில் அவன் விறகு வெட்டியபோது ஒரு ரிஷியைக் கண்டான்....
வணக்கம் சாமி!
இங்கேயே நிற்காதே; முன்னே போ!
விறகு வெட்டிக்கு ஒன்றும் புரியவில்லை...
எதுக்கு ரிஷி முன்னே போகச் சொல்றாரு? இங்கேயே நிறைய மரங்கள் இருக்கே...! விறகு வெட்ட....?
என்றாலும் ரிஷியின் ஆணையை மீற அஞ்சிய விறகு வெட்டி, காட்டின் முன்னேறிச் சென்றான்...
அடடே! சந்தன மரங்கள்!



சந்தன மரங்களை வெட்டி வந்து விற்ற விறகு வெட்டி, பெரும் பணக்காரனானான்...
ரிஷி, 'முன்னே போ' என்றாரே, மேலும் முன்னேறினால் என்ன?
விறகு வெட்டி காட்டில் மேலும் ஊடுருவிச் செல்ல...
அடடே! வெள்ளிச் சுரங்கம்!
வெள்ளியை அள்ளி வந்து மாளிகை கட்டினான் விறகு வெட்டி....
எல்லாம் ரிஷி சொன்ன மாதிரி முன்னேறியதன் பலன் தான்....
விறகு வெட்டி மேலும் முன்னேறிச் செல்லத் தீர்மானித்து, முடிவில் தங்கச் சுரங்கத்தையும் பின்னர்...
அடடே, வைரங்கள்! என்னைவிட பாக்கியசாலி யார்?
விறகுவெட்டி இப்போது குபேரனைப்போல் வாழ்கிறான்...
நான் மட்டும் முன்னேறாமல், ஆரம்பத்தில் இருந்த நிலையே தொடர்ந்து விறகு வெட்டிக் கொண்டிருந்திருந்தால் இதெல்லாம் கிடைத்திருக்குமா?

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கதை கூறி முடித்தார்...
விறகு வெட்டி எப்படி உன்னதமான வைரங்களை அடைந்தானோ, அப்படி வாழ்க்கையின் முடிவான லட்சியம் கடவுளை அடைவதே!
ஆனால் படிப்படியாக முன்னேறித்தான் அதை அடைய முடியும். இல்லறப் பருவத்தில் குடும்பத்தைக் காப்பாற்றச் சம்பாதிப்பதும், குழந்தைகளை அன்போடு வளர்ப்பதுமே லட்சியம்... புரிகிறதா?
நன்றாகப் புரிகிறது சுவாமி... ஆனால்...
ஆனால் என்ன, தம்பி? தைரியமாகக் கேள்!
ஐயா! மனிதனின் ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு குறிக்கோள் உள்ளது; அதற்காக உழைக்க வேண்டும் என்கிறீர்கள். ஆனால், 'பற்றில்லாமல் கடமைகளைச் செய்' என்கிறீர்களே, அதெப்படி?
இதைச் சுலபமாகப் புரிய வைக்க ஒரு கதை சொல்கிறேன் கேள்... ஒரு கிராமத்தில் ஒரு நெசவாளி இருந்தான்...
ராம பக்தனாகிய அவன் சந்தைக்குச் சென்று துணி விற்பான்....
ராமர் விருப்பப்படி இந்த வேட்டி விலை பத்து ரூபாய்!
இந்தா பணம்; ஒரு வேட்டி கொடு!



நன்றி, ஐயா! ராமரது விருப்பப்படி இதில் எனக்கு லாபம் இரண்டு ரூபாய்!
ராமபக்தரே, போய் வரேன்!
ஒருநாள் இரவு ... தூக்கம் வராமல் திண்ணையில் அமர்ந்திருக்க அந்தப் பக்கமாக வந்த திருடன்...
டேய்! இந்த மூட்டையைச் சுமக்க முடியலே; நீ கொஞ்சம் சுமந்து வா!
ராமரின் விருப்பப்படி மூட்டை சுமக்கிறேன், ஐயா!
என்னடா உளறுகிறாய்? சரி சரி, வேகமாய் நட!
அப்போது போலீஸ்காரர் வர, திருடன் பயந்து ஓடி விட்டான்....
டேய்! என்னடாது மூட்டையில்? இறக்கிப் பிரி, பார்க்கலாம்....
... மூட்டையைப் பிரிக்க...
ஆகா! எல்லாம் திருட்டுப் பொருள்கள்! கையும் களவுமா மாட்டிகிட்டியா?
ராமருடைய விருப்பப்படி மாட்டிக்கிட்டேன்!


என்னடா, சாது வேஷம் போட்டுக் கடவுளைத் துணைக்கு அழைக்கிறே!
ராமர் விருப்பப்படி எனக்கு விலங்கு பூட்டறீங்க!
அன்றிரவு லாக்அப்பில் இருந்து, மறுநாள் நீதிபதி முன் நிறுத்தப்பட்டான் ஏகசுவாமி...
என்ன நடந்தது, சொல்!
...ராமரது விருப்பப்படி குற்றம் சுமத்தப்பட்டு உங்கள் முன் நிற்கிறேன்...
அப்போது ஒரு செல்வந்தர் வந்து...
ஐயா! பொருள்களைத் திருடிக் கொடுத்தவன் நான். கொள்ளைக்காரர்களை நான் பார்த்தேன். இவனில்லை; அவர்கள் வேறு!
இந்தப் பக்தன் திருடியிருக்க முடியாது என்று நினைத்தேன். சாட்சியமும் கிடைத்து விட்டதும் விடுதலை செய்கிறேன்.
ராமரது விருப்பப்படி விடுதலை பெறுகிறேன்!

தொலைந்துபோன பொருட்கள் எனக்குத் திரும்பக் கிடைத்து விட்டன. நீதிபதி அனுமதித்தால் இவனுக்குச் சன்மான மளிக்க விரும்புகிறேன்!
அப்படியே செய்!
ராமருடைய விருப்பப்படி சன்மானம் பெறுகிறேன்.
ராம கிருஷ்ண பரமஹம்ஸர் கதையை முடித்துக் கூறினார்!
வாழ்க்கையில் துன்பம், இன்பம் இரண்டும் கடவுள் அளிப்பவை. இரண்டையும் சமமாகப் பாவித்து திட உள்ளத்துடன் கடமைகளைச் செய்ய வேண்டும்.
சுவாமி, நாம் நினைப்பது நடக்காதபோது மனச் சோர்வு ஏற்படுகிறதே?
மனச்சோர்வு பெரும் வியாதி. நம்பிக்கையே வாழ்க்கையின் ஆதாரம். சுயநலமின்றி கடவுளை மனமுருகி வேண்டினால் அவன் கைவிடமாட்டான்!
ஒருவன் வீட்டில் தீராத நோயுடன் ஒரு நண்பன் இருந்தான்.
மருத்துவரே இவர் உயிரை எப்படியாவது காப்பாற்றிக் கொடுங்கள்!


வைத்தியர் சொன்னார்: சுவாதி நட்சத்திரத்தில் மழை பெய்ய, அந்த நீர் ஒரு மண்டையோட்டில் தேங்க, பாம்பின் விஷம் அந்த நீரில் கலக்க, பிறகு அந்த நீரைக் கொண்டு மருந்து தயாரித்துக் கொடுத்தால் இவன் குணமடைவான்!
கோபாலியின் தகப்பனும் மனமுருகி கடவுளைத் தியானித்துவிட்டு பஞ்சாங்கத்தைப் புரட்டினான்...
அட! இன்றே சுவாதி நட்சத்திரம்!
வீட்டை விட்டுக் கிளம்பி நடந்தான்....
இறைவா! நீதான் எல்லாவற்றையும் சேகரித்துத் தர வேண்டும்!
புதர்கள் மண்டிக் கிடக்கும் காட்டுப் பகுதியில் செல்ல....
ஆண்டவனே! இதோ ஒரு மண்டை ஓடு!


அப்போது திடீரென மழை பெய்ய.....
எல்லாம் ஈசன் அருள்! கிருபை கூர்ந்து மற்றவையும் நடக்கச் செய்!
மண்டை ஓட்டில் நீர் தங்கி இருக்க, அந்தப் பக்கமாக ஒரு தவளையைத் தூக்கிக்கொண்டு வந்தது பாம்பு...
மண்டைஓட்டுத் தண்ணீரைத் தவளை தாவிக் குடிக்கவும், அதனைக் கவ்வப் பாய்ந்த பாம்பின் விஷம் மண்டைஓட்டில் விழுந்தது!
கோபாலனின் நண்பன், மிகுந்த ஆனந்தத்துடன் மண்டை ஓட்டை எடுத்து வந்து வைத்தியரிடம் தந்து...
கடவுளை மனமுருகிப் பிரார்த்தித்தேன்; நீங்கள் கேட்டது கிடைத்தது. மருந்து தயாரித்து என் நண்பனைக் காப்பாற்றுங்கள்!
தமது கதைகளின் சாரத்தைப் பகவான் ராமகிருஷ்ணர் சொன்னார்:
முயற்சியும் நம்பிக்கையும் வாழ்க்கையின் இருகண்கள்; கடவுள் பக்திதான் ஆதார மூச்சு; முன்னேற்ற ஆர்வம் தான் இதயத் துடிப்பு; சமயோசிதந்தான் அறிவு!

கவிதை பிறந்த கதை:

ஒட்டைச் சிவிங்கியும் இரட்டைப் பையனும்

ம. இலெ. தங்கப்பா

புதுவையைச் சேர்ந்த இக்கவிஞர் மாலையில் முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வானத்தில் விண்மீன் ஒன்று கூட இல்லை. இரவு வந்தவுடன் பார்த்தால், வானம் முழுதும் ஒரே விண்மீன் தெளிப்பு — கோடிக் கணக்கான குருவிகளை ஒன்றாய்ப் பார்த்தது போல! கவிஞர் மனத்தில் கற்பனை துளிர்க்கிறது... அது கவிதையாக உருவெடுக்கிறது. அதைப் பற்றிக் கவிஞர் ம. இலெ. தங்கப்பா அவர்களே கூறுகிறார்:

"நான் சிறுவனாக இருந்த பொழுது சோளக் கொல்லையில்

குருவி ஓட்டப் போவேன். கொல்லையில் ஆள் இருந்தால் குருவி வருவதில்லை. தலை மறைந்தால் குருவிகள் பறந்து வந்து கதிர்தோறும் மொய்க்கத் தொடங்கிவிடும். இப்பொழுது விண்மீன்களைக் கண்டதும் அந்தக் குருவிகள் நினைவுக்கு வந்தன. இதைக் கொண்டு குழந்தைகளுக்கு ஒரு பாட்டு எழுதலாமே என்று எண்ணினேன். அந்தப் பாடல் இதுதான் —

கரிய வான வயலிலே
  கதிரை மேய மொய்த்திடும்
குருவிகளின் கூட்டமே
  என்ன உங்கள் கொட்டமே!

கதிரவனும் காவலன்
  கத்திக் கொண்டு வந்ததும்
பதறி எழுந்து பறக்கிறீர்;
  பதுங்கி எங்கோ மறைகிறீர்!

காவலாளி போனதும்
  களிப்பால் மீண்டும் வருகிறீர்
ஆவலோடு மொய்க்கிறீர்
  அமர்ந்து நன்கும் மேய்கிறீர்!

இவர், தம் மூத்த பிள்ளைகள் இருவரும் ஐந்தாண்டும் மூன்றாண்டுமாக இருந்த பொழுது அவர்களுக்குச் சிறு சிறு படங்களைக் கத்தரித்துச் சுவடிகளில் ஒட்டிக் கொடுப்பாராம். அந்தப் படங்களை வைத்துக் கொண்டு கற்பனையாக அவர்களுக்குப் பல கதைகள் சொல்வது வழக்கமாம். பிறகு ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமாக ஒரு பாட்டையும் அப்படத்துக்கு எதிரில் சுவடியில் எழுதி அவர்களிடம் கொடுப்பாராம். அவர்கள் அந்தப் படங்களைப் பார்த்தும் பாடல்களைப் படித்தும் மகிழ்வதைக் கண்டு இன்புறுவாராம்.

குழந்தைப் பத்திரிகை ஒன்றில், ஒட்டகச்சிவிங்கி கழுத்தை நீட்டிக் கொண்டு நிற்பது போலவும், கொ

நெட்டைக் கொக்குப் போல் ஒரு பையன் அதற்குச் சம உயரமாக நின்று கொண்டு அதன் வாயில் இலை தழைகளை ஊட்டுவது போலவும், சிறிய உருவத்துடன் நின்ற மற்ற சிறுவர்கள் அதை வேடிக்கை பார்ப்பது போலவும் ஒரு படம் இருந்ததாம். அந்தப் படத்தைப் பார்க்கப் பார்க்க கவிஞருக்கு ஒரு பாட்டை எழுதவேண்டும் என்று தோன்றியது. அது இதுதான்:

நெட்டைப் பையன் ஒருவன்
ஒட்டைச் சிவிங்கி பார்க்கவே
கட்டை வண்டி ஏறிக்
காட்டிச் சாலை போனான்.

ஒட்டைச் சிவிங்கி பார்க்கவே
ஓடிவந்த பிள்ளைகள்
நெட்டைப் பையனைச் சுற்றியே
நின்று பார்க்க லாயினர்.

நெட்டைப் பையன் கையை
நீட்டி இலையைப் பறித்தான்.
ஒட்டைச் சிவிங்கி வாயிலே
உண்பாய் என்று கொடுத்தான்.

எல்லாரும் பார்த்தனர்;
இடியைப் போலச் சிரித்தனர்.
பல்லைக் காட்டிச் சிவிங்கியும்
பையனைப் பார்த்துச் சிரித்ததே!

ஒரு குருவிக் குஞ்சு தனியாகக் கூட்டில் இருந்து அலகைத் திறந்து கத்துவது போன்ற சித்திரம். அதை வைத்துக் கொண்டு கவிஞர் கற்பனை செய்கிறார். தாய்ப் பறவை இரை தேடப் போயிற்று என்றும், குஞ்சு மாலை வரை பொறுத்துக் கொண்டிருந்தது என்றும், மாலை வரவர அதன் அச்சம் அதிகமாயிற்று என்றும் அவரது கற்பனைத் தேர் ஓடுகிறது. குருவி தன் அச்சத்தைப் பாட்டாகப் பாடினால் எப்படி இருக்கும்?

கீ கீ கீ
கீ கீ கீ

அம்மா எங்கே போனாள்?
இன்னும் வரவில்லை.

மாலை நேரம் ஆச்சு
யாரும் துணை இல்லை

நேரம் செல்லச் செல்ல
நெஞ்சம் நடு நடுங்கும்.

பச்சை இலை நடுவில்
பாம்பு மெல்ல நெளியும்.

குச்சி அசைந்தாலும்
குலை நடுங்கிப் போவேன்.

— கீ கீ கீ

இப்படிப் பாடல் நீளுகிறது.

'வைகறைத் துயிலெழு' என்பது பழமொழி. அதன்படி கவிஞர் காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து விடுவாராம். மொட்டை மாடியில் நின்று கொண்டு வைகறைக் காட்சிகளிலும் ஒலிகளிலும் ஈடுபடுவாராம். சில வேளை குழந்தைகளையும் எழுப்பி, காலை நேர ஒலிகளையும் காட்சிகளையும் நன்கு கவனிக்கச் சொல்வாராம். சில சமயங்களில் வெளியே சென்று உலாவி வருவது உண்டாம். போகும் போதே சுற்றுப்புறக் காட்சிகளைக் குழந்தைகளுக்குச் சொல்வாராம். அவ்வாறு ஒரு நாள் உலாவச் சென்று வந்த போது உதித்த பாடல்தான் இது —

காலையிலே விழித்தெழுந்தால்
சின்னத் தங்கையே — இளம்
காற்றில் நடந்து மகிழ்ந்திடலாம்
சின்னத் தம்பியே!

ஆலைச் சங்கின் ஓசை கேட்கும்
சின்னத் தங்கையே — மெல்ல
அடிக்கும் கோயில் மணி ஓசை
சின்னத் தம்பியே!

என்று காலைப் பொழுதினை வர்ணித்துக் கொண்டே போகிறார் கவிஞர் ம. இலெ. தங்கப்பா.

பேட்டி: பி. வி. கிரி

புதிய புத்தகங்கள்

சின்னத் தம்பியின் பெரிய உள்ளம்

புகழ்பெற்ற பதிப்பாளராகிய வானதி திருநாவுக்கரசு, தமது மணி விழாவில் எழுதி வெளியிட்ட இப்புத்தகத்தில் ஆறு கதைகள் இருக்கின்றன. தொழிற்கல்வியின் பெருமையை உணர்த்துகிறது முதல் கதையான 'சின்னத்தம்பியின் பெரிய உள்ளம்.' வேலைக்காரச் சிறுவனின் சமயோசித புத்தியை வெளிப்படுத்துகிறது. 'யார் திருடன்?' என்ற கதை நகைகளின் மேல் அளவுக்கு மீறிய ஆசை கொண்ட சாந்தா, 'சகோதரன் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்!' என்ற பாராட்டைப் பெறுகின்ற மாணிக்கம், புல்லாங்குழலின் இனிய ஓசையினால் இழந்த மானைத் திரும்பப் பெறும் பொன்னன், 'எல்லோரும் நல்லாயிருக்கணும்' என்ற பரந்த உள்ளங்கொண்டு நல்லருள் பெற்ற சிவா ஆகியோரையும் இத்தொகுப்பிலே சந்தித்துமகிழலாம். சுவையான கதைகள். ஒவ்வொரு கதைக்கும் பொருத்தமான படங்கள், உறுதியான அட்டை. பக்கங்கள்: 68. விலை ரூ. 6.00.
வெளியீட்டோர்: வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை—17.

மலரும் மொட்டுகள்

ஏற்கெனவே பல நல்ல கதைப் புத்தகங்களை எழுதியுள்ள 'இளம்பாரி' இப்போது கவிஞராக மலர்ந்து 57 பாடல்கள் கொண்ட 'மலரும் மொட்டுகள்' என்ற நூலைத் தந்திருக்கிறார். மிகவும் எளிய நடையில், இனிமையான சந்தங்களில் அமைந்திருக்கின்றன அத்தனை பாடல்களும்.

'பால முருகன் எளியவன்
பழகப் பழக இனியவன்
சீலம் நமக்கு அளிப்பவன்
செந்தமிழை வளர்ப்பவன்'

என்று பாலமுருகனைப் பாடி, பக்திப் பயிர் வளர்க்க முயலுகிறார் கவிஞர் இளம்பாரி.

இப்படி, தெய்வங்களைப் பற்றியும், தேசத்தைப் பற்றியும், தேசத் தலைவர்களைப் பற்றியும், அறிஞர்களைப் பற்றியும் உள்ளத்தில் நன்கு பதியும் படி பாடியிருக்கிறார். பக்கங்கள்: 96. விலை ரூ.7.00. கிடைக்குமிடம்: பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை — 600 108.

கண்மணிக் கண்ணன்

தமிழில் 500க்கு மேற்பட்ட குழந்தை நாடகங்களை எழுதிப் புகழ் பெற்ற கூத்தபிரான் (வானொலி அண்ணா) எழுதிய இந்நூலில், ஏழைச் சிறுவன் கண்ணனுக்கு, சாமியார் அன்பளிப்பாகக் கொடுத்த புல்லாங்குழல் எப்படிப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது என்பதை அறியலாம். தலைமை ஆசிரியரின் பெண்ணான கோபி கண்ணனிடம் கொண்டுள்ள ஆழமான அன்பும், அவளது துடுக்குப் பேச்சும் மறக்க முடியாதவை. திகைத் திருப்பங்களும், நகைச் சுவை உரையாடல்களும் கதைக்கு எழில் கூட்டுகின்றன. பக்கங்கள்: 116. விலை ரூ.10.50. வெளியிட்டோர்: அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப் பிள்ளை தெரு, வ.உ.சி. நகர், வேலூர் [illegible]

நிலாச் சாப்பாடு

எஸ். அர்ஜி. சுந்தரம்

விசாலமான மொட்டை மாடி! விண்ணில் வட்டமான முழுநிலா! நிலா ஒளி வெண்மையாய் எங்கும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அந் நிலாவொளியில் —

முத்தரசனும், செந்தில்நாதனும் தங்கள் தாய், தந்தையர்களுடன் உட்கார்ந்து கொண்டு நிலாச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

நிலாச் சாப்பாடு முடிந்தது! முத்தரசனின் தந்தை முத்துலிங்கம் கதை சொல்வதில் வல்லவர். செந்தில்நாதனின் தந்தை கனகலிங்கத்திற்குப் பாடத் தெரியும். கேட்க வேண்டுமா? சுவையான கதையும், இனிமையான பாட்டும்மாறி மாறிக் கேட்கத் தொடங்கின.

இப்படிப் பல நிலாச் சாப்பாடுகளை முத்தரசும் செந்திலும் அனுபவித்து வந்தனர். இது தவிர விடுமுறை நாட்களின் போது குடும்பத்துடன் உல்லாசப் பயணம்! அங்கேயும் கதை! பாட்டு! இப்படி மகிழ்ச்சிகரமான குடும்பமாக இருந்து வந்தனர் அவர்கள்!

முத்தரசும், செந்தில்நாதனும் ஒன்றாகவே பள்ளிக்கூடம் போவார்கள்; வருவார்கள். ஒன்றாகவே விளையாடுவார்கள்! ஒரே மாதிரி உடை உடுத்துவார்கள்! ஒரே மாதிரியான உணவுகளை உண்பார்கள்! இருவருக்குள் அவ்வளவு ஒற்றுமை!

ஆனால், ஒரு நாள் அண்ணன் முத்துலிங்கத்திற்கும், தம்பி கனகலிங்கத்திற்கும் நடுவே என்ன காரணத்தினாலோ பெரிய சண்டை ஏற்பட்டு விட்டது. வாய்ச்சண்டை கைச்சண்டையாக முற்றும் அளவிற்கு வளர்ந்து விட்டது. அக்கம்பக்கத்திலிருந்தவர்களும் அவர்களுடைய மனைவிகளும் எவ்வளவோ கூறியும் அவர்கள் சமாதானம் அடையவில்லை.

அண்ணன் தம்பிகளுக்குள் சண்டை வந்தால், வீடு இரண்டாகத் தானே ஆகும்? அடுத்த நாளே பாகப் பிரிவினை தொடங்கியது. முத்துலிங்கமும், கனகலிங்கமும், தாங்கள் வசித்து வந்த அந்த வீட்டை ஆங்காங்கே சுவர்களை எழுப்பி இரண்டாகப் பிரித்துக் கொண்டனர்! பரந்து விரிந்து கிடந்த அந்த மொட்டை மாடியின் குறுக்கிலும் ஒரு சுவர் கட்டப்பட்டது. இதையெல்லாம் பார்க்கப் பார்க்க முத்தரசனுக்கும், செந்தில்நாதனுக்கும் அழுகை அழுகையாக வந்தது! பாவம்! அவர்கள் சிறுவர்கள் 'ஏன் இவர்கள் இப்படிச் சண்டையிடுகிறார்கள்? சண்டையிட்டாலென்ன? பேசிவிரோதத்தை மறக்கக் கூடாதா?' என்றெல்லாம் நினைத்தார்கள்!

ஒருநாள் முத்தரசனும் செந்தில்நாதனும் உற்சாகமின்றி வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்! அப்போது அங்கே வந்த செந்தில்நாதனின் தந்தை கனகலிங்கம், 'செந்தில், இனிமேல் நீ முத்தரசனோடு பேசவோ, பழகவோ விளையாடவோ கூடாது. மீறி நடந்தால் உதைதான் கிடைக்கும்.' என்றபடி செந்தில்நாதனைப் பிடித்துத் தன் வீட்டுக்குள்ளே இழுத்துக் கொண்டு போய்விட்டார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த முத்துலிங்கமும், முத்தரசனிடம் வந்து, ''ஏய், முத்தரசு! நீயும் அந்த செந்தில்நாதனோடு பேசறதையோ பழகறதையோ பார்த்தேன்னா அவ்வளவுதான்! அறைக்குள்ளே வைத்துப் பூட்டிவிடுவேன்!'' என்று மிரட்டிவிட்டுப் போனார்.

தங்கள் நட்பிற்கு இப்படி ஒரு கேடு வந்ததிலிருந்து இருவருமே சரியாக உணவு உண்ணவில்லை. அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. துக்கம் பொங்கிப் பொங்கி அழுகைதான்

வந்தது. வீடே ஏதோ பாலைவனம் போல் இருந்தது.

மாதங்கள் பல ஓடி மறைந்துவிட்டன. திடீரென்று ஒரு நாள் மழை பிடித்துக் கொண்டது. தெருக்களில் நீர் திரண்டு ஓடையாகி மழைநீர் அழகாகச் சென்றுகொண்டிருந்தது. அந்த ஓடும் நீரைப் பார்த்ததும் செந்தில்நாதனுக்கு அதில் கப்பல் செய்துவிட்டுப் பார்க்க வேண்டுமென்ற ஆசை வந்தது. உடனே வீட்டிற்குள் ஓடிச் சென்று ஒரு காகிதத்தைக் கத்தரித்து மடித்து அழகிய கத்திக் கப்பல் ஒன்றைச் செய்தான்! அதை கை விரல்களில் பிடித்தபடி வந்து, ஓடை ஓரமாக உட்கார்ந்தபடி தண்ணீரில் மிதக்க விட்டான்! அதைக் கூட இருந்து பார்க்க முத்தரசைக் கூப்பிடலாம் என்று நினைத்தான். அப்படிச் செய்தால் தனக்கும், முத்தரசிற்கும் நல்ல உதை கிடைக்கும் என்று பயந்து அந்த ஆசையை அடக்கிக் கொண்டான்! அந்த நேரத்தில் முத்தரசுவும் மொட்டை மாடிமீதுநின்றபடி செந்தில்நாதனையும், கப்பலையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு தானிருந்தான். கீழே இறங்கிச் சென்று தானும் கப்பல் செய்துவிட வேண்டுமென்று அவன் மனம் துடித்தது! ஆனால், கீழே அவன் தந்தை முத்துலிங்கம் நின்றிருந்ததால் அங்கேயே பேசாமல் நின்று வேடிக்கை பார்த்தான்.

கப்பல் மெதுவாக ஆடி அசைந்து ஓடையில் போய்க் கொண்டிருந்தது. நடுநடுவில் சிறுமீன்கள் ஓடைத்தண்ணீரில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. செந்தில்நாதன்தான் செய்துவிட்ட அந்தக் காகிதக் கப்பல் எவ்வளவு தூரம் வரை செல்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் கப்பலின் பின்னாலேயே ஓடை ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்தான். அந்த ஓடை கடைசியில் ஒரு காட்டுப்பாதையில் போய்க் கொண்டிருந்தது. செந்தில்நாதனும் கப்பலைப் பின் தொடர்ந்து சென்றபடி அந்தக் காட்டிற்குள் நுழைந்து மறைந்து விட்டான்!

அப்போது மாலை மணி ஆறுக்கு மேல் இருக்கும். இருள் கவ்வத் தொடங்கியிருந்தது.

"செந்தில்நாதா! செந்தில்நாதா!"

செந்தில்நாதனின் தந்தை கனகலிங்கம்தான் செந்தில் நாதனை அப்போது தேடினார். பல முறை குரல் கொடுத்தார். பதில் குரல் இல்லை. வைக்கோல்போர், மாட்டுக் கொட்டகை என்று எல்லா இடங்களுக்கும் சென்று குரல் கொடுத்தார். பதில் இல்லை. இதையெல்லாம் மொட்டை

மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த முத்தரசு, "சிற்றப்பா! நான் செந்தில்நாதனைப் பார்த்தேன்! அவன் இந்த ஓடையில் கப்பல் விட்டுக் கொண்டு நெடுகப்போனதை நான் பார்த்தேன்!" என்று சொல்வதற்காக மாடியிலிருந்து "சிற்றப்பா! சிற்றப்பா!" என்று கூப்பிட்டபடியே கீழே இறங்கிவந்தான். ஆனால், அவன் சிற்றப்பாவை நெருங்கி மேலே பேசுவதற்கு முன்னால், முத்துலிங்கம் ஓடி வந்து அவனைப் பரபரவென்றுபிடித்து இழுத்துக் கொண்டுபோய், ஒரு சிறிய அறையில் தள்ளிவிட்டு 'சிற்றப்பாவாம்! சிற்றப்பா! பேசவா போகிறாய்?' என்றபடி அறைக்கதவைச்சாத்தி வெளியே தாழிட்டு விட்டார்.

முத்தரசு தவியாய்த் தவித்தான். 'காகிதப் படகின் பின்னே காடு வரைக்கும் சென்ற செந்தில்நாதனுக்கு என்ன நேர்ந்திருக்குமோ தெரியவில்லையே!' என்று அவன் மனம் சங்கடப்பட்டது. செந்தில்நாதனை தேடுவதற்காக, தான் எப்படியாவது அந்த அறையிலிருந்து தப்பிவிட வேண்டுமென்று முடிவு செய்தான். அறையைச் சுற்றி ஒரு முறை நன்றாக நோட்டம் [illegible]ன்! அறையின் மேல் பகுதியில் ஒரு பெரிய காற்றுவாரி இருந்தது. மூலையில் ஓர் ஏணி சாத்தப்பட்டிருந்தது. தரையில ஒரு பழைய தாம்புக் கயிறு இருந்தது. இவைகளைப் பார்த்த முத்தரசின் மூளையில் ஒரு யோசனை பளிச்சிட்டது. உடனே மின்னல் வேகத்தில் செயல்படத் தொடங்கினான். ஏணியை காற்றுவாரியின் இப்புறம் வரை சாய்த்து நிறுத்தி, தாம்புக் கயிற்றைக் கையில் எடுத்துக் கொண்டு மேலே ஏறினான். கயிற்றின் ஒரு முனையை காற்றுவாரியின் நடுவில் இருந்த மெல்லிய கம்பியில் கட்டி கயிற்றின் மறுமுனையை வெளிப்புறமாகத் தொங்கவிட்டான். மெல்ல உடலை வளைத்து நெளித்து, காற்றுவாரி வழியே வெளியே வந்து, கயிற்றைப் பிடித்தபடி கால்களைச் சுவரில் தாங்கித் தாங்கி கீழே இறங்கினான்! ஒரு கண நேரத்தையும் வீணாக்காமல் ஓடை வழியே ஓடினான்! ஓடை, காட்டுக்குள் புகுந்து நெளிந்து ஓடியது! முத்தரசும் ஓடையைப் பார்த்துக் கொண்டே ஓடினான்! உள்ளே போகப் போக பெரிய மரங்களும் பாறைகளும் அடர்த்தியாகத் தெரிந்தன. மின்மினிப் பூச்சிகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. தவளைகள் பலவிதமாகக்கத்திக் கொண்டிருந்தன. மணி சுமார் ஏழு இருக்கும். இருந்தாலும், அப்போது வெயிற்காலமாக இருந்ததால் இலேசாக வெளிச்சம் இருந்தது. முத்தரசு தைரியத்தைக் கைவிடாமல் உள்ளே போய்க் கொண்டேயிருந்தான்

"செந்தில்நாதா! செந்தில்நாதா!"

முத்தரசின் இந்த பயம் கலந்த குரல் அந்த அடர்ந்த காடெங்கும் எதிரொலித்தது.

ஒருசில நிமிடங்கள் பயங்கர அமைதி நிலவியது! அப்போது—

"ம்! ம்! – ஆ! ஐயோ!" என்று யாரோ முனகும் சத்தம் முத்தரசிற்குக் கேட்டது.

செவிகளை மடித்துகூர்மையாக்கிக் கொண்டு சத்தம் வரும் திசையில் நடந்தான் முத்தரசு! முனகல் தொடர்ந்து கேட்டது! சந்தேகமே இல்லை. அது செந்தில்நாதனின் முனகல்தான்

"செந்தில்நாதா! எங்கே இருக்

விலை குறையாது!

இவர்: பல இடங்களில் ஏதி விலையைக் குறைக்கக் கேட்டுப் பார்த்துட்டேன்! வாங்கவே முடியலே!"

அவர்: அப்படி என்னத்தை விலை கேட்டாய்?"

இவர்: தபால் கார்டைத்தான்!

— கடலூர் கன்னியப்பன்

கிறாய்? முத்தரசு வந்திருக்கிறேன்!" என்றான்.

"முத்தரசு! இதோ இந்தப்பக்கம் இருக்கிறேன்! வா இப்படி!" என்று குரல் கொடுத்தான் செந்தில்நாதன்!

முத்தரசு திரும்பி நன்றாகப் பார்த்தான்! அவன் நின்றிருந்த இடத்திலிருந்து முப்பதடி தூரத்தில் இருந்த ஒரு மாமரத்தில் மரத்தோடு மரமாக செந்தில்நாதன் கட்டப்பட்டிருந்தான். முத்தரசு ஓடிச்சென்று கட்டை அவிழ்த்து, செந்தில்நாதனைக் கையால் அணைத்துப் பிடித்து ஓடைக்கருகே கொண்டு வந்தான். உள்ளங்கைகளால் நீரை அள்ளிவந்து குடிக்கச் செய்தான். செந்தில்நாதனுக்கு அதற்குப் பிறகுதான் உயிர் வந்தது போலிருந்தது.

"செந்தில்நாதா! சீக்கிரம் ஓடு! நன்றாக இருட்டுவதற்குள் இந்தக் காட்டை விட்டுவெளியேறிவிடலாம்." என்றபடி செந்தில்நாதனுடன் விடுவிடுவென்று நடக்கத் தொடங்கினான்!

"முத்தரசு! நான் ஓடையில் காகிதப் படகை விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டே இந்தக் காடு வரைக்கும் வந்து விட்டேன்! ஓரிடத்தில என் கப்பல் புல் நடுவில் சிக்கிக் கொண்டு நின்றது.. அதை விடுவிக்க நான் குனிந்த போது என் தலைமேல் யாரோ தடியால் படாரென்று அடித்தார்கள். நான் உடனே மயக்கமாக விழுந்துவிட்டேன். அதற்குப் பிறகு நடந்தது ஒன்றும் எனக்குத் தெரியாது" என்று கூறிக் கொண்டே செந்தில்நாதன் கழுத்து வலித்தது போலிருக்கவே கழுத்தை மெதுவாகத் தடவிப் பார்த்தான்! அடுத்தகணம் சுரீர் என்று தேள் கொட்டியது போல் அலறினான்!

"என்ன ஆச்சு செந்தில்நாதா?" என்று கேட்டான் முத்தரசு.

"முத்தரசு! இப்போதுதான் கவனிக்கிறேன். என் கழுத்தில் போட்டிருந்த தங்கச்சங்கிலியைக் காணவில்லை! யாரோ திருடன்தான் என்னை அடித்துப் போட்டு விட்டுத் தங்கச் சங்கிலியைத் திருடிச் சென்றிருக்கிறான்! வீட்டிற்குப் போனதும் அடிதான் கிடைக்கப்போகிறது" என்று சொல்லி வருந்தினான்

செந்தில்நாதன்.

"கவலைப்படாதே! செந்தில்நாதா! உன் அப்பா உன்னை வெகுநேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறார். நீ வீடு போய் சேர்ந்தாலே போதும்! ஒன்றும் சொல்லமாட்டார். நான் பார்த்துக் கொள்கிறேன், வா!" என்றபடி வேகமாக நடக்கத் தொடங்கினான் முத்தரசு.

முத்தரசுவின் வீட்டு வாசலில் முத்துலிங்கம் கையில் கொம்பு ஒன்றைப் பிடித்தபடி கோபமாக அப்படியும், இப்படியுமாக உலவிக்கொண்டிருந்தார். அறையிலிருந்து முத்தரசு தப்பி ஓடியது அவருக்குத் தெரிந்து விட்டது. அதனால்தான் இந்தக் கோபம்!

செந்தில்நாதனின் தந்தை கனகலிங்கமோ வீட்டு வாயிற்படியில் கவலைதோய்ந்த முகத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

தூரத்தில் முத்தரகம், செந்தில்நாதனும் ஒன்று சேர்ந்து வரும் காட்சியைக் கண்டதும், முத்துலிங்கத்தின் மீசை படபடத்தது. அதே நேரத்தில் தன் மகன் செந்தில்நாதனைப் பார்த்த கனகலிங்கம் ஓடிச்சென்று அவனைத் தழுவிக்கொண்டார். முத்தரக நடந்ததையெல்லாம் சித்தப்பாவிடம் சொன்னான்.

"அப்பா! முத்தரகம், நானும் ஒன்றாக விளையாடியிருந்தால் இந்த மாதிரியெல்லாம் நடந்திருக்காது. எல்லாவற்றிற்கும் உங்கள் சண்டைதான் காரணம்" என்றான் செந்தில்நாதன்.

"ஆமாம்! நீ சொல்வது சரிதான் செந்தில்நாதா! முத்தரக! செந்தில்நாதனிடம் நீ எவ்வளவு அன்பும், பாசமும் வைத்திருக்கிறாய்! உங்கள் நட்பைப் பிரித்த எனக்கு நல்ல தண்டனை கிடைத்துவிட்டது!" என்ற கனகலிங்கம் அங்கே கம்புடன் நின்றிருந்த முத்துலிங்கத்தின் கால்களில் ஓடிச் சென்று விழுந்தார்.

"அண்ணா, தயவு செய்து நம் பகையை இனிமேல் மறந்து விடுவோம். நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் மன்னித்து விடுங்கள். உங்கள் பிள்ளை முத்தரக மட்டும் இல்லாவிட்டால் என் செந்தில்நாதனை நான் உயிரோடு பார்த்திருப்பேனா என்பது சந்தேகமே. கூடப் பிறவாத அவர்கள் எவ்வளவு நட்புடனும், பாசத்துடனும் பழகுகிறார்கள்! ஆனால், கூடப் பிறந்த சகோதரர்களாகிய நாம் வீணாகச் சண்டை போட்டுக் கொண்டதை நினைத்தால் வெட்கமாக இருக்கிறது. கம்பைக் கீழே போடுங்கள். முத்தரகை அடித்து விடாதீர்கள்!" என்றார். கனகலிங்கம் கண்களில் நீர் துளிக்க!

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் அல்லவா? கனகலிங்கத்தின் கண்ணீர் முத்துலிங்கத்தின் இதயத்தைத் தொட்டது! கம்பைக் கீழே போட்டுவிட்டுத் தம்பி கனகலிங்கத்தை அப்படியே தழுவிக் கொண்டார்!

அன்று காலை நேரம்.

மாடியில் யாரோ எதையோ உடைத்து நொறுக்கும் சத்தம் கேட்டது.

முத்துலிங்கமும் கனகலிங்கமும் ஓடோடிச் சென்று பார்த்தனர்.

அங்கே —

முத்தரகம், செந்தில்நாதனும் கையில் ஆளுக்கொரு கடப்பாரையை வைத்துக் கொண்டு, மாடியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அந்தக் குறுக்குச் சுவரை இடித்துத் தள்ளிக் கொண்டிருந்தனர். அந்தக் குறுக்குச் சுவரின் மேல் அவ்வளவு ஆத்திரம் அவர்களுக்கு! இருக்காதா? அவர்கள் நிலாச் சாப்பாடு சாப்பிட்டு எவ்வளவு மாதங்களாகி விட்டன, பாவம்!

அந்த வீட்டில் வரும் பௌர்ணமியன்று அறுசுவை உணவுடன் நிலாச் சாப்பாடு! அத்துடன் சுவையான கதையும் இனிமையான பாட்டும் உண்டு.

நானும் நீங்களும் போனால் கூடக் கலந்து கொள்ளலாம்; வருகிறீர்களா?



குட்டி யானை: எனக்கு யானைக்கால் வியாதி வந்தாலும் வரலாம்னு டாக்டர் சொல்றாரப்பா!

பக்கத்துக் கிராமத்தில் உள்ள என் நண்பன் இராமநாதனைப் பார்க்கப் போன போது அவர் இல்லை. அவர் மகன் குமார்தான் இருந்தான். "அப்பா வந்து விடுவார், இருங்கள்" என்றான். திண்ணையில் அமர்ந்தேன்.

அப்போது குமார் வயதுள்ள ஒரு சிறுவன் மிக வேகமாக ஓடி வந்தான். என்னைப் பார்த்ததும் சற்றுத் தயங்கிவிட்டு, பிறகு குமாரின் காதில் இரகசியமாய் ஏதோ கிசுகிசுத்தான். குமார் அவனை வேகமாக வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போனான்.

அவனை உள்ளே விட்டு விட்டு குமார் மட்டும் மீண்டும் வெளியே வந்தான். அவனை நான் என்னவென்று கேட்பதற்குள் ஒருவர் மிக வேகமாக வந்து வீட்டு வாசலில் நின்றார். அவர் கண்கள் சிவந்திருந்தன. மிகக் கோபமாக இருப்பது தெரிந்தது.

"குமார், ராமு இங்கே வந்தானா?" என்று குமாரிடம் கேட்டார் அவர்.

"இல்லையே" என்றான் குமார்.

"வீட்டிலேயிருந்து பத்து ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு வந்து விட்டான், இங்கே வரலியா? இந்தப் பக்கம்தானே வந்தான்?" என்று மீண்டும் கேட்டார் அவர்.

"இல்லை. இங்கே வரவில்லை" என்றான் குமார்.

உள்ளே ஒளிந்திருந்தவன்தான் ராமுவாக இருக்க வேண்டும் என்று எண்ணினேன் நான். ஆனால், அவர் போனதும் கேட்கலாம் என்று பேசாதிருந்தேன்.

அவர் போய்விட்டார்.

உள்ளே இருந்தவனும் குமாரிடம் சொல்லிக் கொண்டு போய்விட்டான்.

நான் குமாரிடம் கேட்டேன்:

"இவன்தானே ராமு?"

"ஆமாம் மாமா" என்றான் குமார்.

"நீ ஏன் அவரிடம் பொய் சொன்னே? பொய் சொல்றது தப்பில்லையா?" என்று சற்றுக் கோபமாகவே கேட்டேன்.

"இல்லை மாமா.. வந்து..." என்று இழுத்தான் குமார்.

"அந்தப் பையன் பணத்தை எடுத்துக்கிட்டு வந்திட்டான்னு சொல்றார் அவர். அவனை ஒளிச்சு வெச்சுக்கிட்டு 'இங்கே இல்லே'ன்னு சொல்றியே, தப்பில்லையா அது?" என்று கோபமாகக் கேட்டேன் நான்.

"மாமா, நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளுங்க. ராமுவோட குடும்பம் ரொம்ப ஏழ்மையானது. அவங்க அப்பா ஒரு குடிகாரர். அவங்க அம்மா கூலி வேலை செஞ்சு அரிசி வாங்க வெச்சிருக்கிற பணத்தையும் எடுத்திட்டுப் போய் இவர் குடிச்சுத் தீர்த்திடுவார். அது போலத்தான் இன்னிக்கும் அவங்க அம்மா வெச்சிருந்த பத்து ரூபாய்ப் பணத்தைப் பார்த்துவிட்டு, குடிக்கக் கேட்டிருக்கார். அதுக்குள்ளே இவன் அரிசி வாங்கறதுக்காக எடுத்துக்கிட்டு வந்திட்டான். அதுதான் அவர் துரத்திக்கிட்டு வந்திருக்கார். அதை அவன் என்கிட்டே சொன்னான். அதனால அவனை ஒளிச்சு வெச்சுக்கிட்டு நான் இல்லேன்னு சொன்னேன். நான் செஞ்சது தப்பா மாமா?" என்று கேட்டான் குமார்.

நான் திகைத்துப் போய் விட்டேன்.

"இல்லே குமார். நீ சொன்னது பொய்யா இருந்தாலும், நல்லதுக்குத்தான் சொல்லியிருக்கே. அது தப்பில்லே" என்றேன் நான்.

அவன் முகம் மலர்ந்தது.

அம்மா வாங்கிய பேனா

சரஸ்வதி ராஜேந்திரன்

அம்மா வாங்கி வந்த பேனாவைப் பார்த்ததும் கோபுவுக்கு ஒரே மகிழ்ச்சியாக இருந்தது.

ஓடிச் சென்று அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

"ரொம்ப தாங்க்ஸ் அம்மா, பேனாவைக் கொடுங்க அம்மா," கேட்டான் கோபு.

"கோபு, இந்தப் பேனா உனக்கல்ல!" அம்மா சொன்னதும் ஆவலெல்லாம் வடிந்துவிட அதிர்ச்சியுடன், "பின் யாருக்கம்மா!" என்றான்.

"இது உன் நண்பன் அந்த ஏழை பாபுவுக்கு."

"நான்தான் அம்மா பேனா கேட்டேன்!"

"நீதான் இரண்டு மூன்று பேனா வைத்திருக்கிறாயே! ஆனால், அந்த பாபுவிடம் பேனாவே இல்லெங்கிறது இப்பத்தான் என் நினைவுக்கு வந்தது. அதனாலே இதை அவனிட்டே கொடுக்கப் போகிறேன்."

அதைக் கேட்டதும் கோபுவின் முகம் சுருங்கிப்போய்விட்டது. அம்மாவின் மேல் அவனுக்கு இப்பொழுது கோபம் கோபமாக வந்தது.

"இந்தப் பேனாவை பாபுகிட்டே கொடுக்கிறதினாலே என் மேல் உனக்குக் கோபம் இல்லையே?"

அம்மா கேட்டதும் கோபத்தை மறைத்துக் கொண்டு "இல்லேம்மா!" என்றான்.

அவன் வாய் சொன்னாலும் அவன் முகத்தில் இருந்த கோபத்தை அம்மா புரிந்து கொண்டாள்.

"இதோ பாரு கோபு. உனக்கு நான் இருக்கிறேன். உன் அப்பா இருக்கிறார். ஆனால், பாபுவுக்கு யார் இருக்கிறார்கள்? அம்மா இறந்து போயிட்டாங்க. அவன் அப்பாவோ நோயாளி. எப்போதும் நம்மைவிட கஷ்டப்படறவங்களுக்கு நாம உதவி செய்தால் கடவுள் நமக்கு உதவி செய்வார். எங்கே, நீயே மகிழ்ச்சியோடு இந்தப் பேனாவைக் கொண்டு போய் பாபுவிடம்கொடுத்துவிட்டுவா, பார்ப்போம்."

கோபு போலியான மகிழ்ச்சியோடு பேனாவை பாபுவிடம்

கொடுத்துவிட்டு வந்தான்.

சமாதானம் அடையாத மனத்தோடு பள்ளிக்குச் சென்றான்.

பாபு எல்லோரிடமும் கோபு கொடுத்த பேனாவைக் காட்டி, கோபுவின் பெருந்தன்மையை எடுத்துச் சொன்ன பொழுது கோபுவிற்கு ஒரு புறம் பெருமையாக இருந்தாலும் ஒரு புறம் எரிச்சலாகவும் இருந்தது. அந்தப் பேனாவைப் பறிகொடுத்தத னால்.

அன்று மாலையே கோபுவுக்கு ஓர் அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி ஏற்பட்டது பள்ளியில்.

சென்ற வாரம் நடந்த கட்டுரைப் போட்டியில் அவன் முதற்பரிசு பெற்றதாக அறிவித்துப் புது ஹீரோ பேனா ஒன்று பரிசளிக்கப்பட்டது தலைமையாசிரியரால்!

பழைய வருத்தம் மறைந்து போக புதுப் பேனாவுடன் மகிழ்ச்சியோடும், பெருமையோடும் வீட்டிற்குச் சென்று அம்மாவிடம் தன் பேனாவைக் காட்டினான்.

"கோபு, நான் காலையிலேயே சொன்னேன் அல்லவா? கடவுளுக்குப் பிடிச்ச விஷயத்தை நாம செஞ்சா, கடவுள் நமக்குப் பிடிச்ச விஷயத்தைச் செய்வாருன்னு! நாம பாபுவுக்குக் கொடுத்தது சாதாரண பேனா. ஆனால், கடவுள் உனக்குக் கொடுத்தது ஒரு உயர்வான பேனாவை." என்றாள்.

"உண்மைதான் அம்மா! நானும் இனிமேல் நம்மைவிடக் கஷ்டப்படறவங்களுக்கு என்னாலே முடிஞ்ச உதவியைச் செய்வேன்" என்று சொன்ன கோபுவைப் பெருமையோடு உச்சி மோந்தாள் அம்மா.

அரண்மனைக்குள் கல்விக் கோயில்

* திருமதி மீனு முத்தையா

செட்டி நாட்டு அரண்மனையில் ஒரு பகுதி குழந்தைகள் குதித்து மகிழ்ந்து அறிவு பெறும் வித்யாச்ரமமாகத் திகழ்கிறது. மரங்களுக்கு மத்தியில் இனிய சூழ்நிலையில் சின்னஞ்சிறார்களுக்கு செட்டி நாடு வித்யாச்ரமம் குழந்தைக் குலத்துக்குக் கிடைத்த பேறு. அரண்மனைக் கட்டடங்களை அறிவூட்டும் கோயிலாக மாற்றிய பெருமை திருமதி மீனு முத்தையாவைச் சாரும்.

செட்டி நாடு வித்யாச்ரமத்தில் இரண்டு வயதுக் குழந்தைகளுக்கு 'Pre School' வகுப்பும், மூன்று வயதுச் சிறுவர் சிறுமியருக்கு எல்.கே.ஜி.யும் நான்கு வயதினருக்கு யூ.கே.ஜி.யும், முதல் இரண்டாம் வகுப்புக்களும் நடைபெறுகின்றன. நான்கு மொழிகள், தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி கற்றுக் கொள்ள வசதிகள் உண்டு. பள்ளியில் பணி ஜூனிலிருந்து தொடங்கி ஏப்ரலில் முடிவடைகிறது. சின்னஞ்சிறுவர் சிறுமிகளுக்கு யோகா வகுப்பும் நடன வகுப்பும் விசேஷ கவனத்தைக் கவருகின்றன. மேற்கத்திய இசையில் பியானோவைக் கூடக் கற்றுக் கொள்ளலாம்.

செட்டி நாடு வித்யாச்ரமத்தில் குழந்தைகளுக்கு வண்ணப் பொம்மைகளும், உபகரணங்களும், வீடியோ காஸெட்டுகளும், மின் சாதனங்களும் கற்பிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவில் இளம் சிறுவர் சிறுமியருக்குப் பயன்படும் நவீன சாத

* புதிய முறையில் கல்வி புகட்டுகிறார்கள் ஆசிரியைகள். வலது கோடியில் தலைமை ஆசிரியை.

னங்களை வாங்கியனுப்பி வைக்கிறார் திருமதி மீனு முத்தையா. தலைமை ஆசிரியை சரஸ்வதி சீனிவாசனும், ஒன்

பது ஆசிரியைகளும், நான்கு ஆயாக்களும் இளந்தளிர்களைக் கவனித்து அறிவூட்டக் காத்திருக்கிறார்கள்.

"மற்ற நர்ஸரிப் பள்ளிகளிலிருந்து செட்டி நாட்டு வித்யாச்ரமத்தில் கல்வி முறை எப்படித் தனித்தன்மையோடு இருக்கிறது?"

"இந்து கலாசாரத்தைப் போதிப்பதில் கவனம் செலுத்துகிறோம். ஒழுக்கம், பண்பாடு, முக்கிய குறிக்கோள். அடிக்கடி பெற்றோர் – ஆசிரியைகள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து மனம் விட்டுக் குழந்தைகளின் இயல்புகளை விவாதிக்கிறோம். செட்டி நாடு வித்யாச்ரமத்தில் படிப்போடு பலவித விளையாட்டுக்கள், சனிக்கிழமை குழந்தைகள் பூங்கா, முதலைப் பண்ணை விஜயம், வீடியோ காட்சிகள் இப்படிக் குழந்தைகளுக்கு நேரிடை அனுபவங்களுக்கு வசதிகள் உண்டு.

* [illegible]

ஒவ்வொரு குழந்தையையும் அவ்வப்போது வைத்தியப் பரிசோதனை செய்து அவர்களது உடல் நலனைப் பாதுகாப்பதிலும் அக்கறை செலுத்துகிறோம்" என்றார் அனுபவம் மிக்க திருமதி சரஸ்வதி சீனிவாசன்.

கேரள கவர்னர் திரு. ராமச்சந்திரன் குடும்பத்துக் குழந்தையும், திரைப்பட நடிகர் ரஜினிகாந்தின் குழந்தையும்

மற்றச் சிறுவர் சிறுமியரோடு விளையாடி வந்து ஆடிக் களிப்பதைக் கண்டேன். குழந்தைகள் அனைவருக்குமே புஷ்டியான ஆகாரம் – காலை உணவு, மதிய உணவு, மாலை டிபன் என்று அக்கறையோடு கவனித்துக் கொள்வதை நேரில் கண்டேன்! ஆபீஸ் போகும் கணவன் மனைவிமாருக்கு இந்தச் செட்டிநாட்டு வித்யாச்ரமம் ஒரு வரப்பிரசாதம்! காலையில் குழந்தைகளை அழைத்து வரவும், மாலையில் வீட்டில் கொண்டு சேர்க்கவும் இரு அழகான வேன்கள் காத்திருக்கின்றன.

மத்தியக் கல்வித் தரத்தைக் கொண்டு செயல்படும் செட்டி நாட்டு வித்யாச்ரமம் விரைவில் பன்னிரண்டாம் வகுப்புக்கான கட்டடங்களோடு மிளிரும் என்ற நற்செய்தி கிடைத்தது. குழந்தைகளுக்கான கம்ப்யூட்டர் வசதிகளும் விரைவில் கிடைக்கவிருக்கிறது!

செட்டி நாட்டு அரண்மனைக் கட்டடங்கள் சில, கல்விக் கோவில்களாக மாறியிருக்கும் அதிசயம் அனைவருக்குமே திகைப்பூட்டும். இந்தச் சிறப்பான கைங்கரியத்தைச் செய்து வரும் திருமதி மீனா முத்தையா, தஞ்சை வண்ணப்படங்களுக்கான கலைக்கல்லூரியையும் அருகிலேயே நடத்துவது அவரது கலைத் தொண்டின் சிகரமாகும்.

— குன்றுமணி

அவன் செய்த உதவி

வரிசையாக மாட்டப்பட்டிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டே வந்த பெருமாள்சாமி, அந்தப் பையனின் போட்டோவைப் பார்த்ததும் திடுக்கிட்டார்.

அந்தப் பனிரெண்டு கண்களை அவரால் இன்னும் மறக்க முடியவில்லை. இந்தப் பையன் இங்கே எங்கே வந்தான்?

சுற்றும் முற்றும் பார்த்தார். முதலாளியின் டேபிளில் ஃபைல்களை வைக்க பியூன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''ஏம்பா, இந்த போட்டோவில் இருப்பது யாரு?''

''இதுங்களா? இது எங்க முதலாளி படம்தானுங்க. சின்னப்பையனா இருந்தப்ப எடுத்தது. பத்து வருஷங்களுக்கு முன்னாலே மீனாட்சிபுரத்திலேதான் எஸ். எஸ். எல். சி. முடிச்சாருங்க. முதலிலே ஏழையா இருந்து, படிப்படியாக் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவருங்க.''

மீனாட்சிபுரம்!

தான் நினைத்தது சரிதான். அந்தச் சம்பவம் இப்பொழுதுதான் நடந்தது போலப் பெருமாள்சாமிக்கு நினைவில் இருந்தது.

இத்தனை வருடங்களில் தன்னை மறந்து விட்டிருப்பானோ? அல்லது நினைவில் வைத்திருப்பானோ? நினைவில் வைத்திருந்தால், இவன் எங்கே பள்ளிக்கு நன்கொடை கொடுக்கப் போகிறான்? 'கெட் — அவுட்' என்று சொல்லாமல் இருந்தால் போதாதா?

மரியாதையாக இடத்தைக் காலி செய்து விடுவதுதான் நல்லது. நாற்காலியில் இருந்து எழப் போனவரை பியூனின் குரல் தடுத்து நிறுத்தியது.

''இன்னும் பத்து நிமிஷம் பொறுங்க. முதலாளி வந்துடுவார். உங்க ஸ்கூலுக்கு நிறைய டொனேஷன் கொடுப்பார்.''

நாற்காலியில் உட்கார்ந்த பெருமாள்சாமி பழைய நினைவுகளில் மூழ்கினார்.

பெருமாள்சாமி அப்பொழுது மீனாட்சிபுரத்துக்குப் பக்கத்தில் உள்ள ஊத்துங்கரையில் பி. டி. அஸிஸ்டென்டாக இருந்தார். அப்பொழுதுதான் மீனாட்சிபுரம் பள்ளியில் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு சூபர்வைஸராக நியமிக்கப்பட்டார்..

பெருமாள் எப்பொழுதுமே மாணவர்களைக் காப்பி அடிக்க விட மாட்டார். அப்பொழுதுதான் போட்டோவில் இருந்த பையனை, பிட்டோடு கையும் களவுமாகப் பிடித்து விட்டார்.

''சார்! இந்த ஒரு தடவை என்னை மன்னிச்சுடுங்க. இனிமேல் நான் இந்த மாதிரி செய்யவே மாட்டேன்.''

பெருமாள்சாமி கேட்கவில்லை. டிபார்ட்மெண்டல் ஆபீஸரிடம் புகார் செய்ய, அவர் அந்தப் பையனைக் கடுமையாகத் திட்டி, கருங்க அடிப் படையில் அவனை டிபார் செய்யாமலே, தேர்வு எழுத அனுமதித்தார்.

அப்பொழுது அந்தப் பையன் அவரைப் பார்த்த வெறிப் பார்வை.

இன்னும் பெருமாள்சாமியின் நினைவில் ஊஞ்சலாடிக் கொண்டே இருந்தது.

''சார்! உங்களை முதலாளி கூப்பிடுறார்!''

அறைக்குள் நுழைந்த பெருமாள்சாமியை ஏ. ஸி. யின் குளிர் தாக்கியது.

''உங்களுக்கு என்ன வேணும்?''

நல்லவேளை! தன்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. பெருமாள்

இரா. ஏசுதாசன்

சாமிக்கு நிம்மதியாக இருந்தது.

"நான் பக்கத்து ஊர் ஸ்கூலிலே ஹெட்மாஸ்டரா இருக்கேன். புதுசா ஹால் ரூம் ஒண்ணு கட்டணும். உங்களாலே முடிஞ்ச பணத்தை டொனேஷனா கொடுத்தீங்கன்னா..."

"என் பேரிலே இரண்டாயிரம் ரூபாய் எழுதிக்கோங்க. அப்புறம் செக் எழுதி அனுப்பறேன்."

"ரொம்ப நன்றிங்க." என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் பெருமாள் சாமி.

"ஒரு நிமிஷம் உட்காருங்க. நான் வழக்கமா இந்த மாதிரி விஷயங்களுக்கெல்லாம் அதிகபட்சம் ஆயிரம்தான் கொடுப்பேன். இப்ப ஏன் இரண்டாயிரம் கொடுத்திருக்கேன்னு தெரியுமா?"

"தெரியலையே?"

"நீங்க முன்னே எனக்குச் செஞ்ச உதவிக்காக."

"உதவியா? நானு?"

"உங்களைப் பார்த்தஉடனே தெரிஞ்சுக்கிட்டேன், நீங்கதான் பரீட்சையில் பிட் அடிக்கிறப்ப என்னைப் பிடிச்சவர்னு. கடைசியாச் சொல்லணும்னுதான் அமைதியா இருந்தேன்."

"அது வந்து..." பெருமாள்சாமி திணறினார்.

"நான் பிட் அடிச்சதை நீங்க பிடிச்சவுடனே என்னை எல்லோருமே கேவலமாப் பார்த்தாங்க. அப்ப எனக்கு உங்க பேரிலே ஆத்திரமாத்தான் இருந்தது. ஆனால், அதுக்குப் பின்னாலே மறுபடியும் பிட் அடிச்சு மாட்டிக்கிட்டு அவமானப்படக் கூடாதுன்னு ஒழுங்காப் படிக்க ஆரம்பிச்சேன். அப்படிப் படிக்கிறப்பதான், சாதாரண நிலையில் இருந்தவங்க எல்லாம் விடாமுயற்சியாலே பெரிய அந்தஸ்தை அடைந்திருக்கிறாங்கன்றதைத் தெரிஞ்சுக்கிட்டேன். வேறே பல நல்ல விஷயங்களையும் தெரிஞ்சுக்கிட்டேன். விடாமுயற்சியோடு உழைச்சேன். இன்னைக்குப் பெரிய பணக்காரன் ஆயிட்டேன். என் இந்த நல்ல நிலைமைக்கு உண்மையிலேயே நீங்கதான் காரணம்."

பெருமாள்சாமியின் இதயம் மகிழ்ச்சியில் நனைய ஆரம்பித்தது!

துஷ்டனைக்கண்டால் தூர விலகு.

படக்கதை.. ஓவியர் - S.K.ராமானுஜம் (ராஜு)

அன்று முதல் மான்குட்டியும், சிங்கக்குட்டியும் இணை பிரியா நண்பர்களாகி விட்டனர். எப்பொழுதும் மான்குட்டியின் முதுகில் சிங்கக்குட்டி ஏறிக் கொண்டு சவாரி செய்யும்...
இன்னும் வேகமாக... ஓடு, பார்க்கலாம்...
துஷ்டனை நண்பனாக்கிக் கொள்ளாதே! கடைசியில் அது உனக்கு ஆபத்தாக முடியும்... ஜாக்கிரதை!
எனக்கா... புத்திமதி கூறுகிறாய்?
மான்குட்டி கண்டபடி குரங்குக்குட்டியைத் திட்டிவிட்டு சிங்கக் குட்டியோடு விளையாட ஓடியது...
இரண்டு ஆண்டுகளில் சிங்கமும், மானும் மட மடவென வளர்ந்து விட்டன. அப்பொழுதும் இணை பிரியா நண்பர்களாகவே வாழ்ந்து வந்தன. அதனால் சிங்கம் தன் நண்பனைத் தவிர மற்ற மான்களை அடித்துத் தின்று உயிர் வாழ்ந்து வந்தது.
ஒரு நாள் அக்காட்டில் வறட்சி ஏற்பட்டு விட்டது. ஆகையால் பல பிராணிகளும், மிருகங்களும் உணவு கிடைக்காமல் இறந்து விட்டன.
பசி வயிற்றைக் கிள்ளுகிறதே! அப்பொழுது நான் என்ன செய்வேன்?
அப்பொழுது மான் அங்கே வந்தது
என் உயிர்த்தோழா! நீ... தான் என் உயிரைக் காக்க வேண்டும். இன்று மட்டும் உன் உடலைத் தின்று என் பசியைப் போக்கிக் கொள்ளுகிறேன்
"துஷ்டனைக் கண்டால் தூர விலகு... என்பதை இப்பொழுது தான் புரிந்து கொண்டேன்.." என்று கூறிக் கொண்டே... பக்கத்துக் காட்டிற்கு மான் ஓடி விட்டது....
எப்படி நான்... என் பசியைப் போக்கிக் கொள்ளுவது?

பிருந்தாவனக் கதைப்ரசங்கம்

மாங்குடி என்பது அழகான கிராமம். அங்கே ராமுவும் சோமுவும் வாழ்ந்தனர். இருவரும் உடன்பிறப்புக்கள். ராமு மூத்தவன். சோமு இளையவன். இவர்களுடைய தொழில் பிறரை ஏமாற்றிச் சம்பாதித்தல் ஆகும். இவர்களால் ஏமாற்றப்பட்டவர்கள் எத்தனை பேரோ பேர்!

அன்று தீபாவளிக்கு முதல் நாள். அவர்களுடைய அம்மா செண்பகத்திற்கு உடல்நலம் சரியில்லை. மிகவும் மோசமாக இருந்தது. மருத்துவர் மருந்து எழுதிக் கொடுத்து உடனே வாங்கி வரச் சொன்னார். உடனே அருகிலுள்ள திருவாரூருக்குச் சென்றனர். கூட்டம் அலைமோதியது. வெடிச் சத்தம் காதைத் துளைத்தது. வான வேடிக்கைக்கு 'வாண வெடிகள்' என்னும் வைர அணிகள் மின்னிக் கொண்டே இருந்தன. பேருந்துகளில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

நகரத்தில் ராமுவும், சோமுவும் மருந்துக் கடைக்குச் சென்று கொண்டு இருந்தனர். முன்னால் சென்று கொண்டிருந்த சோமுவின் பையிலிருந்து 10 ரூபாய் நோட்டு கீழே விழுந்தது. தரையிலே 10 ரூபாய் நோட்டு கிடப்பதை ராமு பார்த்தான். ஆனால், அது சோமுவின் பையிலிருந்துதான் விழுந்தது என்பது அவனுக்குத் தெரியாது. உடனே பணத்தை ஆவலாக எடுத்தான். சோமுவிடம் இரகசியமாகக் கூறினான். சோமுவுக்கு அளவில்லாத மகிழ்ச்சி. அது தன்னுடைய பணம் தான் என்று அவனுக்குத் தெரியவில்லை. வழியிலிருந்த ஹோட்டலுக்கு இருவரும் சென்று சிற்றுண்டி அருந்தினர். பில் ரூ. 9.50 ஆயிற்று. 10 ரூபாய் நோட்டைக் கொடுத்து மீதம் 50 பைசாவைப் பெற்றுக் கொண்டனர்.

பிறகு மருந்துக் கடைக்குச் சென்றனர். டாக்டர் எழுதிக் கொடுத்த காகிதத்தைக் கொடுத்தனர். கடைக்காரர் மருந்தைக் கொடுத்தார். சோமு பையில் கையை விட்டான். பணம் இல்லை. மீண்டும் மீண்டும் தேடினான். சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்?

கடைக்காரர் 'பணம் கொடு' என்று பில்லை நீட்டினார். பாவம், இருவரும் அப்பொழுதுதான் நினைத்தனர்: 'நம்மால் ஏமாற்றப்பட்டவர்கள் எவ்வாறு துடித்திருப்பார்கள்' என்று எண்ணினார்கள்.

கடைக்காரரிடம் ராமு, "ஐயா, என்னுடைய பணம் கீழே எங்கோ விழுந்து விட்டது. நாளை கொண்டு வந்து தருகிறேன்" என்றான். கடைக்காரர் நல்லவராக இருந்ததால் 'சரி'

என்றார். தீபாவளி அன்று அவர்கள் வெறும் முழுக்குப் போடவில்லை. அவர்களுடைய தொழிலுக்கும் சேர்த்து முழுக்குப் போட்டனர்!

சகாதேவபுரம் என்ற ஒரு சிற்றூரில் நீலகண்டன் என்ற பெரிய ஜமீன்தார் வசித்து வந்தார். அவரிடம் செல்வத்திற்குக் குறைவே இல்லை. அவரிடம் பெரிய செல்வந்தர்களும் மரியாதையுடன் பழகி வந்தனர். அவரிடம் ஏராளமான நிலப்புலன்கள் இருந்தன. சகாதேவபுரத்தில் மட்டுமல்லாமல் அருகில் இருந்த பல ஊர்களிலும் அவருடைய நிலங்கள் இருந்தன.

அந்நிலங்களில் உழவுத் தொழில் செய்து வந்த உழவர்கள் அறுவடையில் மூன்றில் இரண்டு பங்கை ஜமீன்தாரிடம் சேர்ப்பித்து வந்தனர். அவற்றை வசூலிக்க ஜமீன்தார் மாதவன் என்ற நேர்மையான ஊழியனை நியமித்திருந்தார். மாதவனும் ஒவ்வொரு மாதமும் அந்த ஊர்களுக்குச் சென்று ஜமீன்தாருக்குச் சேர வேண்டிய பங்கை வசூலித்து வருவான்.

ஒருமுறை அங்ஙனம் வசூலித்து வரச் செல்வதற்கு முன் மாதவன் ஜமீன்தாரைப் பார்த்து, "ஐயா! நான் திரும்பி வரும்பொழுது தங்களுக்கென நான் என்ன வாங்கி வரட்டும்?" என்று கேட்டான்.

இதைக் கேட்ட ஜமீன்தார், அட்டகாசமாகச் சிரித்து, பின், "மாதவா! என்னிடம் இல்லாத செல்வமில்லை. குறைவற்ற எனக்கு, நீ என்னிடம் எப்பொருள் இல்லை எனக் கருதுகின்றாயோ, அதை வாங்கி வா" எனக் கூறி விடையளித்தார்.

மாதவனும் சில ஊர்களுக்குச் சென்று பணம் வசூலித்துவிட்டு நல்லபுரம், பனையூர் என்ற மற்ற கிராமங்களுக்குச் சென்றபோது உழவர்கள் வருத்தத்துடன் குமுறி இருந்ததைக் கவனித்தான். அந்தப் பகுதியில் மழையில்லாத காரணத்தால் பயிர்கள் கருகி விட்டன என்பதையறிந்த மாதவன் அந்த உழவர்களைப் பார்த்து, "ஜமீன்தார் இந்தத் தடவை உங்களிடம் பணம் வசூலிக்கப் போவதில்லை. உங்கள் கஷ்டத்தை உணர்ந்து பயிர்களின் நிலைமையை அறிந்து உங்களிடம் எதுவும் வசூலிக்க வேண்டாம் என்று கூறிவிட்டார்" என்றான். உழவர்களின் முகத்திலே திடீரென்று ஓர் ஒளி பிறந்தது. அவர்கள் ஜமீன்தாரை வாயார வாழ்த்தினர்; 'கருணாமூர்த்தி' என்று போற்றினர்.

சகாதேவபுரத்திற்குத் திரும்பிய மாதவன் குறைவான பணம் கொண்டு வந்ததைக் கண்ட ஜமீன்தார் மாதவனை அதற்கான காரணத்தைக் கேட்க, மாதவன், "ஐயா! நீங்கள் உங்களிடம் இல்லாத பொருளைக் கொண்டு வருமாறு கூறினீர்களே, ஆகவே, 'கருணாமூர்த்தி' என்ற சிறப்புப் பெயரையும் மக்களின் வாழ்த்துக்களையும் கொண்டு வந்திருக்கிறேன்" எனக் கூற, ஜமீன்தாருக்கு மூக்கின் மேல் கோபம் வந்துவிட்டது! உடனே, அவர் மாதவனை வெளியேறச் சொல்லி விட்டார்.

மறுநாளே ஜமீன்தார், தாமே அவ்வூர்களுக்குப் பணம் வசூலிக்கப் போனபோது வயல்கள் காய்ந்து கிடப்பதைக் கண்டார். அப்போது உழவர்களெல்லாம் வந்து அவரை வணங்கி வாழ்த்தினர். தங்களிடமிருந்து இக்கட்டான நிலையில் பணம் வசூலிக்காமல் இருந்த அவரது கருணைக் குணத்தைப் பாராட்டினர்.

ஜமீன்தாருக்கு அப்பொழுதுதான் மாதவன் கூறியதன் உள்ளர்த்தம் புரிந்தது. அவர் தமது மனத்துக்குள்

ளேயே, "உழவர்களின் நிலை தெரியாமல் பணம் வசூலிக்க எண்ணிய நான் மனிதனே இல்லை" என எண்ணி வருந்தியவாறே தமது ஊருக்குத் திரும்பினார்.

அவர் ஊருக்குத் திரும்பியவுடனே செய்த முதல் காரியம் மாதவனைத் திரும்பவும் வேலைக்கமர்த்தியதுதான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

பொன்னகரம் என்ற ஒரு சிற்றூரில் ஓர் ஏழைக் குடும்பம் வசித்து வந்தது. அக்குடும்பத்தில் சோமு என்ற ஒரு பையனும் அவனது தாயும், தந்தையும் இருந்தனர். சோமுவின் பெற்றோர் மிகவும் நல்லவர்கள். விநாயகர் மீது பற்றுக் கொண்டவர்கள். தந்தை கூலி வேலை செய்து வந்தார். சோமுவின் தாயோ ஒருவீட்டில் வேலை செய்து வந்தாள்.

சோமு எப்போதும் சோம்பேறியாகத் திரிந்து வந்தான். பள்ளியில் ஏழாம் வகுப்புப் படித்து வந்தான். வகுப்பிலே அவன்தான் கடைசி. இதனால் அவனது பெற்றோர்கள் மிகவும் கவலை கொண்டனர். விநாயகரிடம் தினமும் முறையிட்டு அழுதனர்.

ஒரு நாள் சோமு தூங்கிக் கொண்டிருந்தான். கனவில் விநாயகர் வந்தார். அவர் சோமுவிடம், "அப்பா சோமு, உன் பெற்றோர் என்னைத் தினமும் வழிபட்டு வருகிறார்கள். அதற்குக் கைமாறாக நான் உனக்குச் சில வரங்களைத் தர விரும்புகிறேன். பெற்றுக் கொள்" என்றார்.

சோமு மிகவும் மனம் மகிழ்ந்தான். "ஐயனே! மிகவும் மகிழ்ச்சி. நான் படிக்காமலேயே வகுப்பில் தேற வேண்டும்! சமைக்காமலேயே சாப்பிட வேண்டும்! உழைக்காமலேயே எனது தந்தையார் நிலத்தில் பயிர் நன்கு விளைய வேண்டும்! இந்த மூன்று வரங்களையும் தாருங்கள்!" என்றான்.

இதைக் கேட்ட விநாயகர் சற்று யோசித்து சோமுவை நோக்கிக் கூறலானார்: "நான் உனக்கு நீ கேட்கும் மூன்று வரங்களையும் தருகிறேன். அதற்கு முன், நீ எனக்கு ஓர் உதவி செய்தாக வேண்டும். அது உன்னால் முடியுமா?" என்றார். சோமு உடனே சொன்னான்: "கடவுளே! உங்களுக்கு நான் உதவுவதா? சரி, என்ன உதவி? சொல்லுங்கள்" என்றான்.

விநாயகர் சோமுவைப் பார்த்து, "சோமு! நீ எனக்குப் பூமியில் கிணறு தோண்டாமலே நீரையும், அடுப்பு மூட்டாமலே சமைத்த சாதத்தையும் உழாமலே விதையிடாமலே பயிர் செய்த தானியத்தையும் கொண்டு வர வேண்டும்" என்றார்.

அதைக் கேட்ட சோமு, "இது என்னால் இயலாது" என்றான். உடனே விநாயகர் சோமுவிற்கு "புத்தி வந்தது" என நினைத்து அறிவுரை சொன்னார்.

"சிறுவனே! கிணறு தோண்டிய அளவிற்கு நீர் சுரக்கும்; படிக்கும் அளவிற்கு அறிவு வளரும்; உழைக்க உழைக்கவே நிலம் நன்கு செழித்து நல்ல விளைவைத் தரும். இதை நீ நன்கு தெரிந்து கொள்" என்றார் விநாயகர்.

அப்போதே சோமுவிற்குப் புத்தி வந்தது. விநாயகரும் மறைந்தார். அவனது கனவும் முடிந்து விழித்துக் கொண்டான்.

மறுநாள் சோமு தனது சோம்பேறித்தனத்தைவிட்டு ஒழித்து, நன்கு உழைத்துப் படித்தான். வகுப்பிலேயே முதல் மாணவன் ஆனான். அவனுடைய ஏழைப் பெற்றோரும் அவனது மாறுதலைக் கண்டு மனம் மகிழ்ந்தார்கள்.

விநாயகருக்கு மூவரும் நன்றி செலுத்தினார்கள்.

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்

ஆர். கோபிநாதன் (10732)

எஸ். கனகராஜ் (1174)

க. சத்யநாராயணன் (11378)



ஆர். [illegible] (16049)

ஆர். முருகன் (6607)

பி. கோவிந்தசாமி (5705)



மறதி மன்னர்களைக் கண்டுபிடியுங்கள்

'சிகாரிபுத்திரன்'

சிறந்த அறிஞர்கள், தலைவர்கள் மற்றும் விஞ்ஞானிகளில் பலர் ஞாபக மறதியிலும் தலை சிறந்து விளங்கியிருக்கிறார்கள். அவர்களில் சிலரே இங்கு கண்ட மறதி மன்னர்கள். அவர்கள் யார் யார் என்று கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்!

இவர் தலை சிறந்த விஞ்ஞானி. இன்றைய பல விஞ்ஞானிகளின் முன்னோடி இவர். இவர் ஒருநாள் வரிப் பணம் கட்டுவதற்காக, வரிகட்டும் அலுவலகத்திற்குச் சென்றார். வரிசையில் நின்று கொண்டிருந்த இவர் உடல் மட்டும்தான் அங்கு இருந்ததே

யொழிய, மனம் விஞ்ஞான சிந்தனைகளில் அலை பாய்ந்து கொண்டிருந்தது. தன்னையே மறந்திருந்த போது, அவரது முறை வந்ததும், அங்கிருந்த அலுவலர் அவரது பெயரைக் கேட்டார். அந்த விந்தை மனிதரோ தம் பெயரையே மறந்துபோய் விட்டார். எவ்வளவு ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்தும் அவரது பெயரே அவருக்கு ஞாபகம் வரவில்லை. தனக்கு வந்த கடிதங்களில் ஏதேனும் தன் வசம் இருந்தால், அதைப் பார்த்தாவது சொல்லிவிடலாம் என்று சட்டைப் பையைத் துளாவிப் பார்த்தார். ஒன்றும் அகப்படவில்லை. மிரள மிரள விழித்தார். நல்ல வேளையாக அப்போது அவருக்குத் தெரிந்த ஓர் அலுவலர் அங்கு எதேச்சையாக வந்தார். அவர்தான் இந்த விஞ்ஞானியின் பெயரை அவருக்கு நினைவுறுத்தும் படி ஆயிற்று. யார் இப்படிப்பட்ட மறதி மன்னர்... தப்பு, தப்பு... மறதிச் சக்கரவர்த்தி?

இவரும் ஒரு சிறந்த விஞ்ஞானி தான். இவரது ஒரு கண்டுபிடிப்பிற்கு மருத்துவ உலகமே இவருக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறது. இவருக்குத் திருமணம் நிச்சயமாகி, திருமண நாளும் குறிக்கப்பட்டது. அந்த நாளும் வந்தது. கோயிலில் நண்பர், உறவினர் அனைவரும் கூடி விட்டனர். மணமகளும் திருமண உடையணிந்து வந்து சேர்ந்து விட்டார். குறிக்கப்பட்டிருந்த மணவேளை



யும் வந்து விட்டது. ஆனால், மண மகனை இன்னமும் காணவில்லை. வந்திருந்தவர்கள் எல்லாரும் மனம் போனபடி பேச ஆரம்பித்துவிட்டனர். மணமகளோ பெரிதும் கலக்க மடைந்தார். இறுதியில் மணமகளின் நண்பர் மாப்பிள்ளையைத் தேடிக் கொண்டு ஓடினார். அங்குமிங்கும் தேடிக் கடைசியில் அவரைக் கண்டுபிடித்து விட்டார்! தம்முடைய திருமணத்தையும் மறந்து, அந்த மாப்பிள்ளை என்ன தான் செய்து கொண்டிருந்தார்? தன் திருமணம் மட்டுமல்ல, தன்னையே கூட மறந்து சோதனைச் சாலையில் ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடந்தார் மாப்பிள்ளை! அவசர அவசரமாக அவரை அழைத்துக் கொண்டுபோய், திருமண உடை அணிவித்துக் கல்யாணத்தை நடத்திவைத்தார். இப்படிப்பட்ட விநோதமான மறதி மன்னர் யார்?

இவர் ஒரு தலை சிறந்த ஆராய்ச்சியாளர். விஞ்ஞான உலகில் தனக்கென நிலையான ஓரிடத்தைப் பெற்றுவிட்டார். நாள்கணக்கில் தன்னை மறந்து ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடிய அறிஞர்.

ஒருநாள் இவர் உணவைக் கூட மறந்து மிகத் தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவரது வேலையாள் அவருக்கென்று உணவு கொண்டு வந்தான். அவரைத் தொந்தரவு செய்ய விரும்பாததால், கொண்டு வந்த உணவை மேஜை மேல் வைத்து மூடிவிட்டுச் சென்று விட்டான். சிறிது நேரம் கழித்து அங்கு வந்த அந்த விஞ்ஞானியின் நண்பர், தான் பசியாக இருந்ததால் அந்த உணவை உண்டு விட்டுச் சென்று விட்டார். சில மணிநேரம் கழித்துத் தான் நமது விஞ்ஞானி ஆராய்ச்சியிலிருந்து விடுபட்டு வெளியே வந்தார். வந்தவர் உணவு உண்பதற்காக மேஜை அருகே சென்றார். அங்கு தட்டுகளும் கோப்பைகளும் காலியாக இருப்பதைக் கண்டார். "சே! சே! என்ன முட்டாள் தனம்...! ஏற்கெனவே சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் சாப்பிடவந்திருக்கிறேனே...! சாப்பிட்டது கூட மறந்து விட்டது..!"

என்று சொல்லிக் கொண்டே மீண்டும் ஆராய்ச்சியில் மூழ்கிவிட்டார்! பிறகு, நண்பர் ஒருவர் வந்து சொன்ன பிறகுதான் நடந்ததே தெரிய வந்தது இவருக்கு!

இந்த மறதி மன்னர் யாரென்று கூறமுடியுமா?

இப்போது வரும் மறதி மன்னர் பெரிய எழுத்தாளர். ஒரு நாள் உலவுவதற்காக வீட்டை விட்டு வெளியே புறப்பட்டுச் சென்றார். பிறகு வெகு நேரம் கழித்து வீட்டிற்குத் திரும்பினார். கதவு தாளிடப்பட்டிருந்தது. நம் எழுத்தாளர் கதவைப் பலமாகத் தட்டினார். உள்ளே இருந்த வேலைக்காரன் யாரோ கதவைத் தட்டுகிறார்கள் என நினைத்துக் கொண்டான். உள்ளேயிருந்தபடியே, "ஆசிரியர் வீட்டில் இல்லை... வெளியே போயிருக்கிறார்" எனக் குரல் கொடுத்தான். அதைக்

கேட்டதும் எழுத்தாளர், "அப்படியா? சரி! பிறகு வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே மீண்டும் வெளியே புறப்பட்டு விட்டார்!

இவர் யாரென்று தெரியுமா உங்களுக்கு?

கடைசியாக நாம் சந்திக்கப் போகும் மறதிமன்னர் உலகப் பெருந் தலைவர்களில் ஒருவர். பல இயக்கங்களை வழி நடத்திய விடுதலை வீரர். ஒரு முறை இவர் தம் தொண்டர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது தொண்டர்களில் ஒருவர் இவரைப் பார்த்து. "ஆண்டவர் ஏழைகளிடம்

ரொட்டியில் வருகிறார்" என்ற இந்தப் பொன்மொழி யாரால் கூறப்பட்டது தெரியுமா? சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்றார். தலைவர் நீண்ட நேரம் யோசித்தார். படித்த நூல்களையெல்லாம் நினைவிற்குக் கொண்டு வந்து பார்த்தார். ஞாபகம் வரவில்லை. அந்தப் பொன்மொழி மிகவும் பழக்கப்பட்டது என்பது ஞாபகம் இருந்தாலும். அதைக் கூறியவர் பெயர் மட்டும், பலமுறை நினைவு படுத்திப் பார்த்துக் கொண்டும் ஞாபகம் வரவில்லை. கடைசியாக, "நான் தோற்று விட்டேன். யார் கூறியது என்பது நினைவுக்கு வரவில்லை. ஆனால். இந்தப் பழமொழிமட்டும்மிகவும்பழக்கப் பட்டதாக இருக்கிறது" என்று தமது தோல்வியை ஒப்புக் கொண்டார் அவர். கேள்வியைக் கேட்ட தொண்டர் பெரியதாகச் சிரித்துவிட்டு, "....ஞாபகம் வரவில்லையா...? இந்தப் பொன் மொழியைக் கூறியவர் வேறு யாருமில்லை... தாங்கள்தான்!" என்றார்.

தான் கூறிய பொன் மொழியைத் தானே மறந்து போன தரணி போற்றும் இந்தத்தலைவர் யார்? (கேள்வியைக் கேட்ட தொண்டர் யார்?)

விடைகள்

1. தாமஸ் ஆல்வா எடிசன். 2. ஜாமிபாஸ்டர். 3. சர் ஐசக் நியூட்டன். 4. ஜெஸ்ஸில் என்னும் ஜெர்மன் எழுத்தாளர். 5. மகாத்மா காந்தியடிகள். (கேள்வியைக் கேட்டவர்: கவிக்குயில் திருமதி சரோஜினி நாயுடு அவர்கள்).





பூங்காவனம்

ஊருக்குப் புதுசு!

தோட்டக்காரர்: யாரடா அவன், தென்னை மரத்தில் ஏறுகிறவன்?

ஏறியவன்: ஐயா, கோபிச்சுக்காதீங்க. நான் இந்த ஊருக்குப் புதுசு. வழி தெரியாமே ஏறிட்டேன்.

— செ. மணிமேகலை (627),
வா. வேலூர்.

பறவைகளைப் பற்றிய பழமொழிகள்

- கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடித்தாற் போல.
- காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தாற் போல.
- உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?
- கிளியை வளர்த்துப் பூனையின் கையில் கொடுப்பதா?
- கோழி மிதித்தா குஞ்சு சாகும்?
- பருந்தும் நிழலும் போல.

— ப. தினேஷ்குமார் (3321),
சென்னை — 7.



ஒரே பதில்

கமலாவும் விமலாவும் பழக்கடைக்குச் செல்கின்றனர். அப்போது அங்கு வந்த அவர்களது தோழி, கமலாவிடம், "என்ன பழம் வாங்கப் போகிறாய்?" என்று கேட்கிறாள். அதே சமயம் விமலாவிடம் "மணி என்ன?" என்றும் கேட்கிறாள். இருவருடைய பதிலும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருக்கின்றன. அப்படியானால் என்ன பதில் சொல்லியிருப்பார்கள்?

கமலா சொன்ன பதில்: ஆரஞ்சு
விமலா சொன்ன பதில்:

ஆறு. — அஞ்சு
(ஆறு மணி 5 நிமிடங்கள்)

— ச. அனுராதா, தூத்துக்குடி.

அன்னையின் அமுத மொழிகள்

* மனிதனைப் பிடிக்கும் நோய்களி

வெல்லாம் மிக மிகக் கொடியது. மோசமானது அச்சம் என்ற நோய் தான்.

* தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி மனக்கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறது.
* சத்தியமே என் கடவுள். அஹிம்சையே அதைக் காணும் சிறந்த வழியாகும்.

—சீர்காழி இரா. இராஜதுரை, சீர்காழி

ஊரின் பெயரைக் கண்டுபிடியுங்கள்

1. இவ்வூரின் பெயரைச் சொன்னாலே, அன்னை காமாட்சியின் நினைவு வரும்.
2. சந்தனமும் போண்டாவும் இவ்வூரின் பெயரிலே மணக்கும்.
3. இரண்டே எழுத்துள்ள இச்சொல் ஊரையும் குறிக்கும்: ஒரு சிற்றுண்டியையும் குறிக்கும்.

4. காரைத் தன்னகத்தே கொண்டுள்ள இவ்வூர் பூட்டுக்குப் புகழ்பெற்றது.
5. குடித்துவிட்டுக் காரை ஓட்டினால், அவருக்கு இந்த ஊர் முன் பின்னாக மாறித்தான் தெரியும்.

விடைகள்: 1. காஞ்சிபுரம், 2. மைசூர், 3. பூரி, 4. அலிகார், 5. காரைக்குடி.

— ரா. வித்யப்பிரசன்னா (16598), சென்னை — 88.

காப்பாற்றும் படகு!

கப்பல்களுக்கு எதிர்பாராமல் ஆபத்துக்கள் நேரிட்டால், பிரயாணிகளைக் காப்பாற்றுவதற்கு அதில் படகுகள் வைக்கப்பட்டிருக்கும். அவை சாதாரணப் படகுகளல்ல; என்ன புயல் அடித்தாலும் மூழ்காதபடி அமைக்கப்பட்டிருக்கும். இந்தமாதிரிப் படகுகளை முதன் முதலில் 1789 இல் கட்டியவர் ஹென்றி கிரேட்ஹெட் என்பவர்தான். தற்காலத்தில், இப் படகுகளில் ரேடியோ டெலிபோனும், ரேடியோ தந்தியும் உள்ளன.

— பா. கதிர்வேலன் (9164), வேலூர் — 6.

கோயிலும் வாயிலும்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் சுற்றுப் பிராகாரமான ஆடி வீதியில் கோயிலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டிப் பல சொற்றொடர்களை ஆங்காங்கே

கவரில் எழுதி வைத்திருக்கிறார்கள்! உதாரணத்துக்கு:

'திருக்கோயில் நமது உயிர் — அதன்
தூய்மை நமது பண்பாட்டின் பயிர்.'

'கோயிலே நமது தூய்மையின்
வாயில்.'

மற்ற கோயில்களிலும் சுத்தத்தைப் பாதுகாக்க இதேபோல் அழகாக எழுதி வைக்கலாமே!

— எம். பரமேஸ்வரன் (1961),
சென்னை — 94.

அதிசய எண்!

27720 — இது ஓர் அதிசய எண். இந்த எண்ணை ஒன்றிலிருந்து 11 வரை எல்லா எண்களும் மீதமின்றி வகுக்கும். சாமர்த்தியம் உள்ளவர்கள் இதனிலும் குறைந்த — ஒன்றிலிருந்து 11 வரை வகுக்கிற எண்ணைக் கண்டு பிடிக்கலாம்.

— ம. பிரபு (641), பரோடா.

வணக்கம் பலவிதம்

நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது கைகூப்பி வணக்கம் செலுத்துகிறோம். அது போல, பிரெஞ்சுக்காரர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது தழுவிக் கொள்கிறார்கள். அரேபியர்கள் நெஞ்சின் மேல் கையை வைத்துக் கொள்வது வணக்க முத்திரை. கையோடு கை

இணைத்து, தலை குனிவது சீனர்களின் முத்திரை. பர்மியர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் தொட்டுக் கொள்வார்கள்.

— ஜி. செல்வமுத்துதிருஞானசம்பந்தன் (6135), பண்ருட்டி.

தேன் பித்தன்



கரடிக்குத் தேன் என்றால் மிகவும் பிடிக்கும். ருஷ்ய மொழியில் கரடிக்கு என்ன பெயர் தெரியுமா? 'மெத்வேத்' — அதாவது 'தேன் பித்தன்' என்பது பொருள்.

— ஆர். கோபிநாதன் (10,735),
பெரியகுளம்.

காண்டா—மிருகச் சண்டை

தென் ஆப்பிரிக்காவிலுள்ள பெரு நாட்டில் ஒவ்வொருவருடைய மும்தடக்கும்



திருவிழாவில் காளை — பருந்துச் சண்டை நடக்கும். காளை இறந்தால் தங்களுக்கு நன்மையும், பருந்து இறந்தால் தங்களுக்குத் தீமையும் ஏற்படும் என நம்புகிறார்கள்.

— எஸ். ராஜகோபால் (3087), சென்னை — 28.

புவி ஈர்ப்புச் சக்திக்கு 300 வயது!

புவி ஈர்ப்புச் சக்திக்கு 300 வருடமாகிறது. ஆம், சர் ஐசக் நியூட்டன் புவிஈர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்தது 1687-இல்தான். அப்படியென்றால், இந்த வருடம் புவி ஈர்ப்புச் சக்திக்கு 300 வது வயதுதானே!

ஜெ. முத்துக்குமார் (16,579), கோவில்பட்டி.

பல்கலைக் கழகங்கள்	ஊர்கள்
சென்னைப் பல்கலைக் கழகம்	— சென்னை
அண்ணா பல்கலைக் கழகம்	— சென்னை
அண்ணாமலைப் பல் கலைக் கழகம்	— அண்ணாமலை நகர்
மதுரை காமராசர் பல் பல்கலைக் கழகம்	— மதுரை
காந்தி கிராம பல் கலைக் கழகம்	— காந்தி கிராமம்
விவசாயப் பல்கலைக் கழகம்	— கோவை
தமிழ்ப் பல்கலைக் கழகம்	— தஞ்சாவூர்
பாரதியார் பல்கலைக் கழகம்	— கோவை
பாரதிதாசன் பல் கலைக் கழகம்	— திருச்சி
அழகப்பா பல்கலைக் கழகம்	— காரைக்குடி
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்	— கொடைக்கானல்



— எஸ். பி. சிவகுமார் (17,870), திருச்சி — 23.

ஒரே எழுத்து

கீழே சில குறிப்புகள் உள்ளன. இந்தக் குறிப்பின் விடைகளில் ஒரு விசேஷம் என்ன என்றால், ஆரம்ப எழுத்தும் முடியும் எழுத்தும் ஒரே எழுத்தாக இருக்கும்.

1. இவர் அம்மாவின் தம்பி...
2. இவர் அப்பாவின் அப்பா...
3. சின்னக் குழந்தையை இப்படியும் அழைப்பர்...

விடைகள்: 1. மாமா; 2. தாத்தா; 3. பாப்பா.

— மு. பூபாலன் (16,595), மூஞ்சூர் பட்டு.

கேளுங்கள்;

* சமீபத்தில் என் அப்பாவுக்கு ஓர் அழைப்பிதழ் வந்திருந்தது. அதில் 16 பேர் பேசுவதாக இருந்தது. அந்தப் பதினாறு பேர்களின் ஒவ்வொருவருடைய பெயருக்கும் முன்னும், 'புரட்சிக் குயில்,' 'சிந்தனைச் செல்வர்,' 'உழைப்பின் சிகரம்' என்பன போன்ற பட்டங்கள் இருந்தன. என் அப்பாவிடம், "இந்தப் பட்டங்களையெல்லாம் யார் கொடுத்தனர்?" என்று கேட்டேன். அவர், "இந்தக் காலத்தில் யார் வேண்டுமானாலும் பட்டம் கொடுக்கலாம் என்ற மட்டமான நிலைமை வந்துவிட்டது. கொடுக்கிறவனுக்கும் தகுதி தேவையில்லை; வாங்குகிறவனுக்கும் தகுதி தேவையில்லை" என்றார். அப்பா சொல்வது சரியா?

— கே. தமிழ்ச்செல்வன், சென்னை — 20.

உன் அப்பா சொல்வது முக்காலும் உண்மையே. முன்காலத்தில் பட்டங்களுக்குப் பெருமதிப்பிருந்தது. புலமை மிகவும் தகுதி வாய்ந்த ஓர் அவையோ அதற்காகவே பட்டம் வழங்கியது. அதுவும் எளிதில் வழங்கி விடாது. அந்த அவையிலுள்ள அறிஞர்கள் பலமுறை பலவகையிலும் ஆராய்ந்து பார்த்து, "இவர் மிகவும் தகுதி வாய்ந்தவர்தாம்! இவருக்குப் பொருத்தமாக எந்த ஒரு பட்டத்தை வழங்கலாம்?" என்று பேசி முடிவு எடுப்பார்கள். அவ்வாறு வழங்கப் பெற்ற பட்டங்களுக்கு நாடு முழுதும் நல்ல வரவேற்பும் மதிப்பும் இருந்தன.

* நேரு மாமாவுக்கு எத்தனை குழந்தைகள்?

— செ. அருட்செல்வி, தஞ்சாவூர்.

இரண்டு குழந்தைகள். இந்திராவுக்குப் பின் ஓர் ஆண் குழந்தை பிறந்து, ஒரு வாரத்தில் இறந்துவிட்டது.

* நம் பிரதமராயிருந்த மொரார்ஜி தேசாய் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினாராமே, உண்மையா?

— ஆர். சேகரன், நெய்வேலி.

உண்மைதான். 1917 ஆம் ஆண்டு அவர் இந்தியப் பாதுகாப்புப் படையில் சேர்ந்து சில காலம் பணியாற்றினார். பிறகு, ராணுவத்தை விட்டு விலகி, அரசாங்க ஊழியராகப் பணியில் சேர்ந்தார். சுமார் 12 ஆண்டுகள் உதவிக்கலெக்டராகப் பணியாற்றியபின்னர் அந்தப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு, காந்திஜி தொடங்கிய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டார்.

* 'தெர்மாஸ் ஃபிளாஸ்க்' என்பதற்கு என்ன தமிழ்ப் பெயர்? அதைக் கண்டுபிடித்தவர் யார்?

— ப. சிற்றரசன், திருவல்லிக்கேணி.

'தெர்மாஸ்' என்பது கிரேக்கச் சொல். அதற்கு 'வெப்பம்' என்று பொருள். தமிழில் அதை 'வெப்பத்தடைக் குப்பி' என்று கூறுகிறார்கள். அதில் வைக்கும் பொருளின் வெப்பம் வெளியே செல்லாது. வெளியிலுள்ள வெப்பம் உள்ளேயிருக்கும் குளிர்ந்த பொருளைத் தாக்காது. வைத்தது வைத்தபடி இருக்கும்.

* சென்னை மாகாணத்தில் உள்ள இந்தி பிரசார சபா எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

— சேவி. குருநாதன், காஞ்சிபுரம்.

1918 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தலைமையில் நிறுவப்பட்டது.

* தவிட்டுப் புறா, தவிட்டுக் குருவி என்றெல்லாம் சொல்கிறார்களே, இவை தவிட்டைத் தின்று வாழ்வதால் இப்பெயர் வந்ததா?

— செ. குணவதி, விருதுநகர்.

இல்லை. தவிட்டு நிறத்தில் இருப்பதால்தான் அப்படி அழைக்கின்றனர். தவிட்டுப் புறா, மணிப் புறாக்களிலே சிறியது. கழுத்தின் இருபுறமும் வெண்மையும் கறுப்பும் கலந்திருக்கும். தவிட்டுக் குருவிக்கு நீண்ட வால் இருக்கும். வைக்கோலைப் போல் தோற்றமளிக்கும். மெல்லிய கீச்சுக்குரலில் கத்தும்.

* எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இலங்கைத் தமிழ்க் குடும்பம் ஒன்று இருக்கிறது. அந்த வீட்டுக் குழந்தைகளிடம் கூட 'நீங்கள்' 'வாருங்கள்,' 'சொல்லுங்கள்,' என்று மரியாதையாகப் பேசுகிறார்கள். ஆனால், நம் ஊரில் பெற்ற தாயைக் கூட 'நீ,' 'வா,' 'போ' என்று சொல்கிறார்களே, இது சரியா?

— செ. கனகராஜ், சென்னை — 40.

சரியில்லைதான். ஆனாலும் அதை மரியாதைக் குறைவு என்று சொல்லிவிட முடியாது. பெரியவர்கள் பேசுவதைக் கேட்டுச் சிறு வயதிலிருந்தே இப்பழக்கம் சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம். இலங்கைத் தமிழர்கள், தங்கள் குழந்தைகளிடம் 'நீங்கள்,' 'வாருங்கள்,' 'சொல்லுங்கள்,' என்று பேசுவதால்,

அந்தக் குழந்தைகளும் அதேபோல் மற்றவர்களிடம் பேசுவார்கள்; அதன் மூலம் மரியாதை செலுத்தும் பழக்கம் ஏற்படும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

• அறிஞர் அண்ணா பெரியவரா? காந்தித் தாத்தா பெரியவரா?

— பி. வி. சுந்தர், விழுப்புரம்.

ஏன் தம்பி இந்த சந்தேகம்? இருவரும் பெரியவர்கள்தான். ஆனாலும், அண்ணாவைப் போல் பல நூறு மடங்கு பெரியவர் மகாத்மா காந்தி.

• ஏகநாதர், ஏகநாதர் இருவரும் ஒருவரா? அல்லது...?

— த. சடகோபன், உடுமலைப்பேட்டை.

இருவரும் ஒருவரல்லர். ஏகநாதர் என்பவர் மகாராஷ்டிரத்தில் பிறந்த சிறந்த பக்தர்களில் ஒருவர். ஏகநாதர் யாரென்பதுதான் தெரியுமே!

• நான் சென்ற ஆண்டு நவராத்திரி சமயம் தில்லிக்குச் சென்றிருந்தேன். அப்போது ராமலீலா கொண்டாடப்பட்டது. விஜய தசமி தினத்தில் இராவணனுடைய பெரிய உருவம் ஒன்றைக் கொளுத்தினார்கள். விஜய தசமிக்கும் ராவணனுக்கும் என்ன சம்பந்தம்?

— ஆர். ராஜேஷ், சென்னை — 16.

கிருஷ்ண லீலையைப் போல் இராம லீலையை தில்லியில் மட்டுமல்ல; காசி போன்ற இடங்களிலும் கொண்டாடுகிறார்கள். நவராத்திரி முழுவதும் இராமனுடைய கதையை வேஷம் போட்டு நடத்திருப்பார்களே! இராவணனுடைய உருவத்தை மிகப் பெரிய அளவில் செய்து விழா முழுவதும் வைத்திருப்பதையும் பார்த்திருக்கலாம். நவராத்திரி முழுவதும் இராமர் இராவணனுடன் போராடி விஜயதசமியன்றுதான் இராவணனை வீழ்த்தினார் என்று அவர்கள் நம்புவதால், அன்றைக்கு இராவணனின் உருவத்தைக் கொளுத்துகிறார்கள்.

• நம் நாட்டில் மனிதர்களுக்குத்தான் சிலைகள் வைக்கிறார்கள். ஆனால், சில வெளிநாடுகளில் வாயில்லா ஜீவன்களுக்குக் கூட சிலைகள் வைத்திருப்பதாக என் நண்பன் கூறுகிறான். உண்மையாக இருக்குமா?

— க. தேவநாதன், கூத்தனூர்.

நண்பன் சொல்வது உண்மைதான். ரோம் நகரிலே இறந்த ஒரு நாய்க்குச் சமாதி அமைத்து, அந்தச் சமாதியின் மேல் தங்கத்தால் அதன் சிலை ஒன்றைச் செய்து வைத்திருக்கிறார்களாம். அமெரிக்காவில் கான்ஸாஸ் நகரில் 100 அடி உயரத் தூண் மீது தங்கக் காளையின் சிலை வைக்கப்பட்டிருக்கிறதாம். ஜப்பானில் 'செம்மீன் கோயில்' என்ற ஒரு நினைவுச் சின்னத்தை தோட்டக்காரர்கள் நிறுவியிருக்கிறார்களாம். வாயில்லாத அந்த ஜீவன்கள் செய்த உதவியால் முன்னேறியவர்கள் அந்தச் சிலைகளை அமைத்துத் தங்கள் நன்றிக் கடனைச் செலுத்தியதாகக் கூறுகிறார்களாம்.

• தார் பாலைவனம் இப்போது பாகிஸ்தானில் இருக்கிறதா? இந்தியாவில் இருக்கிறதா?

— ப. சோமநாதன், வல்லம்பட்டி.

இரண்டிலும் இருக்கிறது. பாகிஸ்தானில் ஒரு பகுதியும் இந்தியாவில் ராஜஸ்தானத்தில் ஒரு பகுதியுமாக இருக்கின்றது. வடமேற்கு இந்தியாவில் ஆரவல்லி மலைக்கும் சிந்து நதிக்கும் இடையிலுள்ள மணற்பாங்கான இடம் அது.

கடவுளைக் கண்டவர்கள்

தாய நாயனாரைத் தடுத்த கை

தேவி நாச்சியப்பன்

வானத்தைப் பார்த்தவாறு, 'மழை மேகத்தையே காணோமே!' என்ற வருத்தத்துடன் அமர்ந்திருந்தார் நாயனார். உட்கார்ந்து கொண்டிருந்தால் காரியம் நடவாது என்று நினைத்தவராக எழுந்து வயல்வெளிகளைப் பார்த்த வண்ணம் நடந்தார். 'அதோ... அந்த நிலத்தில் செந்நெல் பயிரிடப்பட்டுள்ளதே. ஆமாம், அது யாருடைய நிலமாக இருக்கும்...? ம், அருகில் சென்றுதான் பார்ப்போமே' என்று தமக்குத் தாமே கூறியபடி அருகில் சென்றார். 'அட, நம் நல்லானின் நிலம்தான் இது' என்று வாய்விட்டுக் கூறியபடி நல்லானின் வீட்டை நோக்கி நடந்தார். நல்லானிடம், "ஏதாவது வேலையிருந்தால் கொடு. செய்கிறேன். அதற்குக் கூலியாக எனக்குச் செந்நெல் வேண்டும்," என்றார்.

நல்லானும், தாயனாரும் ஒரே வேளாண் குலத்தில் பிறந்த விவசாயிகள்தான். நல்லானுக்குத் தாயனாரைப் பற்றி நன்கு தெரியும். தாயனார் நிலபுலன்களுடன் வசதியாக வாழ்ந்தவர். தினமும் கோவிலில் இறைவனுக்குச் செந்நெல்லும், செங்கீரையும் மாவடுவும் நைவேத்தியத்திற்கு எடுத்துச் சென்று கொடுப்பார். பாவம், அவருக்குச் சோதனையான நேரம். அவர் வயல் வானம் பார்த்த பூமி. மழையின்றி வறுமையில் வாடுகிறார். இந்த நிலையிலும் இறைவனுக்குக் குறை வைக்கவில்லை. ஆங்காங்கே கூலி வேலை செய்து, கிடைக்கும் கூலியை செந்நெல்லாகத் தரும்படி வேண்டி இறைவனுக்கு நைவேத்தியம் செய்து வந்தார். இவற்றை எல்லாம் அறிந்து வைத்திருந்த நல்லான் அவருக்கு வேலை கொடுத்தான். செய்து முடித்ததும் செந்நெல்லைக் கூலியாகக் கொடுத்தான்.

தாயனார் மிக்க மகிழ்ச்சி கொண்டு அச்செந்நெல்லும் செங்கீரையும், மாவடுவும் கொண்டு இறைவனுக்கு நைவேத்தியம் செய்தார்.

இப்படியாகப் பல வயல்களில் வேலை செய்து வந்தார். கூலியாகக் கிடைக்கும் செந்நெல்லை இறைவனுக்கும், கார் நெல்லைத் தன் உணவிற்கும் வைத்துக் கொண்டார். இறைவனின் சோதனையால் ஊர் முழுவதும் செந்நெல்லாகவே விளைந்தது. அதனால், தாயனாருக்குச் செந்நெல் மட்டுமே கூலியாகக் கிடைத்தது. கார் நெல்லே விளையவில்லை. இவர் அதற்காகக் கலங்கவில்லை. மகிழ்ச்சியுடன் எப்போதும் போல் செந்நெல் முழுவதையும் இறைவனுக்குப் படைத்துவிட்டுப் பட்டினியாக இருந்தார். தாயனாரின் மனைவியோ கணவரின் செய்கை கண்டு கலக்கமுற்றார். தோட்டத்தில் உள்ள கீரைகளைப் பறித்துச்சமைத்துவைத்தார். கீரையை மட்டும் உண்டு வாழ்ந்தார்.

கற்பனைச் சவாரி

அண்ணன் தோளைத் தொட்டு நடந்தால்,
அதுவே நாங்கள் ஓட்டும் ரயில்!

தோட்டக் கதவில் கம்பி பிடித்துத்
தொங்கு சவாரி, அது மோட்டார்!

வீட்டின் மேசை மீதே நாங்கள்
'விர்விர்' என்போம், அது டாக்ஸி!

சுருட்டிய படுக்கை மேலே இருப்போம்,
துரத்தி அடிப்போம், அது குதிரை!

மாடிப் படியின் பிடியில் சறுக்க,
மனத்தில் அதுவே என் ராக்கெட்!

— தம்பி சீனிவாசன்

தாயனார் எத்தகைய துன்பத்திலும் கூலி வேலை செய்வதை நிறுத்தவில்லை. பட்டினியுடன் வேலை பார்த்தார். ஏன்? அப்போதுதான் இறைவனுக்குச் செந்நெல் படைக்க முடியும் என்பதால். அவ்வாறு செந்நெல், செங்கீரை, மாவடு மூன்றையும் தலையில் வைத்து எடுத்துக் கொண்டு கோயில் நோக்கிச் சென்றார். கோடை வெயிலோ கடுமையாக இருந்தது. மண் தரை எல்லாம் நீரற்று வறண்டு பாளம் பாளமாக வெடித்திருந்தன. தாயனார் பசியினாலும், தள்ளாமையாலும் கண்கள் இருண்டு வர மயங்கி விழுந்தார். விழுந்த சில நொடிகளில் தம்மைச் சமாளித்துக் கொண்டு எழுந்தார். "அய்யோ! இறைவனுக்கு அமுது படைக்காத பாவியாகி விட்டேனே! அனைத்தும் இப்படிச் சிதறி விட்டனவே! என்ன செய்வேன்?" என்று புலம்பினார். கீழே சிதறியவை அனைத்தும் உருண்டோடி மண் வெடிப்புகளில் சென்று மறைந்து விட்டன!

'இறைவனுக்கு நைவேத்தியம் செய்யக் கூடத் தகுதியற்றவனாகி விட்டேனே!' என்று மனம் நொந்து, 'நான் வாழ்வதில் பயனில்லை' என்று கூறியபடி தாயனார் இடையில் செருகி இருந்த கருக்கரிவாளைக் கொண்டு தன் கழுத்தை வெட்டிக் கொள்ள முடிவு செய்தார். வாளை ஓங்கினார்.

அப்போது ஓர் அதிசயம் நடந்தது. மண் வெடிப்புக்களில் இருந்து ஒரு திருக்கரம் தோன்றி தாயனாரின் அரிவாள் ஏந்திய கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியது. அதே சமயம் பிளவுகளுக்குள் சென்ற மாவடுவை 'வடுக், வடுக்' என்று கடிக்கும் சத்தமும் கேட்டது! 'கைமூலம் காட்சி தந்து மாவடுவைக் கடித்தவன் இறைவனே!' என்பதை அறிந்து கொண்டார் தாயனார். அவரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

முயற்சியில் தளராத இந்தத் தாயனார்தான் அரிவாள் தாய நாயனார், அரிவட்டாய நாயனார் என்றெல்லாம் சேக்கிழாரால் பாடப்பட்டவர்'

விசித்தி!



யானைச் சவாரி!

நேப்பாளம் விமான நிலையத்தில் இறங்கும் உல்லாசப் பிரயாணிகள் டாக்ஸியிலும் ஊர் சுற்றிப் பார்க்கலாம், யானைமேல் ஏறிக் கொண்டும் ஊர் சுற்றிப் பார்க்கலாம்! ஆனால், டாக்ஸியை விட யானையைத்தான் பலரும் விரும்புகிறார்கள்! நேப்பாளத்தில் யானைகள் அதிகம்.

ஒன்றில் பதினைந்து!

ஆப்பிளில் பல வகைகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் செக்கோஸ்லோவாகியாவில் ஒருவர் ஆராய்ச்சி செய்து, ஒரே ஆப்பிள் மரத்தில் 15 வகையான ஆப்பிள் பழங்களை விளையச் செய்திருக்கிறார். தோற்றமும் வேறு வேறு; ருசியும் வேறு வேறு!

பூச்சிகளை விரட்டும் கழுத்துப் பட்டி

நாய், பூனை போன்ற செல்ல வளர்ப்புப் பிராணிகளுக்கு உண்ணிகளும் தெள்ளுப் பூச்சிகளும் தொல்லை கொடுக்கும். அந்தப் பூச்சிகளை விரட்ட ஒரு மின்னணுக் கழுத்துப் பட்டியை அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கிறார்கள். பிராணியின் கழுத்தில் இந்தப் பட்டியைக் கட்டி விட்டால், அதிலிருந்து கிளம்பும் 'அதிவேக ஒலி அலைகள்' பூச்சிகளை அண்ட விடாமல் விரட்டி விடுகின்றன. அந்த ஒலி அலைகள் பூச்சிகளுக்கு மட்டும்தான் கேட்கும்!

சிறுவனின் அதிசய சக்தி

சவூதி அரேபியாவில், ரியாத்தில், 'ஹமடென் அசெய்ரி' என்னும் 10 வயதுச் சிறுவன், நீர் வளம் இருக்கும் இடங்களை மிக எளிதாகக் கண்டுபிடித்து விடுகிறான். வறண்ட சவூதி அரேபியாவில், பூமிக்கு அடியில் இதுவரை 150 நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறான் இந்தச் சிறுவன். இவனது இந்த அபூர்வ சக்தியை அரேபிய அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளுகிறது!

ச் செய்திகள்

சிறுவனின் பாராசூட்



ஜெர்மனியில் 5 வயதுச் சிறுவன், ஒரு பெரிய பிளாஸ்டிக் பையை முதுகில் கட்டிக் கொண்டு மூன்றாவது மாடியிலிருந்து கீழே குதித்தான். கடையில் பொருள்கள் போட்டுத் தரும் பிளாஸ்டிக் பை அது! அவன் குதிக்கும் போது பிளாஸ்டிக் பை பாராசூட் போல விரிந்து கொண்டது. அச்சிறுவன் தரையில் இறங்கி விட்டான். ஆனால், வேகமாகத் தரையில் இறங்கியபோது கால் எலும்பு முறிந்து விட்டது. ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்து விட்டு அந்த மாதிரிச் செய்ததாக அவன் சொன்னான். 'இது மாதிரி ஆபத்தான விளையாட்டுக்களைப் பற்றி ஏன்தான் எழுதுகிறார்களோ?' என்று வருத்தப்பட்டார் அவன் அப்பா.

பரிசை விரும்பாதவர்

கோலாலம்பூரில் 'பெட்டாலிங் ஜயா' என்னும் 29 வயது இளைஞருக்கு அரசு நடத்திய 'லாட்டரி'யில் ரூ. 3½ லட்சம் பரிசு விழுந்தது. ஆனால், அதைப் பெற்றுக் கொள்ள அவர் மறுத்து விட்டார். அவர் சொன்ன காரணம்? "ஏதோ ஒரு சபலத்தில் லாட்டரிச் சீட்டை வாங்கினேன். ஆனால், சூதாட்டம் என்பது இஸ்லாமிய விதிகளுக்கு எதிரானது என்பதால், அந்தப் பரிசுத் தொகையை வாங்கிக் கொள்ள மாட்டேன்!". இத்தனைக்கும் வீடு கட்டியதில் அவருக்குக் கடன் வேறு இருந்தது! பரிசுத் தொகையை லாட்டரி நிறுவனம் அரசாங்க நிதி இலாகாவில் ஒப்படைத்து விட்டது!

பாம்பைத் தின்று நஞ்சை இறக்கியவர்.

ஆப்பிரிக்காவில் தன்னைத் தீண்டிய நாகத்தை அடித்துக் கொன்று, பச்சையாக அதைத் தின்று விஷத்தை இறக்கிக் கொண்டார் 30 வயது கிராமவாசி ஒருவர்! 'நான் பாம்பைத் தின்னும் வழக்கமுடையவனல்ல. ஆனால், விஷ முறிவுக்குத் தீண்டிய நாகத்தையே தின்பது ஒரு மருந்து என்று கேள்விப்பட்டிருந்தேன்' என்றார் அவர்!

—ஆழி—

சர் ஜகதீச சந்திரபோஸ்

மேடம் கியூரி

செடி கொடிகளுக்கும் உயிர் உண்டு; உணர்ச்சி உண்டு என்ற உண்மையைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தவர் சர். ஜகதீச சந்திரபோஸ். 20 வது வயதில் பி. ஏ. பட்டம் பெற்ற இவர், லண்டன் சென்று அங்கும் பி.ஏ. பட்டமும், பிறகு டி. எஸ்ஸி பட்டமும் பெற்றார்.

அப்போது, இவர் லண்டனில் பௌதிக இயலிலும், உடல் இயலிலும் செய்து வந்த ஆராய்ச்சிகளைப் பேராசிரியர்கள் பாராட்டி, லண்டன் ராயல் சொஸைட்டியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இவரது முதல் ஆராய்ச்சி மின்சாரக் கதிர்ப்பு (Electric radiation) என்னும் பொருள் பற்றியதாகும். ராயல் சொஸைட்டி இவரது ஆராய்ச்சிகளை வெளியிட்டதோடு, இவரது ஆராய்ச்சிக்குப் பொருள் உதவியும் செய்தது.

இந்திய அரசாங்கம் அளித்த பொருள் உதவியைக் கொண்டு கல்கத்தாவில் 'போஸ் ஆராய்ச்சிக் கழகம்' நிறுவினார்.

இவர் கண்டுபிடித்த கிரெஸ்கோகிராப் (Crescograph) என்ற கருவி தாவரத்தின் வளர்ச்சியை ஒரு கோடி மடங்கு பெரிதாக்கிக் காட்டக் கூடியது. 1902 ஆம் ஆண்டு டில்லியில் நடந்த தர்பாரில் இவருக்கு சி. ஐ. ஈ. பட்டமும் 1917 இல் நைட் (Knight) பட்டமும் வழங்கப்பட்டன. அதன் பிறகு ராயல் சொஸைட்டி உறுப்பினராகத் (F.R.S.) தேர்ந்தெடுக்கப்பட்டார். 'பௌதிக விஞ்ஞானி' என்று உலகமே இவரைப் புகழ்ந்தது.

உலகிலே மிகப் பெரிய பரிசு நோபல் பரிசு என்பார்கள். அந்தப் பரிசை கணவன், மனைவி, மகள் — ஆக ஒரே குடும்பத்தில் மூவர் பெற்றனர்! அவர்களிலும் மனைவியானவர் இரு முறை நோபல் பரிசு பெற்றார்!

போலந்து நாட்டைச் சேர்ந்தவர் மாடம் கியூரி. இவரது இயற்பெயர் மாரி ஸ்க்லொடோவ்ஸ்கா என்பது. இவருடைய தந்தையார் ஒரு விஞ்ஞான ஆசிரியராயிருந்தார். தந்தையின் பரிசோதனைச் சாலையில் அவருக்கு இவர் உதவி செய்து வந்ததால், இவருக்கும் விஞ்ஞான ஆர்வம் ஏற்பட்டது. தனது 22-வது வயதில் பாரிஸிற்கு வந்து பியெர் கியூரியின் மாணவியாகச் சேர்ந்தார். பிறகு, அவரையே மணம் செய்து கொண்டார். இருவரும் சேர்ந்து ஆராய்ச்சிகள் நடத்தினர்.

இவர்கள் இருவரும் சேர்ந்து ரேடியத்தைக் கண்டுபிடித்ததற்காக இவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பெற்றது. ஒரு நாள் பியெர் கியூரி நண்பர்களுடன் விருந்துண்டு வீடு திரும்பும்போது, அவர் மீது வண்டி ஏறி, அவர் உயிர் துறந்தார். கணவனை இழந்த கியூரி அம்மையார் மனம் கலங்கினாலும், ஆராய்ச்சியை நிறுத்தவில்லை. ரேடியத்தையும் கதிர் இயக்கத்தையும் தொடர்ந்து ஆராய்ந்தார். இதனால் இவருக்கு இரண்டாவது முறை நோபல் பரிசு வழங்கப்பெற்றது. இவருடைய மகளாகிய ஐரீன் கியூரியும், செயற்கைக் கதிரியக்கம் உண்டாக்கும் முறையைக் கண்டுபிடித்து நோபெல் பரிசு பெற்றார்!

கோகுலம்
விடுமுறைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

3, 4, 5 — வகுப்புகள்

குருவன் கதை

ஜெ. உதயா

சரஸ்வதி கவிதை

மெ. இ. ஏஞ்சலின் பாபு

கண்ணன் ஓவியம்

நா. சரவணக்குமார்

6, 7, 8 — வகுப்புகள்

ஆஞ்சநேயர் கதை

ஏ. சிவகாமி

வ. உ. சி. கவிதை

பி. நாகபாலசுப்பிரமணியன்

பக்தர்களுடன் விஷ்ணு ஓவியம்



ரா. தரங்கிணி

9, 10, 11, 12 — வகுப்புகள்

ஜோதி கட்டுரை

அ. வெங்கட்ராமகணேஷ்

செங்கோல் முறை செய்த சோழன் கவிதை

க. தட்சிணாமூர்த்தி

இராமர் பட்டாபிஷேகம் ஓவியம்

ஆர். காமாட்சி

- ரா. தரங்கிணியின் முகவரி: D/o. வி. ராஜாராம், மேற்குத் தெரு, மகாதான புரம் — 639 106.

சாரல்

பபபப பரவசமூட்டியது!

• காந்தியின் புகைப்படத்தை வெளியிட்டு, முதல் பக்கத்திலே அவரது பெருமைகளையும் எடுத்துக் கூறி எங்கள் அறிவைத் தெளிவாக்கிய கோகுலத்திற்கு ஆயிரம் நன்றிகள்.

— எஸ். ராஜா, குத்தாலம்.

• தீபாவளிப் புதுமொழிகள் அழகான சிரிப்பு வெடிகள்.

— ஏ. எஸ். மாரியப்பா, புதுக்கோட்டை — 1.

• காந்தியைப் பற்றிக் கூறிய தாங்கள் அக்டோபர் 2 ஆம் தேதி பிறந்த லால் பகதூர் சாஸ்திரியையும், அன்று மறைந்த காமராஜரையும் மறந்தது ஏனோ தெரியவில்லை.

— இராதாகிருஷ்ணன், வாணியம்பாடி.

(1983 அக்டோபர் இதழைப் பார்க்கவும். — ஆசிரியர்.)

• 'உலகத்தை ஒன்று சேர்த்த குழந்தை' போன்ற கவிதைகளே இன்று மிகமிகத் தேவை. அற்புதமான இக்கவிதையைப் புனைந்த குழந்தைக் கவிஞரை எப்படிப் போற்றுவேன்?

— எஸ். சாந்தகுமாரி, வேலூர் — 1.

• ஒரு ஏழைக் குழந்தையின் கதையைப் படித்துப் பரவசமடைந்தேன். பாலப் பெரியவரின் சரித்திரத்தை இவ்வளவு தெளிவாக வெளியிட்டது கோகுலம் ஒன்றுதான் என்று கூற வேண்டும்.

— சீர்காழி சாமா, சீர்காழி.

• திரு குண்டுமணி அவர்களின் விளையாட்டுக் கட்டுரைகளும், இளம் விளையாட்டு வீரர்கள் பற்றிய விவரங்களும் எங்களுக்கு ஊக்கம் அளிக்கின்றன. தொடரட்டும் விளையாட்டுச் செய்திகள்.

— அ. இரவீந்திரன் (13,761), குஞ்சன்விளை.

• 'ரத்னபாலா' ஆசிரியர் கே. ஆர். வாசுதேவன், 'புல்டால்' ஆசிரியர் பரசுராமய்யர் ஆகிய இரு குழந்தை எழுத்தாளர்கள் மறைந்த செய்தியை கோகுலம் வாயிலாகத்தான் அறிந்தோம். கோகுலத்துடன் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள் சார்பில் நானும் அஞ்சலி செலுத்துகின்றேன்.

— எஸ். லதா (398), தாட்டரசன் கோட்டை.

• திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குழந்தைப் பருவம் மிகவும் நன்றாக இருந்தது. இதுவரை திரு சத்தியமூர்த்தி அவர்களின் மகள் என்று தெரியாத எங்களுக்கு அவர்களின் குழந்தைப் பருவத்தின் மூலம் அறியும்படி செய்த கோகுலத்திற்கு நன்றி.

— டி. எஸ். ஜெயந்தி (17,779), இராசராஜபுரம்.

• பட்டாசா?
பட்சணமா?
பட்டாடையா?
படி என்றால்
பரவசமூட்டியது.

— பி. எஸ். ஸ்ரீதர் (7036), சங்கர்நகர்.

• 'திருப்பெருந்துறை' புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியின் தஞ்சை மாவட்டத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

— க. செந்தில் அரசு, சிவகங்கை — 1.

(உண்மைதான். முன்பு அது தஞ்சை மாவட்டத்தில் இருந்தது. பிறகு புதுக்கோட்டை மாவட்டம் ஏற்பட்டதும் அதில் சேர்க்கப்பட்டது. — ஆசிரியர்.)

• 'மாதவன் மனம் மாறினான்' கதை அருமையிலும் அருமை. இந்தக் கதையைப் படித்த என் தம்பி திருந்திவிட்டான். அவன் இப்போதெல்லாம் எங்கள் அம்மாவைத் தொந்தரவு செய்வதே இல்லை.

— ச. வெற்றிச்செல்வன், திருப்பராய்த்துறை.

• பாரதியார், கவிதைகள் புனைவதில்தான் வல்லவர் என்று நினைத்தேன். ஆனால், அவர் கதைகள் எழுதுவதிலும் சிறந்தவர் என அறிந்து கொண்டேன்.

— ஆர். பாலாஜி (7438), புத்தனம்பட்டி.

• முட்டை ஓட்டினால் பொம்மை செய்யும் முறை மிகவும் அருமை. நான் முட்டை ஓடு ஒன்றைக் கொண்டு பொம்மை செய்து மகிழ்ந்தேன்.

— க. பிரபுசங்கர் (16,021), புதுப்பேட்டை.

• காவியன் அவர்கள் எழுதிய 'காந்தி என்னும் தீபம்' காந்தியக் கட்டுரை இதயத்தில் ஏற்றி வைத்தது.

— இரா. குழந்தை, வெள்ளிப்பாளையம்.

• 'கடவுளைக் கண்டவர்கள்' என்ற தலைப்பில் தேவி நாச்சியப்பன் எழுதும் ஆன்மிகக் கதைகளின் மூலமாகப் பல்வேறு ஆன்மிகப் பெரியார்களைப் பற்றி அறிந்து கொண்டோம்.

— ஸ்ரீவேல் சரவணன் (14,362), பழநி — 2

காணாமல் போன நேரு!

குழந்தைக் கவிஞர்

மாலையில் ஒருநாள் நேருவை வீட்டில்
காணோம், காணோமே!
மாளிகை முழுதும் தேடிப் பார்த்தும்
காணோம், காணோமே!
சோலையில் எங்கும் சுற்றிப் பார்த்தும்
காணோம், காணோமே!
சுறுசுறுப் பாகத் தேடிப் பார்த்தும்
நேருவைக் காணோமே!

காவலர் எங்கும் தேடிப் பார்த்தும்
காணோம், காணோமே!
கலக்கினர் டில்லி நகரம் முழுவதும்
காணோம், காணோமே!
தீவிர மாகப் பலரும் தேடியும்
காணோம், காணோமே!
தெரிந்தவர்க் கெல்லாம் டெலிபோன் செய்தும்
நேருவைக் காணோமே!

எந்த நிகழ்ச்சியும், அந்தச் சமயம்
இல்லை; அதனாலே
"எங்கே சென்றார்? எங்கே சென்றார்?"
என்றே கேட்டனரே.
வந்தவர் போனவர் காதில் இந்தச்
செய்தி விழுந்திடவே,
மாநகர் எங்கும் காட்டுத் தீபோல்
பரவிட லானதுவே!

காவலர் பலரும் நகரம் முழுவதும்
தேடிப் பார்த்திடவே,
கடைசியில் நேருவைக் கண்டு பிடித்தனர்;
கண்டு பிடித்தனரே!
ஆவல் பொங்கப் பூங்கா ஒன்றில்
குழந்தைகள் நடுவினிலே
அட்டா, நேரு இருந்தது கண்டு
அசந்தே போயினரே!

மழலை மொழியைக் கேட்டுக் கேட்டு
மகிழ்ச்சியில் மூழ்கினரே.
மறந்தனர் இந்த உலகம் யாவையும்
மறந்தே போயினரே,
குழந்தைகள் அந்தப் பூங்கா நடுவில்
கூடிப் பாடிடவே
குஷியாய் நேருவும் குழந்தை போலவே
ஆடிப் பாடினரே.

கோடை வெயிலைப் போன்றது என்றும்
அரசியல் உலகம்தான்.
குளுகுளு தென்றல் காற்றைப் போன்றது
குழந்தைகள் உலகம்தான்.
தேடிவந்தார் குழந்தைகள் உலகைத்
திருட்டுத் தனமாக.
தெரிந்தது நேருவின் குழந்தை உள்ளம்
தெள்ளத் தெளிவாக!

— 'நேரு தந்த பொம்மை'
என்ற புத்தகத்திலிருந்து.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக இருந்து உதவியவர்கள்:

ஓவியர் வினு

[illegible]

[illegible] (ரேவதி)

[illegible]

[illegible]

கராத்தே கற்கும் சிறுமி

கோகுலம்

கராத்தே தற்காப்புக்காகப் பயன்படுத்தப்படும் அற்புதக் கலை. ஜப்பானிலிருந்து தோன்றி இந்தக் கராத்தே அகில உலகமும் விரும்பிக் கற்கும் தற்காப்புக் கலையாக இன்று வளர்ந்திருக்கிறது. ஆடவர்களோடு இன்று பெண்களும் இந்த நவீன கராத்தேயினைக் கற்று முரடர்களிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்குப் பயன்படுகிறது. கராத்தேயில் பயிற்சி பெற்றவர்களுக்கு, பச்சை, பழுப்பு, கறுப்பு பெல்ட் அவர்களது பயிற்சித் திறமைகளுக்கேற்ப வழங்கப்படுகிறது. இன்று பள்ளி மாணவ மாணவிகளும் பல கராத்தே பயிற்சி நிலையங்களில் கற்றுக் கொள்வதால் உடல் ஆரோக்கியத்துக்கும் இந்தக் கலை உதவுகிறது. 'சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய வேண்டும்?' ஆகவே ஆரோக்கியமான உடலுக்கு உதவும் கராத்தேயை இளம் வயதிலேயே கற்றுக் கொண்டு தற்காப்புக்கும் இரவில் பயமின்றிச் செல்ல உதவுவதால் அனைவருமே சிறுவர் சிறுமியர்கள் எல்லோரும் கற்றுக் கொள்ளலாம். தேர்ந்த பயிற்சியாளரிடம் கராத்தே கற்றுக் கொள்ளும் சிறுமி ஒருத்தி இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறாள். கராத்தே சிறுமியை வண்ணப்படமாகத் தருபவர்: போகர்.

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: [illegible] ராஜேந்திரன்.

நிர்வாக காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: [illegible]

ஆசிரியர் குழு அலுவலகம்: 38, [illegible] ரோடு, [illegible], நுங்கம்பாக்கம், சென்னை—600 034.



சர் ஜகதீச சந்திரபோஸ்

இனிய
நேரங்கள்
மனதிலே
பதிந்து
இனிப்புடன்
கலந்திட...
nutrine Chocolate Eclairs
...நியூட்ரின்
சாக்லேட்
எக்லேர்ஸ்
நியூட்ரின்
nutrine
Chocolate
Eclairs